சென்னை மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட CUG செல்போன்களுக்கு M/s. BSNL நிறுவனத்தின் சேவை ஜூலை 2007 முதல் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு தீர்மான எண் 263, நாள் 28–05–2007 – மற்றும் மன்ற தீர்மான எண் 274/2010, 22–06–2010 இன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது செல்போன் அழைப்புகளுக்கான சலுகை கட்டணம் குறைவாக உள்ளதால், இது தொடர்பாக மின் துறையால் 02.01.13 மற்றும் 28.2.2013 நாளிட்ட கடிதத்தின் மூலமாக M/s. BSNL நிறுவனத்திற்கு செல்போன் அழைப்புகளுக்கான கட்டணத்தை தற்போதைய சந்தை கட்டணத்திற்கு ஏற்ப குறைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

திருவாளர் பாரத் சன்சார் நிகம் லிமிடெட் 01.03.2013 மற்றும் 21.03.2013 ஆணையருக்கு அனுப்பிய கடிதத்தில் சென்னை மாநகராட்சி கேட்டுக் கொண்டதற்கு இணங்க கட்டணங்களை குறைத்துள்ளதாகவும், குறைந்த கட்டணங்களை ஏற்கும் பட்சத்தில் ஐந்து வருட காலத்திற்கு (CUG) சேவையை தொடர்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளது. நிறுவனத்தின் சேவைகள், தற்போதுள்ள கட்டணம் மற்றும் குறைக்கப்பட்ட கட்டணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Sl.No.	Description	Existing Rate	New Rate applicable
1	Plan charges	Rs.149	Rs149
2	Free Talk Time~	100 minutes	500 Minutes
3	CUG Talk Time	Unlimited	Unlimited
4	Pulse rate	60 Sec	60 Sec
5	Calls beyond Free Calls (With in BSNL Network)	Rs.0.49 p per minute	Rs.0.20 per minute
5	Calls Outside BSNL Network (Other Operator Network)	Rs, 0.49 P per minute	Rs.0.30 per minute
6	STD	Rs.1.00 Per minute	Rs.0.50 per minute
7	SMS	Free 200 with other network Un limited with in CUG	Un limited with in CUG 0.60 P per SMS outside CUG

மன்ற தீர்மான எண் 653/2007 நாள் 13–12–2007 மற்றும் நிலைக்குழு (வருவாய் வ.வி.ம.நி.) தீர்மான எண் 94/08 நாள்– 12–06–2008ன் படி உயர் அலுவலர்களுக்கு உச்ச வரம்பு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. M/s. BSNL நிறுவனம் Talk time 100 நிமிடத்தில் இருந்து 500 நிமிடத்திற்கு அதிகரித்து உள்ளதாலும் மற்றும் Talk time call charges மேற்கண்டவாறு குறைத்திருப்பதால் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு தொகையை கீழ்கண்டவாறு குறைக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

வ. எண்	அலுவலர்களின் பதவி	துறை	அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு தொகை	உத்தேசிக்கப்பட்ட உச்சவரம்பு தொகை
01.	வணக்கத்திற்குரிய மேயர்	மன்றத்துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
02.	துணை மேயர்	மன்றத்துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
03.	ஆணையாளர்	பொதுத்துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
04.	இணை ஆணையர் (சுகாதாரம்)	சுகாதாரத்துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
05.	இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி)	வருவாய்த் துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
06.	இணை ஆணையர் (கல்வி)	கல்வித்துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
07.	துணை ஆணையர் (பணிகள்)	பணிகள் துறை	உச்சவரம்பு இல்லை	உச்சவரம்பு இல்லை
08.	வார்டு உறுப்பினர்கள் (மொத்தம் 200 நபர்கள்)	மன்றத் துறை	ரூ.500/–	ரூ.300/–
09.	தலைமைப் பொறியாளர் (பொது)	தலைமைப் பொறியாளர் அலுவலகம்	ரூ.1000/–	ரூ.500/–
10.	தலைமைப் பொறியாளர் (கட்டிடம்)	கட்டிடத் துறை	ரூ.1000/–	ரூ.500/–

11.	உதவி ஆணையர் (பொ.நி.ம.ப)	பொதுத்துறை	ரூ.1000/–	ரூ.500/–
12.	நகரப் பொறியாளர்	பணித்துறை	ரூ.1000/–	ரூ.500/–
13.	மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத்துறை	(நிலம் மற்றும் உடைமைத்துறை	ரூ.1000/–	ரூ.500/–
14.	நிதி ஆலோசகர்	நிதி நிர்வாகப் பிரிவு	ரூ.1000/–	ரூ.500/–
15.	வருவாய் அதிகாரி	வருவாய்த் துறை	ரூ.1000/–	ரூ.500/–
16.	சுகாதார அதிகாரி	சுகாதாரத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
17.	சட்ட அலுவலர்	சட்டத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
18.	பொது மக்கள் தொடர்பு அதிகாரி	பொது மக்கள் தொடர்பு துறை	ரூ.1200/–	ரூ.600/–
19.	விழிப்பு அலுவலர்	விழிப்புத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
20.	விழிப்பு ஆய்வாளர்	விழிப்புத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
21.	மேற்பார்வை பொறியாளர் (பாலங்கள்)	பாலங்கள் துறை	ரூ.1000/–	ரூ.500/–
22.	மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்)	கட்டிடத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
23.	மேற்பார்வை பொறியாளர் (திட்டம் மற்றும் ஆய்வு)	பணித் துறை	ரூ.1000/–	ரூ.500/–
24.	மேற்பார்வை பொறியாளர் (திடக் கழிவு மேலாண்மைத் துறை)	திடக்கழிவு மேலாண்மைத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
25.	மேற்பார்வை பொறியாளர் (மழை நீர் வடிகால் துறை)	மழை நீர் வடிகால் துறை	ரூ.1000/–	ரூ.500/–
26.	மேற்பார்வை பொறியாளர் (இயந்திரத் துறை)	இயந்திரத் பொறியியல் துறை	ரூ.1000/–	ரூ.500/–
27.	மேற்பார்வை பொறியாளர் (மின் துறை)	மின்சாரத் துறை	ரூ.1000/–	ரூ.500/–
28.	மேற்பார்வை பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை)	பேருந்து சாலைகள் துறை	ரூ.1000/–	ரூ.500/–
29.	மண்டல அலுவலர்கள் 1 முதல் 15 வரை)	சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள்	ரூ.1000/–	ரூ.500/–
30.	மண்டல செயற் பொறியாளர்கள் மண்டலம் 1 முதல் 15 வரை .கூடுதல் மண்டல செயற் பொறியாளர்கள்	சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள்	ரூ.500/–	ரூ.300/–
31.	துறைச் சார்ந்த செயற் பொறியாளர்கள்	சம்பந்தப்பட்ட துறைகள்	ரூ.500/–	ரூ.300/–
32.	கோட்ட மின் பொறியாளர்கள் வடக்கு, தெற்கு, மையம் மற்றும் தலைமயிடம்	மின்சாரத்துறை	ரூ.500/–	ரூ.300/–
33.	கூடுதல் வருவாய் அலுவலர்	வருவாய்த்துறை	ரூ.500/–	ரூ.300/–
34.	கூடுதல் சுகாதார அதிகாரி	சுகாதாரத் துறை	ரூ.500/–	ரூ.300/–
35.	கூடுதல் சட்ட அலுவலர்	சட்டத் துறை	ரூ.500/–	ரூ.300/–
36.	கல்வி அதிகாரி	கல்வித் துறை	ரூ.500/–	ரூ.300/–
37.	மன்றச் செயலாளர்	மன்றத் துறை	ரூ.500/–	ரூ.300/–

சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்டதை தொடர்ந்து புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 3 மண்டலங்களுக்கான இணை/துணை ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கான தற்பொழுது வழங்கப்படும் உச்ச வரம்பு தொகையை வழங்கவும் கருதப்படுகிறது.

மேலும் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் கீழ்கண்ட அலுவலர்களுக்கு உச்ச வரம்பு தொகையை நிர்ணயம் செய்யவும்,

வ. எண்	அலுவலர்களின் பதவி	துறை	உத்தேசிக்கப்பட்ட உச்சவரம்பு தொகை
01.	நேர்முக உதவியாளர்/DRO	மன்றத்துறை	உச்சவரம்பு இல்லை
02.	செயற்பொறியாளர்/உதவி செயற்பொறியாளர்	மன்றத்துறை	1000
03.	தாசில்தார்	மன்றத்துறை	500
04.	ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளர்கள்	பொதுத் துறை	300
05	அனைத்து துணை ஆட்சியர் (Deputy Collector)		300

தற்பொழுது உள்ள CUG சேவையின் எண்கள் நிலையான வரிசையாக இல்லாததால், CUG எண்களை முறையாக (மன்ற உறுப்பினர்கள் தவிர) மாற்றி அமைக்கவும், CUG சேவையை தற்பொழுது உபயோகித்து வரும் அலுவலர்களுடன் சேர்த்து கீழ்கண்ட

- அனைத்து பொறியாளர்கள்
- அனைத்து சுகாதார ஆய்வாளர்கள்
- முதுநிலை பூச்சியாளர்கள்
- பூங்கா ஒவர்சிர்
- அனைத்து தலைமை கணக்கு அலுவலர்கள்/ கணக்கு அலுவலர்கள்
- மின்துறையில் உள்ள மின் ஆய்வாளர்கள்
- புதிதாக தோற்றுவிக்கப்படும் சம நிலையில் உள்ள பதவிகளுக்கு வழங்கவும்

மேற்கண்ட இனங்கள் ஏற்கப்படின்
கீழ்கண்ட செயற்குறிப்புகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

- BSNL நிறுவனம் கொடுத்து இருக்கும் குறைக்கப்பட்ட விலை விகிதங்களின் அடிப்படையில், இந்நிறுவனத்தின் சேவையை தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும்
- தற்பொழுது உள்ள CUG சேவையின் எண்கள் நிலையான வரிசையாக இல்லாததால், CUG எண்களை முறையாக வழங்கவும் (மன்ற உறுப்பினர்கள் தவிர) மாற்றி அமைக்கவும்
- தற்பொழுது நடைமுறையில் உள்ள CUG வாடகை கட்டணத்தை பொதுத்துறை மூலமாக மாதந்தோறும் BSNL நிறுவனத்திற்கு செலுத்தவும்,
- டாப் அப் தொகையினை சம்மந்தப்பட்ட துறை/மண்டல அலுவலர்கள் செலுத்தி கொள்ளவும்
- ஐந்து வருட காலத்திற்கு (CUG) சேவையை தொடர்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என நிறுவனத்தின் சேவை தன்மையை பொறுத்து, துறை தலைவரின் அனுமதியுடன் ஒரு வருட அடிப்படையில், தேவைப்படும் காலம் வரை சேவையை நீட்டிக்கவும்
- CUG சேவையினை தற்பொழுது உபயோகித்து வரும் அலுவலர்களுடன் சேர்த்து கீழ்கண்ட
  - அனைத்து பொறியாளர்கள்
  - அனைத்து சுகாதார ஆய்வாளர்கள்
  - முதுநிலை பூச்சியாளர்கள் / மண்டல பூச்சியாளர்
  - பூங்கா ஒவர்சியர்
  - அனைத்து தலைமை கணக்கு அலுவலர்கள்/ கணக்கு அலுவலர்கள்
  - மின்துறையில் உள்ள மின் ஆய்வாளர்கள்
  - புதிதாக தோற்றுவிக்கப்படும் சம நிலையில் உள்ள பதவிகளுக்கு வழங்கவும்

தேவைகேற்ப அவ்வப்பொழுது CUG SIM CARD, BSNL நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மேற்கண்ட குறிப்புகளுக்கு முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. அனுமதி ஏற்க்கபடின், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின்தீர்மான எண்.156/2013 நாள்.17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 184/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

க.து.ந.க.எண் : தொ.ப.நி / 067 / 2011

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.198/2013 பொருள் எண்:21

கல்வித்துறை – தொழிற் பயிற்சி நிலையத்தில் – பயிலும் மாணவர்களுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதை போன்று இலவச பேருந்து பயண சலுகை பெற அரசின் கடிதத்தின்படி அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின்அனுமதி

அரசு போக்குவரத்து துறைக்கு சென்னை மாநகராட்சி அனுப்பிய கடித எண்: க.து.ந.க.எண்: தொ.ப.நி/067/2011 நாள்.02.10.2011 மற்றும் நினைவூட்டுக் கடிதம் நாள். 04.01.2012–ன்படி அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையத்தின் செயல்பாட்டிற்கான அரசாணை, அங்கீகாரம் மற்றும் சேர்க்கை விபரங்களை தெரிவித்து அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாநகர பேருந்தில் முழுமையான இலவச பேருந்து பயண சலுகை வழங்கியதை போல சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் மாநகர பேருந்தில் இலவச பேருந்து பயண சலுகையினை வழங்க அரசின் ஆணை வேண்டி அரசு முதன்மைச் செயலாளர் போக்குவரத்து துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், இது குறித்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் கடிதம் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களுக்கும் 15.05.2012 அன்று வழங்கப்பட்டது.

இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடமிருந்து அரசு கடித எண் :15157/மா.ந.1/2012–1 நாள்:21.09.2012 மற்றும் நினைவூட்டுக் கடிதம் நாள் 10.12.2012 ஆகிய இரண்டு கடிதங்கள் பெறப்பட்டது. இக்கடிதத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வீட்டில் இருந்து தொழிற் பயிற்சி நிலையம் சென்று வர இலவச பேருந்து பயணச் சலுகையினை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் அளிக்கப்பட்டுள்ளதால் அத்துறைக்கு மேற்காணும் செயற்குறிப்பினை போக்குவரத்து துறை மாறுதல் செய்தது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை இச்செயற்குறிப்பு குறித்து வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் இயக்குநரை கலந்தாலோசித்தது. தனியார் தொழிற் பயிற்சி நிலையமாக கருதப்படும் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாநகர பேருந்தில் 50ரூபாய் பயணக் கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளதை போல் இலவச பேருந்து சலுகையாக மாற்றி வழங்குவதால் ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியே ஏற்கும் பட்சத்தில் இலவச பேருந்து சலுகை வழங்கலாம் என வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், இது தொடர்பான வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநரின் கருத்தின் மீது சென்னை மாநகராட்சியின் செயற்குறிப்பினை விரைவில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் நினைவூட்டுக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு முழுமையான இலவச பேருந்து பயண சலுகை வழங்கிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் அரசாணை எண்:57 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு (எஸ்–1) துறை நாள்:05.04.2010–ன் படி 21,322 மாணவர்களுக்கு ஆகும் செலவினம் ரூ.3.84 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி உத்தேசமாக ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1800/- அரசுக்கு செலவினம் ஆகிறது. சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்க அரசுக்கு ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியே ஏற்கும் பட்சத்தில் தொழிற்பயிற்சி நிலைய அங்கீகாரத்தின்படி 250 மாணவர்களுக்கும் ரூ.1800/- வீதம் ஆகும் மொத்த செலவினம் ரூ.4.5 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்கள் தேர்வு மற்றும் செலவீனம் குறித்த அரசாணை எண் : 292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-3) துறை நாள்: 06.08.2004. மற்றும் இவ்வரசாணைக்கு திருத்தம் வழங்கிய அரசு கடிதம் எண்:36789/MC-3/2007–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 06.11.2008ன் படி கீழ்காணும் திருத்திய ஆணை அளிக்கப்பட்டிருந்தது.

AMENDMENT

"The Corporation of Chennai will fund the entire expenditure of the Industrial Training Institute and to pay Time Scale instead of consolidated pay on contract basis to the staff as per the Government norms from the fund of Chennai Corporation."

திருத்தம்

" சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது."

இந்த அரசாணைகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் பணியாளர்கள் ஊதியம், பயிற்சி பாடப் பிரிவுகளுக்குத் தேவையான செய்முறை கருவிகள் மற்றும் உபகரணங்கள் நாள்தோறும் செய்முறை பயிற்சிக்கு தேவையான நுகர்பொருட்கள் பயிற்சி மாணவர்களுக்கு கடந்த ஆண்டு முதல் முற்றிலும் கட்டணம் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்துடன் கடந்த வருடம் முதல் வருடத்திற்கு ஒரு முறை விலையில்லா சீருடை பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இச்செலவினங்களை போன்று சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறும் வகையில் இலவச பேருந்து பயணத்திற்கு NCVT அங்கீகாரத்தின்படி சேர்க்கை செய்யும் மாணவர்களுக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்து அரசுக்கு கடிதம் அனுப்ப நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.09/2013, நாள்.16.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> ''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 159/2013 நாள்.19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

வ.து.ச.கூ.ந.க.எண்.எம்3/4015/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.199/2013 பொருள் எண்.22

வருவாய்த் துறை – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பின்படி சமுதாய கூடத்திற்கு தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்குவது – வட்டார குழுவின் பரிந்துரை –நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான சமுதாயக் கூடங்களில் நிகழ்ச்சிகளை நடத்திடத் தேவையான மேஜை, நாற்காலிகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் ஆகியவை Transperancy in Tender Act-ன்படி 30.05.2013 க்குள் கொள்முதல் செய்து வழங்க கீழ்காணும் அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

வ.எண்.	வட்டார குழு அலுவலர்கள்	வடக்கு வட்டார அலுவலகம்	மத்திய வட்டார அலுவலகம்	தெற்கு வட்டார அலுவலகம்
1.	மண்டல அலுவலர்	மண்டலம்–5	மண்டலம்–8	மண்டலம்–13
2	செயற்பொறியாளர்	வடக்கு வட்டார அலுவலகம்– EE-1	மத்திய வட்டார அலுவலகம்– EE-1	தெற்கு வட்டார அலுவலகம்– EE-1
3.	துணை ஆட்சியர்	மண்டலம்–5	மண்டலம்–8	மண்டலம்–13
4.	உதவி வருவாய் அலுவலர்	மண்டலம்–5	மண்டலம்–8	மண்டலம்–13

முன்பு, வரிசை எண்.2ல் வட்டார குழு அலுவலர்களாக மண்டலம்–5, 8 மற்றும் 13–ல் பணிபுரியும் செயற்பொறியாளர்கள் நியமிக்க அனுமதி பெறப்பட்டிருந்தது. தற்போது வட்டார அலுவலகங்களில் பணிபுரியும் செயற்பொறியாளர் – EE–1–ஐ வட்டார குழு அலுவலர்களாக நியமிக்க முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

இதற்காக ஒரு சமுதாய கூடத்திற்கு தேவையான அடிப்படைத் தளவாடப் பொருட்களை வாங்க சுமார் 2.92 லட்சம் செலவாகும் எனவும் மொத்தம் 50 சமுதாய கூடத்திற்கு தோராயமாக ரூ.146 லட்சம் செலவாகும் தொகைக்கு தேவையான நிதியினை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்யவும் ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக 22.03.2013 மற்றும் 28.03.2013 ஆகிய நாட்களில் குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. 28.03.2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் இனங்களின் மீது மேல் நடவடிக்கை தொடரலாம் என முடிவெடுக்கப்பட்டது.

- சமுதாய கூடங்களுக்கு தேவையான கொள்முதல் செய்யப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் அவற்றின் அளவு, எடை விவரம், கொள்ளளவு, பொருளின் தன்மை மற்றும் அதற்குண்டான வரி விகிதம் போன்ற இனங்கள் விவரமாக டெண்டர் விடும்போது தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.
- ஒவ்வொரு சமுதாயக் கூடத்தின் பரப்பளவு, நபர்கள் அமருவதற்கான கொள்ளளவு மற்றும் விருந்து மண்டப பரப்பளவு மற்றும் கொள்ளளவு ஆகியவற்றை ஆய்வு செய்து அவற்றை பரிசீலித்து அதனடிப்படையில் தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்யப்பட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.
- மேலும், ஒரு சமுதாய கூடத்திற்கான தேவையான தளவாட பொருட்களின் உத்தேச விலை ரூ.5 இலட்சம் தேவைப்படும் என குழு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. தற்போதுள்ள 51 சமுதாய கூடங்களுக்கு தேவையான உத்தேச செலவுத் தொகை ரூ.255.00 லட்சம் ஒதுக்கீடு செய்ய முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் முடிவெடுக்கப்பட்டது.
- சமுதாய கூடத்திற்குத் தேவையான தளவாட பொருட்களை வட்டார அலுவலக அளவிலேயே கொள்முதல் செய்யப்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. மண்டல அலுவலர்கள் 5, 8, 13 முறையே வட, மத்திய, தென் வட்டாரங்களில் ஒப்பம் கோர வேண்டும்.

சமுதாய கூடத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் அவற்றின் அளவு, எடை விவரம், கொள்ளளவு, பொருளின் தன்மை மற்றும் அதற்குண்டான வரி விகிதம் போன்றவற்றை பரிசீலித்ததில், ஒரு சமுதாய கூடத்திற்கு தேவையான அடிப்படைத் தளவாடப் பொருட்களை வாங்க சுமார் 5.00 லட்சம் செலவாகும் எனவும், சென்னை மாநகராட்சியில் 51 சமுதாய கூடத்திற்கு தேவைப்படும் தளவாட பொருட்களுக்கு தோராயமாக ரூ.255.00 லட்சம் செலவாகும் தொகைக்குண்டான நிதியினை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்யக் கோரலாம்.

1) இதற்கான நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி மூன்று வட்டார அலுவலகங்களின் மூலம் ஒப்பம் கோரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன் அனுமதி வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2) மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே ஒப்பம் இறுதி செய்து ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க வட்டார / துணை / இணை ஆணையர்களுக்கு அறிவுரை வழங்கவும்,
3) இந்த ஒப்பந்தத்தினை ஒவ்வொரு நிலையிலும் துணை / இணை ஆணையர்கள் மூலம் கண்காணிக்கவும் மற்றும் பணியின் நிலையினை உடனுக்குடன் தெரிவிக்கவும்;
4) சென்னை மாநகராட்சியின் 51 சமுதாய கூடத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள் வாங்க தோராயமாக ரூ.255.00 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ள தொகைக்கு தேவையான நிதியினை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்யவும்,
5) சமுதாய கூடத்திற்குத் தேவையான தளவாட பொருட்களை வட்டார அலுவலக அளவிலேயே கொள்முதல் செய்யவும்,

எனவே, மேற்கண்ட 1 முதல் 5 வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.158/2013 நாள்.19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்2/226/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.200/2013 பொருள் எண்:23

மண்டலம்–10 வார்டு–134 உள்ள சமுதாய நலகூடத்திற்கு டீசல் ஜெனரேட்டர் பயன்பாட்டிற்கு பெறப்பட்டுள்ளது – டீசலுக்கான தொகையை உபயோகதாரரிடம் வசூலிக்க அனுமதி

உதவி கோட்டப் பொறியாளர் (மின்சாரம்) மண்டலம்–10 அவர்களின் குறிப்பில் 62.5 கிலோ வாட் மின்சக்தி கொண்ட டீசல், ஜெனரேட்டர் வார்டு–134 ல் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கார் சமுதாய நல கூடத்திற்கு 14.08.2012 அன்று நடந்த வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண்.646 ல் ஒப்புதல் பெறப்பட்டு ரூ.9,60,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பில் மண்டல மின்துறையால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது எனவும் இந்த டீசல் ஜெனரேட்டர் பொது மக்களின் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட உள்ளதால் இதற்குண்டான செலவு மற்றும் Guarantee Period க்கு பிறகு ஆண்டு பராமரிப்புக்கு ஆகும் செலவை எதிர் கொள்ளவும் வாடகையாக பொது மக்களிடமிருந்து பெறுவதற்கு ஒப்புதல் வேண்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வார்டு–134 மண்டல குழு தலைவர், மண்டலம்–10 அவர்கள் ஏழை எளியோர் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்த தன் சொந்த செலவில் சுமார் ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சம்) செலவில் கோட்டம்–134 ல் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கார் சாலை சமூதாய நலகூடத்திற்கு வேண்டிய பாத்திரம், மேஜை, நாற்காலி மற்றும் இதர பொருட்களை நன்கொடையாக 22.03.2011 அன்று வழங்கியுள்ளார். அப்பொருட்களை பொது மக்களிடமிருந்து வாடகை பெறாமல் இலவசமாக சென்னை மாநகராட்சி வழங்கி வருகிறது என்றும் அதே போல மின்சார தடையை கருத்தில் கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் பரிந்துரையின் மீது வார்டு–134ல் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கார் சமுதாய நலகூடத்திற்கு டீசல் ஜெனரேட்டர் வாங்கப்பட்டுள்ளது எனவும் அந்த ஜெனரேட்டருக்கு வாடகை வாங்கும் எண்ணம் இருந்தால் வாடகை வாங்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் சென்னை மாநகராட்சி இலாப நஷ்டம் கணக்கில் வியாபாரம் செய்யும் நிறுவனம் அல்ல எனவும் மக்கள் சேவையும் நலனுமே முக்கியம் எனவும் எனவே, ஜெனரேட்டருக்கு வாடகை வசூலிக்கும் எண்ணம் இருந்தால் அதனை தவிர்த்து விடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வார்டு குழு தீர்மானத்தில் மண்டலம் 10, வார்டு 134ல் உள்ள டாக்டர் அம்பேத்கார் சமூக நலக்கூடத்திற்கு டீசல் ஜெனரேட்டர் பயன்பாட்டிற்கு பெறப்பட்டுள்ளது. இந்த ஜெனரேட்டருக்கு வாடகை நிர்ணயம் செய்ய வேண்டாம் எனவும், மற்றும் ஜெனரேட்டர் பயன்படுத்துவோர் டீசல் மட்டும் அவர்கள் சொந்த செலவில் போட்டுக் கொள்ள வேண்டும் எனவும் நிலைக்குழு (வ.வி.(ம) நி)யின் மூலம் மன்றத்தின் அனுமதி பெற 12.03.2013 அன்று நடைபெற்ற 10வது மண்டல வார்டு குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

எனவே 10வது வார்டு குழு தலைவர் அவர்களின் கோரிக்கையின் மீதும் உதவி கோட்ட மின்பொறியாளர் அவர்களின் குறிப்பின் மீதும் கீழ்காணும் இனங்களின் மீதும் ஆணை வேண்டப்படுகிறது.

1. டாக்டர் அம்பேத்கார் சாலையில் உள்ள சமூக நலகூடத்திற்கு ரூ.9,60,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) செலவில் வாங்கப்பட்டுள்ள 62.5 KVA DG.Set டீசல் ஜெனரேட்டரினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கவும்.
2. ஜெனரேட்டரை இலவசமாக வழங்கும் போது ஏற்படும் டீசல் செலவினை பொது மக்கள் தங்களது சொந்த செலவில் போட்டுக் கொள்ளவும்.
3. உத்தரவாத காலத்திற்க்கு (Guarantee Period) பின்னர் ஜெனரேட்டர்க்குண்டான ஆண்டு பராமரிப்பு செலவினை மண்டல மின்துறை மூலம் மேற்கொள்ளவும்
4. உதவி கோட்ட மின்பொறியாளர் அவர்களால் ஜெனரேட்டரின் அன்றாடம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும்

மேற்காணும் 1 முதல் 4 வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 157/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

சு.து.கா.பி.ந.க.எண்.அ1/ 437/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையரின் 08.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.201/2013 பொருள் எண்.24

வளர்ப்பு பிராணிகளை விற்பனை செய்யும் கடைகளுக்கு உரிமம் வழங்குதல்

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்கள் தலைமையில் 19.03.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வளர்ப்பு பிராணிகளை விற்பனை செய்யும் கடைகளை முறைப்படுத்தி உரிமம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் கீழ்க்காணும் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

பிராணிகள் துயர் துடைப்பு விதிகள் 1960 (Prevention of Cruelty to Animals Act 1960) பிரிவு 38–ன்படி வளர்ப்பு பிராணிகளை விற்பனை செய்யும் கடைகளுக்கான விதிகள் 2010 உருவாக்கப்பட்டுள்ளது.

வளர்ப்பு பிராணிகள் விற்பனை கடைகள் என்பது உயிருள்ள வளர்ப்பு பிராணிகளான நாய்கள், பூனைகள் , பறவைகள் மற்றும் மீன் வகைகளை உள்ளடக்கி அவற்றை காட்சிப் பொருளாகவோ அல்லது விற்பனைக்காக கடைகளிலோ, பொது இடங்களிலோ அல்லது வாராந்திர சந்தைகளிலோ வைத்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபடுத்துதல் ஆகும்.

வளர்ப்பு பிராணிகள் விற்பனை கடைகள் தொழில் ரீதியாக ஆரம்பிக்க உரிய உரிமம் பெற மனுதாரர் குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் விண்ணப்பித்து அதன் நகலினை பிராணிகள் நல வாரியத்திற்கும் (Animal Welfare Board of India) அளிக்க வேண்டும்.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையினர் விண்ணப்பதாரர்களின் கடைகளை கள ஆய்வு செய்து உரிய விதிமுறைகளின்படி தேவையான இடவசதி, கழிவு நீர் வடிகால் வசதி, காற்றோட்ட வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றனவா என்று உறுதிப்படுத்திய பிறகு வருவாய்த்துறைக்கு உரிய சான்றிதழ் அனுப்பி வருவாய்த் துறை மூலம் விண்ணப்பதாரர்களின் கடைகளுக்கு உரிமம் வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. மேலும், விண்ணப்பதாரர் பிராணிகள் நல வாரியத்திடமிருந்தும் உரிய சான்றிதழ் பெற்று அதனை பொதுசுகாதாரத்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலும், எல்லா நிபந்தனைகளும் பூர்த்தியானபிறகு வளர்ப்பு பிராணிகள் விற்பனை கடைகளை ஆரம்பிக்க, உரிமத் தொகையான இரண்டு ஆண்டுகளுக்கான கட்டணம் ரூ.5000/–ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். மேலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உரிமத்தை புதுப்பிக்க உரிய விண்ணப்பத்துடன் ரூ.1000/–ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் வளர்ப்பு பிராணிகள் விற்பனை கடைகள் துவங்க உரிய தொகை ரூ.5000/–ஐ உரிமக் கட்டணமாகவும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க ரூ.1000/–ஐ புதுப்பித்தல் கட்டணமாகவும் நிர்ணயித்து மண்டல சுகாதார அலுவலர்களின் கள ஆய்வு பரிந்துரை அறிக்கை, பிராணிகள் நல வாரிய சான்றிதழ் மற்றும் கடை அமைந்துள்ள இடத்தின் தன்மை குறித்த அறிக்கையினை மண்டலம் / பகுதி உதவி செயற் பொறியாளர் அவர்களிடமிருந்து பெற்று வருவாய் துறை மூலம் உரிமம் வழங்கலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கூறிய பரிந்துரைகள் மீது மன்றத்தின் மேலான ஒப்புதல் கோரியும், மன்றத்தின் தீர்மான விவரங்களை தமிழ்நாடு அரசிதழ் (T.N.Govt. Gazette) மற்றும் நாளிதழ்களில் வெளியிட்டு ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படின் அவற்றைப் பரிசீலித்து மன்றத்திற்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று, மன்றத் தீர்மான விவரங்களை அரசின் மேலான பார்வைக்கு சமர்ப்பித்து ஆணை பெற்று நடைமுறைப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் பெற நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் (வ (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ 12.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.26/2013, நாள்.12.04.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 150/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

வ.து.ந.க.எண் ஜி3/1685/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.202/2013 பொருள் எண்: 25

வருவாய்த் துறை – தொழில் உரிமம் – வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் வளர்ப்பு பிராணிகள் பராமரிப்புக்கு பயன்படும் பொருட்கள் விற்பனை ஆகிய இனங்களுக்கு தொழில் உரிமம் வழங்கி உரிமக் கட்டணம் வசூலிக்க அனுமதி வேண்டி

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் தலைமையில் 19.3.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் வளர்ப்பு பிராணிகளின் பராமரிப்புக்கு பயன்படும் பொருட்கள் விற்பனை செய்தல் ஆகிய இனங்களுக்கு தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயித்து தொழில் உரிமம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் கீழ்க்காணும் விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுப் பொருட்கள் தயாரிப்பு விற்பனை மற்றும் அவற்றின் பராமரிப்புக்குப் பயன்படும் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் நடைமுறையிலுள்ள தொழில் உரிமம் வழங்கப்படும் வணிக நிறுவனங்கள் / தொழிற் கூடங்களின் பட்டியலில் இடம் பெறாததால் அவற்றிற்கு இதுவரை தொழில் உரிமம் வழங்கப்படவில்லை.

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மேற்கூறிய வணிக நிறுவனங்களை நடைமுறையிலுள்ள தொழில் உரிமம் வழங்கப்படும் வணிக நிறுவனம் / தொழிற்கூடங்களின் பட்டியலில் சிறுகுடிசைத் தொழில்கள் பிரிவின் கீழ் சேர்த்து 1000 சதுர அடிகள் வரை பரப்பளவு உள்ள கட்டடத்தில் இயங்கும் கடைகளுக்கு ரூ.2000/–மும், 1000 சதுர அடிகளுக்கு மேல் பரப்பளவு உள்ள கட்டடங்களில் இயங்கும் கடைகளுக்கு ரூ.5000/– என உரிமக் கட்டணம் நிர்ணயித்து தொழில் உரிமம் வழங்கலாம் எனவும்,

தொழில் உரிமம் வழங்க மண்டல சுகாதார அலுவலர் அவர்களால் கள ஆய்வு செய்து வழங்கப்படும் கடையின் சுகாதார பரிந்துரை அறிக்கையும் மற்றும் நிறுவனம் அமைந்துள்ள இடத்தின் தன்மை (Zonal Permissibility) குறித்து அறிக்கையை மண்டலம் / பகுதி உதவி செயற்பொறியாளர்களின் பரிந்துரை அறிக்கையும் பெற்று தொழில் உரிமம் வழங்கலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை மற்றும் வளர்ப்பு பிராணிகளைப் பராமரிக்கப் பயன்படும் பொருட்கள் விற்பனை செய்யும் வணிக நிறுவனங்களை நடைமுறையிலுள்ள வணிக நிறுவனம் / தொழிற்கூடங்களின் சிறுகுடிசைத் தொழில்கள் பிரிவின் கீழ் சேர்த்து 1000 சதுர அடி வரை பரப்பளவுள்ள கட்டடங்களில் இயங்கும் நிறுவனங்களுக்கு ரூ.2000/– உரிமக் கட்டணமாகவும், 1000 சதுர அடிக்கு மேல் பரப்பளவுள்ள கட்டடங்களில் இயங்கும் நிறுவனங்களுக்கு ரூ.5000/– உரிமக் கட்டணமாகவும் நிர்ணயித்து மண்டல சுகாதார அலுவலர்களின் கள ஆய்வு பரிந்துரை அறிக்கை மற்றும் மண்டலம் / பகுதி உதவி செயற்பொறியாளர்களின் கடை அமைந்துள்ள இடத்தின் தன்மை குறித்த அறிக்கையும் பெற்று தொழில் உரிமம் வழங்கலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கூறிய பரிந்துரைகளை மன்றத்தின் மேலான பார்வைக்குச் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று அதன் விவரங்களை தமிழ்நாடு அரசிதழ் (T.N.Govt.Gazette) மற்றும் செய்தித் தாள்களில் வெளியிடவும் இது குறித்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படின் அவற்றைப் பரிசீலித்து மன்றத்திற்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று மன்றத் தீர்மான விவரங்களை அரசின் மேலான பார்வைக்குச் சமர்ப்பித்து ஆணை பெற்று நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 133/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

வ.து. ந.க. எண் எம்4/6534/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.203/2013 பொருள் எண். 26

சென்னை மாநகராட்சி – வருவாய் துறை – வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வது – காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையரால் தேர்வு செய்யப்பட்ட இடங்கள்– தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி

மன்றத் தீர்மான எண் 493/12 நாள் 29.10.2012ன்படி சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறை கூடுதல் ஆணையர் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட 361 இடங்களை வாகன நிறுத்தம் செய்வதற்கான இடங்களாக அறிவிக்கவும், சட்ட விதிகளின்படி வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியால் ஏற்கனவே 145 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையரால் தேர்வு செய்யப்பட்ட 361 இடங்கள் ஆக மொத்தம் 506 இடங்களை மண்டல வாரியாக பிரிக்கப்பட்டு வாகன நிறுத்தக் கட்டணம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் மேற்கொள்ள வேண்டும் என ஆணையரின் செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர் 11 குறிப்பின்படி (1) பூந்தமல்லி நெடுஞ்சாலை, மாதர்வேடு ஆசிரியர் பயிற்சி கூடம் அருகில் உள்ள இடம் சென்னை மாநகராட்சிக்கு அப்பாற்பட்ட எல்லையில் உள்ளது. (2) பூந்தமல்லி நெடுஞ்சாலை, நெற்குன்றம், பெருமாள் கோவில் தெரு, (3) நெற்குன்றம் கனரா வங்கி முன்பக்கம், (4) மதுரவாயல் வெங்கடேஸ்வரா நகர் இவ்விடங்கள் போக்குவரத்து நெரிசல் எப்பொழுதும் இருப்பதால் வாகன நிறுத்தத்திற்கு ஏற்ற இடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மண்டல அலுவலர் 14 அவர்களின் குறிப்பில் கண்டுள்ள அட்டவணையில், கிழக்கு கடற்கரை சாலையில், 1. கொட்டிவாக்கம், வீடியோ போன் கடை முன்புறம், 2. பாலவாக்கம் கார்ப்பரேஷன் வங்கி எதிர்புறம், 3. கிழக்கு கடற்கரை சாலை, கொட்டிவாக்கம் ஸ்டூடன்ட் ஒளி நகலகம் முன்புறம், 4. வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள (அ) பாலாஜி பல் மருத்துவ கல்லூரி, நாராயணபுரம் எதிர்புறம், (ஆ) 189 மற்றும் 190 கோட்ட அலுவலகம் அருகாமையில், பள்ளிக்கரணை (இ) பாப்புலர் மாருதி ஷோ ரூம், பள்ளிக்கரணை (ஈ) பள்ளிக்கரணை அரசு உயர்நிலைப்பள்ளி அருகில் இச்சாலைகள் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது என்பதால் பரிந்துரை செய்யவில்லை. மேலும் நங்கநல்லூர் 2வது பிரதான சாலை மண்டலம் 12ஐ சார்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 145 இடங்களில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு (தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தைச் சார்ந்த வசூல் பணியில் ஈடுபடும் ஊழியர்களின் ஊதியம் மற்றும் நிர்வாக செலவுகள் போக மீதமுள்ள தொகையில் 70 விழுக்காடு சென்னை மாநகராட்சியும் 30 விழுக்காடு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகமும் பகிர்ந்தளிக்கப்படுகிறது) வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு 31.03.2013 வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி வாகன நிறுத்தக் கட்டணம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள் மண்டல அலுவலகங்களில் உள்ள வார்டு கமிட்டி மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு உத்தரவு வழங்க வேண்டி மண்டலங்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு 145 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு 31.3.2013 உடன் முடிவடைய உள்ளதாலும், மண்டலங்களின் மூலமாக காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையாளரால் தேர்வு செய்யப்பட்ட 361 (8 இடங்களைத் தவிர்த்து) இடங்களை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தின் மூலம் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்ய மண்டல அலுவலகங்களின் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற மேலும் காலதாமதம் ஏற்படும் என்ற காரணத்தினால் வருவாய்த் துறை தலைமையிடத்திலேயே 498 இடங்களுக்கும் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சியால் ஏற்கனவே 145 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையரால் தேர்வு செய்யப்பட்ட 361 இடங்கள் ஆக மொத்தம் 506 இடங்களில் போக்குவரத்து நெரிசல் உள்ள 3 இடங்கள், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த 4 இடங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டுள்ள 1 இடம் ஆக 8 இடங்களைத் தவிர்த்து மீதமுள்ள 498 இடங்களிலும் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியினால் ஏற்கனவே 31.3.2013 வரை வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்க தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு வழங்கப்பட்ட 145 இடங்களுக்கு மேலும் ஒரு மாதம் 1.4.2013 முதல் 30.4.2013 வரை கால நீட்டிப்பு வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையரால் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 361 இடங்களில் 8 இடங்கள் நீங்கலாக 353 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் 1.4.2013 முதல் 30.4.2013 வரை தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின்படி வசூல் செய்வதற்கு வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. காவல் துறை போக்குவரத்து கூடுதல் ஆணையரால் தேர்வு செய்யப்பட்ட 361 இடங்களில் 8 இடங்கள் நீங்கலாக 353 இடங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அல்லது நீக்கம் செய்ய நேரிட்டால் இது குறித்து வட்டார இணை / துணை ஆணையர் அலுவலகங்களின் மூலமாக மேல் நடவடிக்கை தொடர்வதற்கு அனுமதியும்
4. 1.5.2013 முதல் 31.3.2014 வரை 11 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து 498 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் வசூல் செய்வதற்கு அனுமதியும்,
5. 1.4.2013 முதல் 31.3.2014 வரை 498 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கும், வசூல் செய்யப்படும் தொகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தைச் சேர்ந்த வசூல் செய்யும் பணியில் ஈடுபடும் ஊழியர்களின் ஊதியம் மற்றும் நிர்வாக செலவுகள் போக மீதமுள்ள தொகையில் 70 விழுக்காடு சென்னை மாநகராட்சிக்கும், 30 விழுக்காடு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகமும் பிரித்துக் கொள்ளவும் மற்றும் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும் அனுமதி வழங்குவதற்கு,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள நிபந்தனைகளுக்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 134/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

ம.அ.1/ம.சு.அ/ந.க.எண்.எச்1/1711/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 11.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.204/2013 **பொருள் எண்.27**

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்கு ஒப்பந்த முறையில் ஆண் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி

சென்னை மாநகராட்சி மண்டலம்–1 (திருவொற்றியூர்) 26.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 14 கோட்டங்கள் உள்ளடங்கியதாகும். இக்கோட்டங்களில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 70,300. இந்த மண்டலத்தில் 32 கிலோ மீட்டர் நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 9 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களும் உள்ளது. மேலும் 5215 மேல் நிலை தொட்டிகளும், 1182 கீழ்நிலைத் தொட்டிகளும், 6826 கிணறுகளும் உள்ளது.

இம்மண்டலத்தில் தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியை தடுக்கவும், மேலும் கால்வாய் நீரோட்டத்தை பராமரிக்கவும் மற்றும் கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள மண்டலம் 1ல் பொது சுகாதார பிரிவில் 21 நிரந்தர பணியாளர்களும் உள்ளனர். மேலும் 12.01.2013 முதல் 90 தினங்களுக்கு 85 ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

ஆட்கள் தேவை குறித்து ஆய்வின்படி இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நபர் ஒருவருக்கு 70 வீடுகள் வீதம் 167 பணியாளர்கள் கொசுப்புழு தடுப்பு பணிகளுக்கும், 18 பணியாளர்கள் கால்வாய் பணிக்கும் 64 பணியாளர்கள் பக்கவாட்டு கால்வாய் பணிகளுக்கும், 28 பணியாளர்கள் புகைபரப்பும் பணிக்கும் ஆக மொத்தம் 277 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்சமயம் பணிபுரியும் 21 நிரந்தர பணியாளர்கள் தவிர்த்து கூடுதலாக 256 ஆண் பணியாளர்களை கொசு ஒழிப்பு பணிக்காக தேவைப்படுகின்றனர்.

எனவே,

1) ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மண்டலம்–1, கோட்டம் –1 முதல் கோட்டம்–14 வரை 256 நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் மலேரியா பணியாளர்கள் பணியமர்த்த நிர்வாக அனுமதியும்,
2) மலேரியா பணிக்கு தனியார் பணியார்களைக் கொண்டு பணி செய்ய திடக்கழிவு மேலாண்மைத் துறை குறிப்பின்அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 289/– வீதம் (256 x 365 x 289) ரூ.2,70,04,160/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபது இலட்சத்து நான்காயிரத்து நூற்று அறுபது மட்டும்) செலவு செய்ய அனுமதியும்,
3) சுகாதார துறையின் தலைப்பு எண். 30–32–02 கணக்கு குறியீடு எண். 210–10–06–02 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
4) இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோர ஒப்புதலும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> “ 12.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.25/2013, நாள்.12.04.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 149/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.3.ந.க.எண்.இ1/ 902/2013

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12/04/2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.205/2013 பொருள் எண்:28

மண்டலம்–3, (வார்டு–22 முதல் 33 வரை) சுகாதார துறையில் ஒப்பந்த அடிப்படையில் 178 ஆண் தொழிலாளர்கள் கொண்டு மேல்நிலை தொட்டிகளில் மருந்து இடும் பணி கால்வாய்களில் ஆகாயதாமரை செடிகளைஅகற்றும் பணி மற்றும் பக்க கால்வாய்களில் அடைப்பினை நீக்கி கைத்தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மற்றும் புகை தெளிப்பான் மூலம் புகை பரப்பும் பணியினை மேற்கொள்ள திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி

1.	பணியின் பெயர்	மண்டலம்–3, மாதவரம் வார்டு–22முதல் 33 வரை – சுகாதார துறையில் 178 ஆண் தொழிலாளர்கள் கொண்டு மேல்நிலை தொட்டிகளில் மருந்து இடும் பணி கால்வாய்களில் ஆகாயதாமரை செடிகளைஅகற்றும் பணி மற்றும் பக்க கால்வாய்களில் அடைப்பினை நீக்கி கைத்தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மற்றும் புகை தெளிப்பான் மூலம் புகை பரப்பும் பணி (12 மாத காலத்திற்கு)
2	மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள்	முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்: 09.03.2013 மன்றத்தின் தீர்மான எண்:22/2013 நாள்: 09.03.2013
3	திட்டக் குறியீட்டு எண்.	பொருந்தாது
4	ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு.	ரூ. 1,87,76,330/– 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி
	அ) பணியின் செலவினம்	ரூ. 1,87,76,330.00
	ஆ) மேற்பார்வை செலவினம்	ரூ.
	இ) சில்லரை மேற்பார்வை செலவு	ரூ.
	ஈ) மற்ற எதிர்பாரா செலவு	ரூ.
	உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம்	ரூ. –
	மொத்தம்	ரூ. 1,87,76,330/–
5	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	சென்னை மாநகராட்சி செய்தி மலர் 21/03/2013
6	ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்	03/04/2013
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி	05/04/2013
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.	ஆம்
9	பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு	பராமரிப்பு நிதியின் கீழ்
10	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	04.07.2013

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஒப்பந்தகால அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் 4 (downloaded from internet) ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது.

ஒப்ப நாளான 05/04/2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள்திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ் வருமாறு.

1) திருவாளர். ராஜலட்சுமி கண்ஸ்டரக்சன்ஸ்
2) திரு. S. மணி
3) திருவாளர். நெல்லை மோட்டார்ஸ்
4) திருவாளர். அண்னை எர்த் மூவர்ஸ்

தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட 4 ஒப்பந்ததாரர்களின் ஒப்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் அணைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டதால் 4 ஒப்பங்களும் தகுதி வாய்ந்த ஒப்பமாகும். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தின் நிதி ஆவணம் 09/04/2013 அன்று மாலை 5.00மணிக்கு திறக்கப்பட்டதின் அடிப்படையில் விலைப்புள்ளி ஒப்பீட்டு விபரம்

வ. எண்	ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர்	பணியில் அலுவலக மதிப்பு 5 (அ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை	2012–2013 விலை விகிதம் அதிகம்/ குறைவு
1	திருவாளர். ராஜலட்சுமி கண்ஸ்டரக்சன்ஸ்	ரூ. 1,87,76,330.00	ரூ.1,86,46,390.00	(–)0.69% குறைவு
2	திரு. S. மணி	ரூ. 1,87,76,330.00	ரூ.1,81,26,630.00	(–)3.46% குறைவு
3	திருவாளர். நெல்லை மோட்டார்ஸ்	ரூ. 1,87,76,330.00	ரூ.1,75,41,900.00	(–)6.57% குறைவு
4	திருவாளர். அண்னை எர்த் மூவர்ஸ்	ரூ. 1,87,76,330.00	ரூ.1,81,91,600.00	(–)3.11 % குறைவு

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்களுடன் உடனடியாக விலை குறைப்புக்கு அழைக்கப்பட்டது. குறைந்த ஒப்பத்திற்கான திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்கள் 10.04.2013 நாளிட்ட கடிதத்தில் தனது ஒப்பத் தொகை ரூ.270/–ல் இருந்து ரூ.1.00/– விலைகுறைப்பு செய்ய இசைவு தெரிவித்துள்ளார். ஒப்பந்ததாரர் திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்கள் 10.04.2013 நாளிட்ட கடிதத்தில் மேலும் விலைக்குறைப்பு வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். நெல்லை மோட்டார்ஸ் அவர்களுக்கு 2012–2013ம் ஆண்டின் விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)6.92 % குறைவான ஒப்பத்தொகை ரூ.1,74,76,930/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி பணி ஆணை வழங்க நிலைக்குழு (பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 17.04.2013 அன்று தீர்மான எண். 40/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 168/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.4/ம.சு.அ.4/ந.க.எண்.0186/2013

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்26.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.206/2013 பொருள் எண்:29

மண்டலம்–4 பொது சுகாதாரத் துறை – கொசுத் தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த களப்பணிகள் மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் 120 தொழிலாளர்களை ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒரு வருட காலத்திற்கு பணியில் பணிக்க மன்றத்தின் அனுமதி.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மண்டலம்–4ல் கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த களப்பணிகளை மேற்கொள்ள தற்பொழுது 163 தொழிலாளர்கள் உள்ளனர்.

சென்னை மாநகராட்சி 200 கோட்டங்களாக விரிவாக்கம் செய்யப்பட்ட பின் மண்டலம்–4ல் உள்ள 15 கோட்டங்களின் எல்லை அளவு அதிகரித்துள்ளது. மண்டலம்–4ல் கொசுப்புழு மற்றும் கொசு தடுப்பு பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்கள் விவரம்:

வ. எண்	பொருள்	தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை
1.	மழைநீர் வடிகால்வாயின் மொத்த நீளம் 91 கிமீ. அ) கொசுப்புழு தடுப்புப் பணி மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்கள்	65
2	நீர்வழி பாதைகளின் மொத்த நீளம் 19.5கிமீ. அ) கொசுப்புழு தடுப்புப் பணி மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்கள்	60
3	மேல் நிலை தொட்டிகள் கிணறுகள் மற்றும் கீழ்நிலை தொட்டிகளின் எண்ணிக்கை 88,729 அ) கொசுப்புழு தடுப்புப் பணி மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்கள்	98
4	பெரிய மற்றும் சிறிய புகைப்பரப்பும் வாகனத்தின் மூலமும் கையினால் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	45
5	மலேரியா டெங்கு காய்ச்சல் கண்டவர்களின் வீடுகளிலும் கொசுத் தொல்லையை குறித்துவரும் புகார்களுக்கு மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ள தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	15
	மொத்தம் தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	283

தற்பொழுது மண்டலம்–4ல் 163 தொழிலாளர்கள் மலேரியா கொசு தடுப்பு பணிக்காக பணிபுரிந்து வருகின்றனர். மீதம் தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிகை 120.

மண்டலம்–4 கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் மலேரியா டெங்கு, சிக்குன் குனியா, நோய்களை தடுக்க கூடுதலாக தேவைப்படும் தொழிலாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் ஒரு வருட காலத்திற்கு பணிக்க கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு சுகாதாரம் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. மண்டலம் 4ல் கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா நோய்களை தடுக்க களப்பணிகள் மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் தொழிலாளர்களை ஒரு வருட காலத்திற்கு ஒப்பங்கள் வரவேற்று ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிக்கவும்
2. ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.289 என கணக்கிட்டு ஒப்பங்கள் வரவேற்கவும்,
3. 120 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.289 என்ற விகிதத்தில் தினக்கூலி கணக்கிட்டு 365 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.1,26,58,200/–ஐ 2013–14ம் நிதி ஆண்டில் பிரிவு எண்.30–32–02 கணக்கு தலைப்பு எண். 210–10–06–02 தலைப்பின் கீழ் செலவிடவும்

மேற்குறிப்பிட்டுள்ள 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "12.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.24/2013, நாள்.12.04.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 148/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.9.ந.க.எண்.எச்1/ 408 /2013

முதன்மை செயலாளர் (ம) ஆணையர் அவர்களின் 12.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.207/2013 **பொருள் எண். 30**

மண்டலம் 9 – சுகாதாரத்துறை – கொசுத்தடுப்பு பணி – ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.

சென்னை மாநகராட்சி, மண்டலம் 9ல் மொத்த 18 கோட்டங்கள் உள்ளன. இந்த கோட்டங்களில் கொசு கட்டுப்பாடு, நோய்க் கட்டுப்படுத்துதல், நீர்வழி ஆதாரங்களில் ஆகாயத்தாமரை நீக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	கோட்டம்	தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாளர் எண்ணிக்கை	தேவைப்படும் பணியாளர்கள்			அரசாங்க மாநகராட்சி கட்டிடங்கள்
			மருந்து போடுதல் பணி	மருந்து தெளிக்கும் பணி	புகை பரப்பும் பணி	
1	109	12	7	4	1	3
2	110	12	7	6	1	5
3	111	14	7	5	1	10
4	112	8	9	2	1	3
5	113	10	6	2	1	2
6	114	8	7	3	1	6
7	115	10	6	2	1	5
8	116	11	7	1	1	7
9	117	10	12	10	1	2
10	118	12	8	2	1	2
11	119	8	8	4	1	2
12	120	9	7	2	1	4
13	121	10	10	3	1	2
14	122	10	10	2	1	5
15	123	10	8	10	1	–
16	124	9	10	3	1	–
17	125	6	10	2	1	3
18	126	7	9	4	1	8
நீர்வழி ஆதாரங்கள்		28	45	–	–	–
புகை பரப்பும் பணி		6	–	–	–	–
மொத்தம்		**210**	193	63	18	69

மருந்து போடும் பணி	–	193
மருந்து தெளிக்கும் பணி	–	63
புகை பரப்பும் பணி	–	18
அரசாங்க மாநகராட்சி கட்டிடங்கள்	–	69
தேவைப்படும் மொத்த நபர்கள்	–	343

மேற்சொன்ன கணக்கீடானது தனி ஒரு நபர் எவ்வளவு பணிகள் மேற்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது அவசரகால அடிப்படையில் கொசு தொல்லையை கட்டுப்படுத்த நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை செடிகள் மிதக்கும் குப்பைகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணியில் 50 பணியாளர்களை ஈடுபடுத்தவும், மழைநீர் வடிகால் வாய்களில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் மனித நுழைவாயில் மூடிகளை திறந்து கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு கோட்டத்திற்கு 3 பேர் வீதம் 54 பேர் தேவைப்படுகிறது. தேவைப்படும் மொத்த பணியாளர்கள் 104 நபர்கள்.

நீர்வழித்தடங்களின் விவரம்

கோட்டம்	நீர்வழித்தடம்	நீளம் (இருபுறம்)	தற்போதுள்ள பணியாளர்கள்	தேவைப்படும் பணியாளர்கள்
109, 110, 111	கூவம் ஆறு	12 கி.மீ	5	15
114, 116, 120, 121, 124, 125, 123, 126	பக்கிங்காம் கால்வாய்	20 கி.மீ	8	12
117	மாம்பலம் கால்வாய்	8 கி.மீ	10	10
109, 111	புலியூர் கால்வாய்	6 கி.மீ	–	5
111, 113	நுங்கம்பாக்கம் கால்வாய்	2 கி.மீ	–	4
122	நந்தனம் கால்வாய்	2 கி.மீ	–	4
–	–	–	–	**50**
18 கோட்டங்களுக்கு 3 நபர் வீதம் மழை நீர் கால்வாய் கொசுப்புழு நாசினி பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள்				**54**
மொத்தம்				**104**

எனவே தற்போது மண்டலம் 9ல் கொசு தடுப்பு பணிகளை போர்கால அடிப்படையில் நீர்வழித் தடங்கள் மற்றும் மழை நீர் கால்வாய்களை மேற்கொண்டால் கொசு தொல்லைகளை பெரும் அளவு கட்டுப்படுத்த முடியும். ஏனவே 104 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தலாம்.

1. மொத்த பணியாளர்கள் – 104 நபர்கள்
2. தினசரி ஊதியம் – ரூ.289/– நபர் ஒன்றுக்கு
3. மொத்த பணி நாட்கள் – 365 நாட்கள்
4. மொத்த செலவினம் – 104 x 289 x 365 = ரூ 1,09,70,440/–

எனவே,

அ) மண்டலம் 9 பகுதி 24, 25, 26, 27ல் அமைந்துள்ள வார்டுகளான 109 முதல் 126 வரை ஆகியவற்றில் பணிபுரிய 104 மலேரியா பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் ஒரு வருடத்திற்கு பணியமர்த்தவும்,

ஆ) இதற்காகும் தோராயமான செலவு தொகையான ரூ 1,09,70,440/– (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து எழுபது ஆயிரத்து நானற்று நாற்பது மட்டும்) பிரிவு குறியீடு 30–32–04 கணக்கு குறியீடு 210–10–06–02 என்ற தலைப்பில் செலவீனங்கள் மேற்கொள்ளவும்,

இ) இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு, ஒப்பங்கள் கோரவும்,

ஈ) தோராய செலவினைத் தொகை ரூ.1,09,70,440/– ஆக இருப்பதின் காரணத்தினால்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 17.04.2013 அன்று தீர்மான எண். 41/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 169/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.11.ந.க.எண்.அ4/1337/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.208/2013 பொருள் எண்:31

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதை கருத்தில் கொண்டும் மற்றும் பிரதான பேருந்து சாலைகள் மற்றும் அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதின் அவசியம் கருதியும் மற்றும் மாநகராட்சியின் கொள்கை முடிவுகளின்படி இம்மண்டலத்திற்கு கூடுதலாக தேவைப்படும் தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி பணிகளை செவ்வனே மேற்கொள்ள பணி அமர்த்த தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பம் கோரப்பட்டுள்ளது.
3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.
4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையான 313 நபர்களுக்கு ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் ஒரு வருடத்திற்கு குறிப்பிடப்பட்ட தொகையான ரூ.3,37,02,275/–க்கு பணி செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.3,37,02,275/– திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கு இணையாக உள்ளது. மேலும், ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் பணி அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர் சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.33702275/–க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் அவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கு இணையான ஒப்பத்தொகை ரூ.3,37,02,275/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.34/2013, நாள்.12.04.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 147/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.12.ந.க.எண்.இ1/0351/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.217/2013 **பொருள் எண். 40**

மண்டலம்-12, துப்புரவு துறை – பற்றாக்குறை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள ஒப்பங்கள் கோரப்பட்டது — பின்னேற்பு அனுமதி வேண்டி.

வட்டார இணை ஆணையர்(தெற்கு) அவர்களின் 22.01.2013 அன்று நேராய்வு குறிப்பின்படி மண்டலம் –12ல் பகல் மற்றும் இரவு நேர துப்புரவு பணிகளை மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி கொள்ள செவ்வனே பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் உள்ள வார்டு 156 முதல் 167வரையில் உள்ள பகுதிகளுக்கு தேவைப்படும் பணியாளர்கள் பற்றிய விவரம் துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் பெறப்பட்டு, அதன்படி 400 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இதன்படி மேற்கண்ட பணிக்கு 22.03.2013 அன்று இரண்டு உறை முறையில் ஒப்பங்கள் கோரப்பட்டு. ஒப்ப நாளன்று இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட 5 ஒப்பங்கள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

வ.எண்.	பங்கேற்ற ஒப்பந்ததாரர் பற்றிய விவரம்	பணியின் அலுவலக மதிப்பு (295x400x365) =4,30,70,000	குறிப்பு
1	திருவாளர்கள்.ஏஏஒய் அசோசியேட்ஸ்	4,30,70,000	
2	திருவாளர்கள்.ஹைடெக் சர்வீசஸ்	4,30,70,000	
3	திருவாளர்கள்.ஸ்ரீநிவாசா மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பி லிட்.,	4,30,70,000	
4	திருவாளர்கள்.அன்னை எர்ச் மூவர்ஸ்	4,30,70,000	
5	திருவாளர்கள்.கிளாசிக் பில்டிங் மேயின்டெனன்ஸ்	4,30,70,000	ஒப்ப முன்வைப்பு தொகை இணைக்கப்படாததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 5 ஒப்பந்ததாரர்களில் திருவாளர்கள்.கிளாசிக் பில்டிங் மேயின்டெனன்ஸ் அவர்கள் இவ்வொப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய ஒப்ப முன்வைப்புத்தொகை செலுத்தப்படாததால் அவருடைய ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

தகுதிவாய்ந்த 4 ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணம் 22.03.2013 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டது. இதில் திருவாளர்கள். அன்னை எர்த் மூவர்ஸ் அவர்களின் தொழில்நுட்ப ஆவணத்தில் கோரப்பட்ட விவரங்கள் சரிவர இணைக்கப்படாததால் அன்னாரது நிதி ஆவணம் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்த பின்வரும் 3 ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 25.03.2013 அன்று தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள விலைகளின் விவரம் பின்வருமாறு.

வ.எண்.	பங்கேற்ற ஒப்பந்ததாரர் பற்றிய விவரம்	பணியின் அலுவலக மதிப்பு (295x400x365) =ரூ.4,30,70,000	ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட விலை ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.வீதம்
1	திருவாளர்கள்.ஏஏஒய் அசோசியேட்ஸ்	4,30,70,000	(ரூ.293.09x400x365) 4,27,91,140

2	திருவாளர்கள்.ஹைடெக் சர்வீசஸ்	4,30,70,000	(ரூ.304x400x365) 4,43,84,000
3	திருவாளர்கள்.ஸ்ரீநிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பி லிட்.,	4,30,70,000	(ரூ.295x400x365) 4,30,70,000

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஏஏஒய் அசோசியேட்ஸ் அவர்களுடன் 26.03.2013 அன்று விலை குறைப்பு பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரர் மேலும் விலைகுறைக்க முன்வரவில்லை.

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஏஏஒய் அசோசியேட்ஸ் அவர்கள் அளித்த ஒப்பவிலையான ரூ.293.09 ஆனது (நபர் ஒருவருக்கு/நாள் ஒன்றுக்கு) திடக்கழிவு மேலாண்மை துறையின் 12.02.2013 நாளிட்ட குறிப்பின்படி ஒரு நாளைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியான ரூ.295/-வீதம் மொத்த அலுவலக மதிப்பு தொகையான ரூ.4,30,70,000/ உடன் ஒப்பிடுகையில் (–)0.65% குறைவாகும். எனவே இப்பணியினை குறைந்த ஒப்பத்தொகை அளித்த திருவாளர்கள்.ஏஏஒய் அசோசியேட்ஸ் அவர்களுக்கு வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.ஏஏஒய் அசோசியேட்ஸ் அவர்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.293.09 வீதம் 400 பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கான மொத்த தொகையான ரூ.4,27,91,140/ க்கு பணியினை வழங்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மேலான ஒப்புதல் பெறப்பட்டு ஒப்ப ஏற்பு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்கண்ட பணியினை குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஏஏஒய் அசோசியேட்ஸ் அவர்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.293.09வீதம் 400 பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கான மொத்த தொகையான ரூ.4,27,91,140/–க்கு பணியினை வழங்கியமைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 119/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 131/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

****

ம.அ.14.ந.க.எண்.அ7/1633/ 2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.218/2013 **பொருள் எண். 41**

ஒப்பம்–2012–13 – மண்டலம்–14, பகுதி–41, 42 &43 வார்டு–168, 169,183 முதல் 191 வரை – ஒப்பம் பெறப்பட்டது –பின்னேற்பு அனுமதி.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட புதியதாக உருவாக்கப்பட்ட மண்டலம் – 14 (பெருங்குடி) பகுதி கொட்டிவாக்கம், பாலவாக்கம், மடிபாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், பள்ளிக்கரணை, பெருங்குடி ஆகிய பேரூராட்சி மற்றும் உள்ளகரம், புழுதிவாக்கம் நகராட்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இணைக்கப்பட்ட மண்டலமாகும். புதியதாக உருவாக்கப்பட்ட இம்மண்டலம் 11 வார்டுகளை கொண்டுள்ளது. 86,359 வீடுகளுடன் கூடிய 3,45,435 எண்ணிக்கைகள் மக்கள் தொகை கொண்ட பெரிய மண்டலமாகும். இம்மண்டலத்தில் உள்ள 2489 சாலைகள் 394.28 கிலோமீட்டர் நீளம் கொண்டதாகும்.

மண்டலம்–14ல் உருவாகும் குப்பைகள் 20 எண்ணிக்கை கொண்ட கம்பாக்டர் வண்டிகள், 300 எண்ணிக்கை கொண்ட மூன்று சக்கரமிதிவண்டி மற்றும் 10 எண்ணிக்கையில் உள்ள பலதரப்பட்ட வண்டிகள் மூலமும் 172.71 மெட்ரிக் டன் அளவிற்கு குப்பைகள் நாள்தோறும் அகற்றப்பட்டுவருகிறது.

தோராயமாக வீதிகளை சுத்தம் செய்யவும், மூன்றுசக்கர வண்டி ஓட்டவும் கம்பாக்டர் மற்றும் லாரிகளில் குப்பைகளை ஏற்றிக்கொண்டு அப்புறப்படுத்தவும், இரவுப்பணி செய்யவும் மொத்தம் 1353 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்போது மண்டலத்தில் மொத்தமுள்ள நிரந்தரம் மற்றும் சுமார் 15 வருடங்களாக பஞ்சாயத்து காலத்தில் இருந்து இன்று வரை தற்காலிகமாக பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 538 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆகையால், மொத்தம் தேவையான பணியாளர்கள் 1353ல், பணிபுரியும் பணியாளர்கள் 538 போக மீதம் 815 பேர் தேவைப்படுகின்றனர். தற்போது ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினீயர்ஸ், ஜெ.கே.ட்ரான்ஸ் மற்றும் அங்காளம்மன் எர்த் மூவர்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்கள் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள 351 பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பணியின் ஒப்பகாலம் 15.05.2013 உடன் முடிவடைகிறது.

நாள் தோறும் துப்புரவு செய்ய தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கைக்கும் தற்போது பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கைக்கும் அதிக அளவு வித்தியாசம் உள்ளதால் தினசரி குப்பைகளை அப்புறப்படுத்தி தூய்மை படுத்தும் பணியில் தொய்வு ஏற்பட்டு பொதுமக்கள் மத்தியிலும் மற்றும் செய்தித்தாள்களிலும் விமர்சிக்கப்படுகிறது.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும், தேவையான துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் தற்காலிகமாக ஓராண்டுக்கு நியமனம் செய்துகொள்ள 09.02.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

மேற்பார்வை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மைதுறை) அவர்களின் சுற்றறிக்கை தி.க.மே.ந.க.எண்.அ7/497/13, நாள் 12.02.2013ன்படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.295/– என்ற அடிப்படையில் மண்டலம்–14க்கு தேவைப்படும் 815 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்கு (ரூ.295X815 X 365)=ரூ.8,77,55,125/– (ரூபாய் எட்டு கோடியே எழுபத்திஏழு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூற்றுஇருபத்தைந்து ரூபாய்) தேவைப்படுகிறது.

தகுதியுடைய தனியார் நிறுவனம் மூலம் மண்டலம்–14ல் உள்ள 11 வார்டுகளுக்கும் 815 துப்புரவு பணியாளர்களை ரூ.295/– தினக்கூலி அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) ஒளிவுமறைவற்ற ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்யவும்.

1. இதற்கு தேவையான தோராய செலவினம் ரூ.8,77,55,125/– (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தி ஏழு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூற்று இருபத்தைந்து)க்கு கணக்கு குறியீட்டு எண்.40–41–03, கணக்கு தலைப்பு எண்.230–15–01–00ல் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்.

மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி தீர்மான எண். 166/2013 மூலம் 11.03.2013 அன்று பெறப்பட்டது.

இதனடிப்படையில் ஒப்பங்கள் கோரியதற்கு 4 ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்	பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ)	2012–13 ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1	திருவாளர்கள். லாவின் எண்டர்பிரைசஸ்	8,77,55,125/-	பிணைவைப்புத் தொகை வைக்கப்படாததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.	
2	திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியர்ஸ்.	8,77,55,125/-	9,16,22,300/–	ரூ.308/– ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு (+) 4.40%
3	திருவாளர்கள். ஜெ.பி. எண்டர்பிரைசஸ்.	8,77,55,125/-	பிணைவைப்புத் தொகை வைக்கப்படாததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.	
4	திருவாளர்கள் ஜெ.கே.டிரான்ஸ்	8,77,55,125/-	9,16,22,300/–	ரூ.308/– ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு (+) 4.40%

தகுதி பெற்றுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒரே விலைப்புள்ளியாக ரூ.308 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில் அளித்துள்ளனர். மேலும் விலை குறைப்பிற்கு பின்னும் இரு ஒப்பந்ததாரர்களும் ஒரே அளவாக ரூ.295 க்கு விலைப்புள்ளி அளித்துள்ளனர். இதற்கு மேலும் இதை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளனர். ஆகவே இவர்களில் **திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியர்ஸ்** நிறுவனத்திற்கு அவர்கள் ஏற்கனவே பணி செய்து கொண்டிருக்கும் வார்டுகள் 183 முதல் 188 வரை உள்ள 6 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ளுவதற்கும், **திருவாளர்கள். ஜே.கே.டிரான்ஸ்** நிறுவனத்திற்கு வார்டு 168,169 மற்றும் 189 முதல் 191 வரை உள்ள 5 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ளுவதற்கும் பணியை ஒப்படைக்கலாம். மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட 2 ஒப்பத்தில் பேச்சுவார்த்தைக்குப் பின் இறுதியாக **திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியர்ஸ் மற்றும் ஜே.கே.டிரான்ஸ்** அவர்கள் 2012–2013 ஆண்டின் அலுவலகம் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதிய விலையான ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.295/–க்கு சமன் செய்து குறைத்து அளித்துள்ளனர். இதனை அலுவலக விலையோடு ஒப்பிடுகையில் **(–) 0.00** சதவிகிதம் ஆகும்.

ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 10(5)ன்படி இரு ஒப்பந்ததாரருக்கும் பணியினை சரிசமமாகப் பிரித்து கொடுக்கப்படவேண்டும். ஆனால் இவ்விரு ஒப்பந்ததாரரும் இம்மண்டலத்தில் சிறப்பாக பணிபுரிந்து கொண்டிருப்பதாலும், இவ்விரு ஒப்பந்ததாரர்களுக்கும் வார்டுகள் பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் கடிதமும் பெறப்பட்டுள்ளது. எனவே, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 10(6)ன்படியும் மற்றும் நிர்வாக வசதியை கருத்தில் கொண்டும் கோட்டம் 183 முதல் 188 வரையிலான 6 கோட்டங்களில் 463 எண்ணிக்கையிலான தொழிலாளர்களை திருவாளர்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வரா இஞ்ஜினியர்ஸ் மூலம் பணியில் அமர்த்திக்கொள்ளவும், கோட்டம் 168,169 மற்றும் 189 முதல் 191 வரையிலான 5 கோட்டங்களில் 352 எண்ணிக்கையிலான தொழிலாளர்களை திருவாளர்கள் **ஜே.கே.டிரான்ஸ்** மூலம் பணியில் அமர்த்திக் கொள்ளவும் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த முடிவு திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியர்ஸ் நிறுவனம் ஏற்கனவே இந்த வார்டுகளில் சிறப்பாக பணிபுரிந்து காட்டியதன் அடிப்படையில் (CREDENTIALS) எடுக்கப்பட்டதாகும். இது ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு10(5),10(6) ன் படி ஒருவரின் ஏற்கனவே பணிபுரிந்து காட்டியிருக்கும். திறமை அடிப்படையில் (CREDENTIALS) சமமாக இல்லாமல் அவரவர் திறமை அடிப்படையில் கொடுக்கப்படலாம் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

இதன்படி வார்டு வாரியாக பணிபுரிய வேண்டிய துப்புரவு தொழிலாளர்கள் விவரம் வருமாறு.

வ. எ ண்	கோட்டம்	கோட்டம்எண்	தேவைப் படும் மொத்த பணியாளர் களின் எண்ணிக்கை	தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை			பற்றாக் குறையாக உள்ள பணியாளர் களின் எண்ணிக்கை
				நிரந்தரம்	தற்காலிக பணியாளர்கள்	மொத்தம்	
1	கொட்டிவாக்கம்	183	159	34	26	60	99
2	பெருங்குடி	184	92	42	19	61	31
3	பாலவாக்கம்	185	160	24	25	49	111
4	பெருங்குடி	186	99	38	-	38	61
5	மடிபாக்கம்	187	69	25	10	35	34
6	மடிபாக்கம்	188	178	36	15	51	127
7	உள்ளகரம்	168	99	52	-	52	47
8	புழுதிவாக்கம்	169	170	51	-	51	119
9	பள்ளிக்கரணை	189	117	41	9	50	67
10	பள்ளிக்கரணை	190	106	38	8	46	60
11	ஜல்லடியான் பேட்டை	191	104	25	20	45	59
மொத்தம்			**1353**	**406**	**132**	**538**	**815**

எனவே, இவ்வொப்பந்தத்திற்கான ஒரு தொகுதிக்கான பணியை வார்டு 168,169,189 லிருந்து 191 வரையுள்ள 5 வார்டுகளில் 352 எண்ணிக்கையுள்ள துப்புரவு தொழிலாளர்களை ரூ.295 (ரூபாய் இருநூற்று தொன்னூறாற்று ஐந்து மட்டும்) ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு ஆகும் மொத்த தொகையான ரூ.3,79,01,600/- (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தொன்பது இலட்சத்து ஆயிரத்து அறுநூறு)க்கு **திருவாளர்கள் ஜே.கே.டிரான்ஸ்** நிறுவனத்திற்கு அளிக்கவும், மற்றும் இவ்வொப்பந்தத்தின் மற்றொரு தொகுதிக்கான பணியை வார்டு 183 லிருந்து 188 வரையிலான 6 வார்டுகளில் 463 எண்ணிக்கையுள்ள துப்புரவு தொழிலாளர்களை ரூ,295 (ரூபாய் இருநூற்று தொன்னூறாற்று ஐந்து மட்டும்) ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு ஆகும் மொத்த தொகையான ரூ.4,98,53,525(ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றெட்டு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று இருபத்தைந்து)க்கு திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஷ்வரா என்ஜினியர்ஸ் நிறுவனத்திற்கு அளிக்கவும், ஆக மொத்தம் 365 நாட்களுக்கு ரூ,295 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு என்ற வீதம் 815 துப்புரவு பணியாளர்களை இவ்விரு நிறுவனம் மூலம் மொத்த தொகையான ரூ. 87755125 (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தேழு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நூற்று இருபத்து ஐந்து) க்கு பணியமர்த்தி கொள்ளவும், கணக்கு குறியீட்டு எண் 40–41–03, கணக்கு தலைப்பு எண் 230–15–01–00 ல் செலவு மேற்கொள்வதற்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 127/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 141/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

****

ம.அ.15.ந.க.எண்.பி1/0442–11/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 26.03.13 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.219/2013 **பொருள் எண்.42**

மண்டலம்–15 – பகுதி–44 மற்றும் 45 – வார்டுகள் 192 முதல் 200 வரை – துப்புரவு பணி – கூடுதலாக தேவைப்படும் 700 பணியாளர்களுக்கு ஒப்பம் பெறப்பட்டது –அனுமதி வேண்டி.

மண்டலம்–15, சோழங்கநல்லூர் பகுதியானது 42.23 சதுரகி.மீ. பரப்பளவுள்ள 9 வார்டுகளை உள்ளடக்கி 283கி.மீ. நீளமுள்ள 1767 சாலைகள் அமைந்துள்ள பகுதியாகும். சுமார் 3.03 இலட்சம் மக்கள் தொகை உள்ள இம்மண்டலத்தில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 140 MT என்று கணக்கிடப்பட்டுள்ளது. மண்டலம்–15 என்பது சோழங்கநல்லூர் பேரூராட்சி மற்றும் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், காரப்பாக்கம், உத்தண்டி மற்றும் செம்மஞ்சேரி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளைக் கொண்டது.

இம்மண்டலத்தில் துப்புரவுப்பணியினை முழுமையாக மேற்கொள்ள 977 பணியாளர்கள் தேவை என்றும் கீழே பட்டியலிடப்பட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது மண்டலம்–15, பகுதி–44 மற்றும் 45க்கு உட்பட்ட வார்டுகளான 192 முதல் 200 வரை தேவையான பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் குறைவான பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	வார்டு எண்.	தேவையான பணியாளர்கள்	தற்போது பணிபுரிபவர்கள்			
			நிரந்தரம்	தினக்கூலி	மொத்தம்	குறைவு
1	192	114	8	31	39	75
2	193	88	11	15	26	62
3	194	90	13	19	32	58
4	195	121	18	17	35	86
5	196	139	16	25	41	98
6	197	117	26	16	42	75
7	198	152	25	6	31	121
8	199	61	8	7	15	46
9	200	95	13	12	25	70
மொத்தம்		977	138	148	286	691 (700)

மன்ற தீர்மானத்தின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.295/– வீதம் 365 நாட்களுக்கு 700 பணியாளர்களை ரூ.7,53,72,500/– மதிப்பிற்கு பணியமர்த்தவும், இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும் பெறப்பட்டது.

மேற்படி பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டு 08.03.2013 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டு திறக்கப்பட்டன. அதில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப ஆவணம் வைக்காத காரணத்தினால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டு குறுகியகால மறுஒப்பம் 14.03.2013 அன்று கோரப்பட்டு சென்னை மாநகராட்சி வார இதழ் 14.03.2013 அன்று வெளிவந்தது மேற்படி ஒப்பம் பெறப்படும் நாளான 22.03.2013 அன்று கீழ்கண்ட இரு ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்றனர்.

- திருவாளர் தாஸ் சர்வீஸ் சென்டர்
- திருவாளர். ஜெ.பி. எண்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஆவணம் 22.03.2013 அன்று 3.15 மணிக்கு திறக்கப்பட்டன. அவற்றில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றார்கள்.

விலை விகிதப்பட்டியல் (Price Bid) 25.03.2013 அன்று திறக்கப்பட்டன.

- திருவாளர் தாஸ் சர்வீஸ் சென்டர் அவர்கள் ரூ.303/– (நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு)
- திருவாளர்.ஜே.பி. எண்டர்பிரைசஸ் அவர்கள் ரூ303– (நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு)

இவர்கள் அளித்த ஒப்ப தொகையானது இவ்வலுவலக விலைப்புள்ளியான ரூ.295/–ஐ விட (+) 2.71% அதிகமாகும். மேற்படி இருவரிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் பணியாளர்கள் சம்பளம் அதிகம் என்பதால் மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்கள். மேற்படி பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு இவ்விலைப்புள்ளியான நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.303/–க்கு பணி வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1. நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.303/– வீதம் 365 நாட்களுக்கு 350 பணியாளர்களை பணியமர்த்த திருவாளர்.ஜே.பி.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு ரூ.3,87,08,250/– மதிப்பிற்கு பணியினை அளிக்கவும்,
2. நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.303/– வீதம் 365 நாட்களுக்கு 350 பணியாளர்களை பணியமர்த்த திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர் அவர்களுக்கு ரூ.3,87,08,250/– மதிப்பிற்கு பணியினை அளிக்கவும்,
3. பணியின் அவசரம் அவசியம் கருதி துப்புரவு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி பணி ஆணை வழங்கவும்,
4. மேற்படி பணியினை பிரிவு எண்.40–41–03 கணக்கு குறியீடு எண்.230–15–01–00 தனியார்மயம் துப்புரவு பணி என்ற தலைப்பில் தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.116/2013 நாள்.17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.129/2013 நாள்.19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

க.து.ந.க.எண்.பி3/2796/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.220/2013 பொருள் எண்:43

மண்டலம்–1 முதல் 15 வரை 5000 எண்ணிக்கையில் நவீன கழிப்பிடங்கள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.10,00,00,000/–க்கு மேல் வருவதால் அரசின் நிர்வாக அனுமதி கோருவதற்கு அனுமதி

சென்னை மாநகராட்சி விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கத்தை தொடர்ந்து மண்டலம்–1 முதல் 15 வரை 5000 எண்ணிக்கையில் நவீன கழிப்பிடங்கள் அமைக்கும் பணிக்கு கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் செயல்படுத்த முதல் கட்டமாக 2000 நவீன கழிப்பிடங்கள் அமைப்பதற்காக 03.07.2012 அன்று ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 30.08.2012 அன்று கூடுதல் ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தின் (Pre Bid Meeting) முடிவில் ஒப்ப ஆவண விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. பொதுவாக ஒப்பந்ததாரர் சலுகை கட்டணம் (Concession Fees) சென்னை மாநகராட்சிக்கு ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும் என்பதாக இருந்து வந்தது. ஆனால் இந்த ஒப்ப ஆவணத்தில் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து சலுகைக் கட்டணத்தை ஒப்பந்ததாரர்கள் குறிப்பிடலாம் என முடிவெடுக்கப்பட்டது.

முதல் வகை : ஒப்பந்ததாரர் சலுகைக் கட்டணத்தை சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் (Concession fees paid to the Corporation of Chennai).

இரண்டாம் வகை : ஒப்பந்ததாரரோ அல்லது சென்னை மாநகராட்சியோ சலுகைக் கட்டணம் செலுத்த தேவையில்லை (There is no fees to be paid by the Concessionaire and Corporation of Chennai).

இரண்டாம் வகை : தேவைப்படின் சென்னை மாநகராட்சியிடமிருந்து ஒப்பந்ததாரர் சலுகைக் கட்டணம் பெறலாம் (If needed Concession fees paid by the Corporation of Chennai to the Concessionaire).

ஒப்பந்ததாரர் மூன்றாம் வகையை ஒப்பத்தில் குறிப்பிட்டிருந்தால், சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு அவர் பராமரிப்பு காலம் முடியும் வரை சலுகைக் கட்டணம் வழங்க வேண்டிய நிலை ஏற்படும். அதற்கு தேவையான நிதியை சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டது.

இப்பணிக்கான முதல் கட்டமாக கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் 2000 நவீன கழிப்பிடங்கள் அமைக்கும் பணிக்கு ஒப்பங்கள் கோர முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. சிப்பம்–1, மண்டலம்–1 முதல் 5 வரை (446 நவீன கழிப்பிடங்கள்)
2. சிப்பம்–2, மண்டலம்–6 முதல் 10 வரை (1024 நவீன கழிப்பிடங்கள்)
3. சிப்பம்–3, மண்டலம்–11 முதல் 15 வரை (530 நவீன கழிப்பிடங்கள்)

எனவே மன்றத் தீர்மான எண்.583/2012, நாள்.27.12.2012ன் மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டதில் சிப்பம்–2க்கு மட்டும் ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதில் ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளுக்கு உட்படாததால் அவ்வொப்பந்ததாரரின் ஒப்பம் பரிசீலிக்கப்படவில்லை. ஆதலால் ஒப்பம் 15.02.2013 அன்று ரத்து செய்ய முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் ஒரு எண்ணிக்கையில் நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு தோராயமாக ரூ.1.00 இலட்சம் ஆகும் என ஒப்பந்தபுள்ளி முன்ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதால் 5000 எண்ணிக்கையிலான நவீன கழிப்பிடங்கள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடு ரூ.10,00,00,000/–க்கு மேல் ஆகும். எனவே அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 130/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 153/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.1.ந.க.எண்.இ1/4947/2012 (சிப்பம்–3)

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.221/2013 பொருள் எண்.44

மண்டலம் – 1 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Development Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் – சிப்பம் 3 –உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி.

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12ம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் திருவொற்றியூர் மண்டலத்தில் (மண்டலம் – 1) 12.684 கி.மீ. நீளமுள்ள 55 சாலைகளில் 40.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.8.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 3 – 8 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 1ல் உள்ள 8 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.953 இலட்சங்கள்.

1. முதல் அழைப்பு 06.12.2012 அன்று கோரப்பட்ட ஒப்பத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.
2. 2ம் அழைப்பு 19.12.2012 அன்று கோரப்பட்டது . அதில் திருவாளர் ராபர்ட் ராஜா கலந்து கொண்டு விலைப்புள்ளி அளித்திருந்தார். ஒப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது விலைப்புள்ளி அதிகம் உள்ளதால் ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பம் கோரப்பட்டது.
3. 3ம் அழைப்பு 28.12.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தத்தில் எவரும் பங்கு பெறவில்லை. எனவே மறு ஒப்பம் கோரப்பட்டது.
4. 4ம் அழைப்பு 21.01.2013 அன்று கோரப்பட்டதில் திருவாளர்.பாபுஜி கன்ஸ்ட்ரக்சன்ஸ் கலந்து கொண்டு விலைப்புள்ளி அளித்திருந்தார். கோரிய தொகை அதிகமாக இருந்த காரணத்தினாலும் அவர் விலைக்குறைக்க இயலாது என கூறியதாலும் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

5வது ஒப்பந்த அறிவிப்பு 07.02.2013 ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் நாளிதழ் நமது எம்.ஜீ.ஆர். நாள் 07.02.2013 மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 15.02.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

சிப்பம்– 3

1. திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
2. தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 3–ல் கலந்து கொண்ட திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 20.02.2013 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 3

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத் தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	9,52,63,898.97	10,69,35, 553.50	(+) 12.25அதிகம்

சிப்பம்–3 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் 21.02.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகை ரூ.10,69,35,553.50 லிருந்து ரூ.10,46,89,906.88க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் மேலும் ஒப்ப குறைப்பு பெறப்பட்டது. அவர்களின் 04.03.2013 அன்று விலைக்குறைக்கப்பட்டு அளித்த கடிதத்தில் ஒப்பத்தொகை ரூ.100931539.22ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு அளித்த விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 5.95% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலை ரூ.11,07,61,413.05 உடன் ஒப்பிடுகையில் (–) 8.87% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 1 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.10,09,31,539.22 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய், சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 5.95% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 8.87% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 5.95% அதிகமான ஒப்பத்தொகை ரூ.10,09,31,539.22 க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவரின் ஒப்பத்தொகை ரூ.10,09,31,539.22 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய்,சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 5.95% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 8.87% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.10,09,31,539.22, 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 5.95% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (–) 8.87% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் –3க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.10,09,31,539.22க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)5.95% அதிகமான ஒப்பத்தொகை ரூ.10,09,31,539.22க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி பணி வழங்கியமைக்கும்,
2. மேலும் இப்பணியின் அவசர அவசியத்தை கருதி பணிகளை மேற்கொண்டதற்கும்,

மேற்காணும் 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 133/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 155/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

****

ம.அ.3.ந.க.எண். இ1/4726/1/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.222/2013 **பொருள் எண். 45**

மண்டலம் – 3 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Development Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – சிப்பம் – 2 – பணிக்கு அனுமதி.

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மாதவரம் மண்டலத்தில் (மண்டலம் – 3) 8.54 கி.மீ. நீளமுள்ள 35 சாலைகளில் 17.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 1 – 7 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 3ல் உள்ள 7 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.963.00 இலட்சங்கள்.

ஒப்பந்த அறிவிப்பு 07.03.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் நாள்.07.03.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 22.03.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

சிப்பம்– 1

- திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 1ல் கலந்து கொண்ட ஒரே ஒப்பந்ததாரர்ரான திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாராக நிர்ணயிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் நிதி ஆவணம் 25.03.2013 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 1

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ்	ரூ.96298479.71	ரூ.106729975.18	(+)10.83%

சிப்பம்–1 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் 25.03.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையில் 5% விலைகுறைப்பு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். ஒப்பந்ததாரர் திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களிடம் மேலு« விலைக்குறைப்பு கோரப்பட் டது. திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் 27.03.2013 நாளிட்ட கடிதத்தில் விலைகுறைப்பு செய்த தொகையில் 2.5% விலைகுறைப்பு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.9,88,58,639.51 ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.66% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலை ரூ.11,01,94,405.64 உடன் ஒப்பிடுகையில் (–)10.29% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 3 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். எஸ்.எஸ்.எஸ். f©°lu¡õ‹° அவர்களின் ஒப்பத்தொகை ரூ.9,88,58,639.51 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.66% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)10.29% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)2.66% அதிமான ஒப்பத்தொகை ரூ.9,88,58,639.51க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவரின் ஒப்பத்தொகை ரூ.9,88,58,639.51 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.66% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)10.29% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பம் இதற்கு முன்னர் இரண்டு முறை ஒப்பம் கோரப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட சுமார் + 37% அதிகமாக இருந்த காரணத்தினால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் விலைகுறைப்பு வழங்காத காரணத்தினால் ஒப்பங்கள் ரத்து செய்யப்பட்டு தற்போது மூன்றாவது முறையாக ஒப்பம் கோரப்பட்டது.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.9,88,58,639.51 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)2.66% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (–)10.29% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் –1க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கண்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.9,88,58,639.51க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)2.66% அதிகமான ஒப்பத்தொகை ரூ.9,88,58,639.51க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 136/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 162/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.3.ந.க.எண். இ1/4726/2/2012

முதன்மை செயலளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–03–2012 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.223/2013 **பொருள் எண்.46**

மண்டலம் – 3 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Development Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது –சிப்பம் – 2 – பணியினை வழங்க அனுமதி .

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மாதவரம் மண்டலத்தில் (மண்டலம் – 3) 8.54 கி.மீ. நீளமுள்ள 35 சாலைகளில் 17.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 2 – 28 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 3ல் உள்ள 28 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.974.99 இலட்சங்கள்.

ஒப்பந்த அறிவிப்பு 07.03.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் நாள்.07.03.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 22.03.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

சிப்பம்– 2

- திரு. G. நாகேஸ்வரன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 2ல் கலந்து கொண்ட ஒரே ஒப்பந்ததாரர்ரான திரு. G. நாகேஸ்வரன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாராக நிர்ணயிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் திரு. G. நாகேஸ்வரன் நிதி ஆவணம் 25.03.2013 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 2

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு. G. நாகேஸ்வரன்	ரூ.97498859.92	ரூ.101218283.75	(+)3.81

சிப்பம்–2 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு. G. நாகேஸ்வரன் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. G. நாகேஸ்வரன் அவர்கள் 27.03.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையில் 0.81% விலைகுறைப்பு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே திரு. G. நாகேஸ்வரன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.10,03,98,415.65 ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.97% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலை ரூ.10,36,38,092.87 உடன் ஒப்பிடுகையில் (–)3.13% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 3 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு. G. நாகேஸ்வரன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.10,03,98,415.65 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
மண்டலம் –14, வார்டு–186ல் உள்ள பெருங்குடி குப்பைக்கொட்டும் வளாகத்தில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் (பிரதான நுழைவுவாயில் முதல் உயர்மின் கோபுர விளக்கு எண்–2 வரை) பணியினை குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திரு. R. தாமஸ் அய்யாதுரை அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

01. பணியின் விவரம்:–

வரிசை எண்	வார்டு எண்	பணி/சாலையின் பெயர்	பணியின் விவரம்	நீளம்	பரப்பளவு	மதிப்பீட்டு தொகை ரூபாய்
1	186	பெருங்குடி குப்பைகொட்டும் வளாகத்திற்குள் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணி (பிரதான நுழைவுவாயில் முதல் உயர்மின் கோபுர விளக்கு எண்–2 வரை)	சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணி	750 மீட்டர்	5250 ச.மீ	1,68,00,000

02. மதிப்பீட்டின் எண். குழுவின் / மன்றத்தின் தீர்மான எண். மற்றும் நாள் : முதன்மை செயலர்/ஆணையரின் ஒப்புதல் பெற்ற நாள்:12/01/2013
மன்ற தீர்மான எண்.36/2013, நாள்:21/01/2013

03. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2012–2013 ஆம் ஆண்டு விலைவிகிதம்

(அ) பணி செலவினம் மட்டும் : ரூ. 1,44,99,560.00
(ஆ) மேலான செலவினம் மட்டும் : ரூ. 14,49,956.00
(இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 3,62,489.00
(ஈ) மற்றைய எதிர்பாரா செலவு : ரூ. 3,42,999.40
(உ) தரக்கட்டுபாடு செலவு : ரூ. 1,44,995.60

ரூ. 1,68,00,000.00

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் :
1. செ.மா. செய்தி வெளியீடு நாள் : 01.03.2013
2. மக்கள் குரல், நாள்: 01/03/2013
3. இந்தியன் எக்ஸ்பிரஸ் . நாள்:01/03/2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 13.03.2013

07. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் : 15.03.2013

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்

09. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? : இரண்டு

10. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் :

வ. எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் . திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ.	2012–13 ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு

1.	G.K. எண்டர்பிரைசஸ்	1,44,99,560.00	1,72,90,725.30	(+) 19.25%
2.	R.தாமஸ் அய்யாதுரை	1,44,99,560.00	1,69,64,485.20	(+)17.00%

ஒப்பத்தில் 2 பேர் பங்கேற்றனர். இவர்களில் திரு. R. தாமஸ் அய்யாதுரை அவர்கள் குறைந்த ஒப்பம் அளித்திருந்தனர்

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம். இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. நாள் : 17.03.2013 மற்றும் 20.03.2013

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை/ஒப்பசதவீதம் : ரூ.1,66,74,494.00 (+)15% 2012-13ம் ஆண்டு அலுவலகவிலைப்பட்டியல்

14. குறைந்த ஒப்பசதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவுநாள் : முதலாம் வகுப்பு, பே.சா.து.ந.க.எண்.பி5/1560/2009 நாள்:26/08/2009

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : பொருந்தாது

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம்
அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு : 2013–2014ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மைத்துறையின் மூலதன நிதி

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 14.06.2013

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள திரு. R, தாமஸ் அய்யாதுரை அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2012–13ம் ஆண்டு அலுவலக விலைவிகிதத்தைவிட (+)17.00% அதிகம் அளித்திருந்தார். இதன்படி அவர் அளித்த ஒப்பத்தொகை ரூ.1,69,64,485.20 ஆகும். திரு. R. தாமஸ் அய்யாதுரை அவர்களிடம் இரண்டு முறை 17.03.2013 மற்றும் 20.03.2013 ஆகிய நாட்களில் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின் மேற்குறிப்பிட்ட பணியை (+)15%அதிகம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்கள் இதன்படி அவர் அளித்த ஒப்பத்தொகை ரூ.1,66,74,494.00 ஆகும். இதற்கு மேல் அவர் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இவ்வொப்பத்தொகையை 09.03.2013 நாளிட்ட சந்தைவிலை விகிதங்களோடு ஒப்பிடும் போது (–) 3.96% குறைவாகும். மேலும் உயர்மட்ட ஒப்பந்தக்குழு தனது 05.04.2013 நாளிட்ட கூட்டக்குறிப்புரையில் இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

எனவே, மண்டலம்–14, வார்டு–186, பெருங்குடி குப்பைகொட்டும் வளாகத்தில் சாலை அமைக்கும் பணி மிகவும் சிரமமான ஒன்றாகும். சாலை கட்டுமான பொருட்களை உள்ளே எடுத்து செல்லும் வாகனங்கள் சென்றுவருவது கடினமாதலால், பெருங்குடி குப்பைகொட்டும் வளாகத்திற்குள் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணியை (பிரதான நுழைவுவாயில் முதல் உயர்மின் கோபுர விளக்கு எண்–2 வரை) திரு. R. தாமஸ் அய்யாதுரை அவர்கள் கோரியுள்ள 2012–13 ஆண்டு அலுவலக விலை மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைவிட (+)15% அதிகமாக ரூ.1,66,74,494.00/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்து நானூற்றி தொன்னுற்று நான்கு மட்டும்) என்ற தொகைக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 149/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 173/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1897/2009

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.237/2013 பொருள் எண்.60

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி.

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அன்படி, சிப்பம் 2 ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணி முடிவடையும் காலம் 20 மாதங்கள், அதாவது 03.09.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

சென்னை வானிலை ஆராய்ச்சி மையத்தில் பதிவான ஜூன்' 2010 முதல் டிசம்பர்' 2010 தினசரி மழையளவு பதிவானதால் ஆகஸ்ட்' 2010 முதல் டிசம்பர்'2010 வரை 5 மாதங்கள் பணிகள் மேற்கொள்ளப்படாததாலும் மற்றும் மார்ச்' 2011 முதல் மே' 2011 வரை தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதி அமுல்படுத்தியதால் 3 மாதங்கள் பணிகள் மேற்கொள்ளப்படாததாலும். மேலும், செப்டம்பர்' 2011 முதல் அக்டோபர்' 2011 வரை சென்னை மாநகர உள்ளாட்சி தேர்தல் விதி அமுல்படுத்தியதால் 2 மாதங்கள் பணி மேற்காள்ளப்படாததாலும், சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கான மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 03.09.2012 முதல் ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க ஆணை பெறப்பட்டது.

சிப்பம் 2 ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்தேக்கப்பணிகள் உள்ள பகுதியில் போக்குவரத்து இடையூறுகள், சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் குழாய் இணைப்பு, மழைநீர் வடிகால்வாய் பகுதிகளில் மின்சார கம்பிவடங்களும் மற்றும் இணைப்பு பெட்டிகளின் இடையூறுகள் ஆகியவற்றினால், ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதால் மேலும் மூன்று மாத பணி கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

03.08.2012 தேதிகளில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வட கிழக்கு பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடந்த ஆய்வு கூட்டத்தில் சாலை வெட்டு மேற்கொள்ள தடைவிதிக்கப்பட்டது. மேலும், பருவமழையின் காரணமாக ஆகஸ்ட்' 2012 முதல் அக்டோபர்' 2012 வரை மூன்று மாத காலங்கள் பணி நடைபெறாமல் இருந்ததால் தாமதத்திற்கு காரணம் ஏற்பட்டது.

மேற்கூறிய காரணங்களால் சுமார் மூன்று மாத காலங்கள் பணிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகள் நிறைவேற்ற வேண்டிய கால அளவுகள் (Mile Stone) எட்டப்படவில்லை. ஒப்ப விதியின் கீழ், பணிகள் மேற்கொள்ளப்பட முடியாததால், பணி ஆணை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பருவமழை காரணமாகவும் மூன்று மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதாலும் ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாலும் இப்பணிக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், இப்பணிக்கான மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு 02.03.2013 முதல் 01.06.2013 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 2 ஒட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு மேலும், மூன்று மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 154/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 181/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1900/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.238/2013 பொருள் எண்.61

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 5 – வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி.

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 5 வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணி முடிவடையும் காலம் 24 மாதங்கள், அதாவது 03.01.2013ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்தேக்கப்பணிகள் உள்ள பகுதியில் போக்குவரத்து இடையூறுகள், சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் குழாய் இணைப்பு, மழைநீர் வடிகால்வாய் பகுதிகளில் மின்சார கம்பிவடங்களும் மற்றும் இணைப்பு பெட்டிகளின் இடையூறுகள் மற்றும் மணல் தட்டுபாடு ஆகியவற்றினால், வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாமல் நடைபெற்று வருகிறது என்றும் தற்சமயம் வரை தங்கள் நிறுவனம் தொடர்ச்சியாக சில பிரச்சனைகள் எதிர்கொள்ள வேண்டியது இருப்பதாக ஒப்பந்ததாரர் கீழ்வருமாறு தெரிவித்துள்ளனர்.

(1) பொறியாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு 5% வழங்குவதால்,
(2) பெட்ரோல் மற்றும் டீசல் விலை சரசரியாக 10% இந்த காலத்திற்குள் உயர்ந்துள்ளது,
(3) பணியமைப்புக்கான செலவினம் 10% அதிகரித்துள்ளது,
(4) அரசு துறைகளில் பொதுவாக பிடித்தம் செய்யும் சேவை வரி 12.36%
(5) மேற்கூறிய காரணங்களினால் தங்கள் நிறுவனம் ஒரு வருடத்திற்கு 6% அதிகரித்துள்ளது எனவும்,

மேற்கூறிய காரணங்களினால், மேலும் எட்டு மாதம் வரை கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

06.08.2011 மற்றும் 03.08.2012 தேதிகளில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வட கிழக்கு பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடந்த ஆய்வு கூட்டத்தில் சாலை வெட்டு மேற்கொள்ள தடைவிதிக்கப்பட்டது. மேலும், உள்ளாட்சி தேர்தல்களில் நன்னடத்தை விதிகளின்படி பணிகள் தொய்விற்கு காரணமாகின. எனவே, தாமதத்திற்கான காரணம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாமதத்திற்கான காரணம்

2011 – உள்ளாட்சி தேர்தல்	செப்டம்பர் 2011 முதல் அக்டோபர் 2011 வரை	2 மாதங்கள்
2011 – பருவமழை	ஆகஸ்ட் 2011 முதல் டிசம்பர் 2011 வரை	5 மாதங்கள்
2012 – பருவமழை	ஆகஸ்ட் 2012 முதல் அக்டோபர் 2012 வரை	3 மாதங்கள்

மேற்கூறிய காரணங்களால் சுமார் ஆறு மாத காலங்கள் பணிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகள் நிறைவேற்ற வேண்டிய கால அளவுகள் (Mile Stone) எட்டப்படவில்லை. ஒப்ப விதியின் கீழ், பணிகள் மேற்கொள்ளப்பட முடியாததால், பணி ஆணை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை மற்றும் உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்திய காரணத்தினால் பத்து மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதாலும், வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் கால்வாய் பகுதியில் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதால் இப்பணிகளுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு 04.01.2013 முதல் 03.07.2013 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 5 வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் இராயபுரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு மேலும், ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 153/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 182/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1177/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.239/2013 **பொருள் எண். 62**

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – விருகம்பாக்கம் மற்றும அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்க அனுமதி.

விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணிக்காக ரூ.40,86,38,787/–க்கு திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 24 மாதங்கள் ஆகும். அதாவது 01.11.2012க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக 01.01.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேலும், உள்ளாட்சி தேர்தல் மற்றும் 2012ம் ஆண்டின் பருவமழை காரணமாகவும் மற்றும் சில இடர்பாடுகளாலும் 01.07.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இதன் குறித்து தெரிவிப்பது யாதெனில், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி (Revised Detailed Project Report) இத்தொகுப்பில் மொத்தம் 70 பணிகள் ஆகும். அதில், 32 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 12 பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் 26 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி ஒப்பந்ததாரர் இன்றைய தேதியில் 85% முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 45% மட்டுமே பணி மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்ததாரின் வேலையின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் ஒப்பந்ததாரர் பணி துரிதமாக மேற்கொள்ள உறுதிப்படுத்தியும் இந்நாள் வரை பணி துரிதப்படுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு காரணம் கேட்க்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டும், இக்குறிப்பாணைக்கு இவ்வலுவலகத்திற்கு இந்நாள் வரை எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்கள் காரணம் கேட்டுக்கும் குறிப்பாணைக்கு இந்நாள் வரை பதில் தாரததாலும். மேலும். இந்நாள் வரை பணியில் முன்னேற்றம் இல்லாததாலும் ஒப்ப விதி 59 “Termination” மற்றும் 60 “Determination upon termination” துணை விதி 60A of contract due to default or failure of the contractor”ன்படி விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் முன்னேற்றம் இல்லா காரணத்தினால் திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

மேலும், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் உள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்காணும் 26 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவும். (அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவிருக்கும் பணிகள்

வ. எண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் பெயர்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை
1	8	129	வீரமாமுனிவர் மற்றும் வி.வி.கோயில் தெரு	350	2619000
2	8	118	தயால் நகர் பிரதான சாலை	240	2636000
3	8	129	தசரதாபுரம் பிரதான சாலை	250	2744000
4	5	75	எம்.எம்.டி.ஏ.காலணி	235	1826000
5	8	121	டாக்டர் சுப்புரயா நகர் 6வது தெரு	240	1850000
6	8	128	ஆற்காடு சாலை	350	5044000
7	5	75	ரசாக் கார்டன் பிரதான சாலை	520	5695000
8	8	121	சன்னதி சாலை	175	1346000
9	8	120	டாக்டர் அம்பேத்கார் சாலை	360	3946000
10	8	121	கோடம்பாக்கம் சாலை	650	7120000
11	5	65	இளங்கோ நகர் 4வது மற்றும் 5வது தெரு	200	1545000
12	5	77	வன்னியர் 1வது தெரு	300	3278000
13	5	77	பெரியார் பாதை	300	3278000
14	8	117	தெற்கு பெருமாள் கோயில் தெரு	220	2420000

15	8	117	கன்னியப்பன் சாலை	200	1533000
16	8	118	வெள்ளாளர் தெரு	310	3407000
17	8	118	பூளியூர் 1வது மற்றும் 2வது பிரதான சாலை	1050	11497000
18	8	121	தெற்கு சிவன் கோயில் தெரு	400	4376000
19	5	74	ரத்தினம்மாள் காலனி பிரதான சாலை	200	2867000
20	8	121	சிவன் கோயில் மேற்கு தெரு	400	4376000
21	8	121	ராகவன் காலனி பிரதான சாலை	300	3283000
22	8	118	தெற்கு சிவன் கோயில் தெரு	300	3283000
23	5	74	கண்ணகி தெரு	450	4934000
24	5	65	காமராஜர் சாலை	1900	41141000
25	8	129	காந்தி நகர் அண்ணா தெரு	100	1346000
26	8	129	காமராஜ் தெரு, அகஸ்தியர் தெரு, சத்தியமூர்த்தி மற்றும் வ.ஊ.சி.தெரு	900	9989000
			மொத்தம்	**10900**	**137451000**

எனவே,

(1) விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது நடைபெறும் 12 பணிகளை தொடர்ந்து குறிப்பிட்ட காலவரையான 01.07.2013க்குள் முடிக்கவும். அதன் பின்னர் திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்கவும்,

(2) விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 26 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து திருத்திய மதிப்பீடு தயாரித்து புதிய ஒப்பம் கோரவும் மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும்,

(3) இப்பணிக்காக திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பினை வைப்புத் தொகை (Security Deposit) மற்றும் ஊந்துதல் தொகை (Mobilization Advance) கையகப்படுத்தவும்,

(1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 144/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 178/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1178/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.240/2013 **பொருள் எண். 63**

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்க அனுமதி.

ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணிக்காக ரூ.67,73,87,912/–க்கு திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 23.12.2012க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக 23.06.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இதன் குறித்து தெரிவிப்பது யாதெனில், ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி (Revised Detailed Project Report) இத்தொகுப்பில் மொத்தம் 122 பணிகள் ஆகும். அதில், 75 பணிகள் முடிக்கப்பட்ட உள்ளது, 11 பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் 36 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி ஒப்பந்ததாரர் இன்றைய தேதியில் 85% முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 45% மட்டுமே பணி மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்ததாரின் வேலையின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் ஒப்பந்ததாரர் பணி துரிதமாக மேற்கொள்ள உறுதிப்படுத்தியும் இந்நாள் வரை பணி துரிதப்படுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு காரணம் கேட்க்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டும், இக்குறிப்பாணைக்கு இவ்வலுவலகத்திற்கு இந்நாள் வரை எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் காரணம் கேட்டுக்கும் குறிப்பாணைக்கு இந்நாள் வரை பதில் தாரததாலும். மேலும். இந்நாள் வரை பணியில் முன்னேற்றம் இல்லாததாலும் ஒப்ப விதி 59 “Termination” மற்றும் 60 “Determination upon termination” துணை விதி 60A of contract due to default or failure of the contractor”ன்படி ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் முன்னேற்றம் இல்லா காரணத்தினால் திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

மேலும், ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் உள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்காணும் 36 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவும் (அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவிருக்கும் பணிகள்

வ. எண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் பெயர்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை
1	5	68	வ.ஊ.சி. நியூ காலணி	200	2179000
2	4	58	சங்கரபக்தன் தெரு	275	3056000
3	7	99	ஸ்டரான்ஸ் சாலை	300	3284000
4	3	39	ஆன்டி மலோரியல் கால்வாய்	850	25800000
5	5	70	மில்லர்ஸ் சாலை (கிழக்கு)	500	7291000
6	5	68	கீழ்பாக்கம் கார்டன் சாலை	225	13390000
7	5	69	ஹால்ஸ் சாலை	170	1867000
8	5	67	ஓ பிளாக்	400	4384000
9	3	37	சுப்பிரமணி தெரு	330	3624000
10	4	55	காந்தி நகர்	400	4422000
11	4	53	ஆன்டோர்சன் சாலை	400	5762000
12	3	41	மன்னார்சாமி கோயில் தெரு	320	3515000
13	3	40	பிரைட்டன் சாலை	300	3281000
14	3	41	லால் சிங் தெரு	100	1076000
15	3	41	கோவிந் சிங் தெரு	210	2304000
16	4	63	வடக்கு உயர்நீதிமன்ற காலனி	300	2322000
17	4	51, 53	பேப்பர் மில்ஸ் சாலை	600	8643000

18	4	57	குண்ணூர் நெஞ்சாலை	1600	23047000
19	4	60	மேடவாக்கம் டங்க் சாலை	1000	14404000
20	4	61	பிரிக்லின் சாலை	1000	14404000
21	5	70	பால்போர் கிழுக்கு சாலை	400	4379000
22	7	97	பிரிக்லின் சாலை	770	8435000
23	7	99	டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலை	350	3840000
24	7	102	ஏ.பி.சாலை	750	8220000
25	7	100, 102	பெரம்பூர் பேரக்ஸ் சாலை	700	7664000
26	7	97, 98	ஸ்டேரான்ஸ் சாலை	1000	10949000
27	3	40	சத்தியவானி முத்து நகர் நெடுஞ்சாலை	180	1961000
28	4	58	மெட்ரோ வாட்டர் நிலத்தின்னுள் குட்டியப்பன் 2வது தெரு	300	3285000
29	4	58	இ.எஸ்.ஐ. மருத்துவமனை சாலை	250	2742000
30	4	58	ஊஜினி தெரு	205	2253000
31	4	59	பேரக்கா 2வது தெரு	240	1879000
32	3	39	ஸ்டரான்ஸ் சாலை 3வது தெரு	150	1671000
33	3	40	வெங்கடேசபுரம் நியூ காலனி பிரதான சாலை	450	4944000
34	3	40	வாசுகி நகர் பிரதான சாலை	300	3281000
35	3	41	திருவெங்கடசாமி தெரு	320	3515000
36	5	70	பிளவர்ஸ் சாலை	300	3285000
			மொத்தம்	**16145**	**220358000**

எனவே,

(1) ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது நடைபெறும் 11 பணிகளை தொடர்ந்து குறிப்பிட்ட காலவரையான 23.06.2013க்குள் முடிக்கவும். அதன் பின்னர் திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்கவும்,

(2) ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் 36 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து திருத்திய மதிப்பீடு தயாரித்துபுதிய ஒப்பம் கோரவும் மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும், மற்றும்

(3) இப்பணிக்காக திருவாளர்கள் நீவ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பினை வைப்புத் தொகை (Security Deposit) மற்றும் ஊந்துதல் தொகை (Mobilization Advance) கையகப்படுத்தவும்,

எனவே, (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 145/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 179/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/2185/2009

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 17 .04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.241/2013 **பொருள் எண். 64**

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு –ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிகால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்டெரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்க அனுமதி

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.13,52,91,117.52பைவிற்கு திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 22 மாதங்கள் ஆகும். அதாவது 01.07.2012க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், சில எதிர்பாராத காரணங்களுக்காக 01.09.2012 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இதன் குறித்து தெரிவிப்பது யாதெனில், இப்பணிக்கான ஒப்ப விதிகளின்படி ஒப்பந்ததாரர் திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் 01.09.2012ற்குள் பணி முடிவுற்றுறிக்க வேண்டும். திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி, டி.வி.எஸ். கால்வாயில் 907மீ நீளம் மேற்கொள்ள வேண்டிய பணியில் செ.653மீ முதல் செ.843.50மீ வரை (190.50மீ) நீளத்திற்கு மட்டுமே பணி முடித்துள்ளனர் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாயில் மொத்தம் 1525மீ நீளம் மேற்கொள்ள வேண்டிய பணியில் செ.1400மீ முதல் செ.1514மீ வரை (114மீ) மட்டுமே முடித்துள்ளனர். இதன்படி, இதுவரை முடிக்கப்பட்ட பணியில் ஒப்பந்ததாரருக்கு ரூ.74.99 லட்சங்கள் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்நாள் வரை, ஒப்பந்ததாரர் பணிகளை துரிதமாக மேற்கொள்ள எந்த முன்முயற்சியும் எடுத்துக்கொள்ளவதாக இல்லை. மேலும், கடந்த பருவமழை காரணமாக அக்டோபர்'2012ல் வேலை நிறுத்திய பின்னர், இந்நாள் வரை பணி ஆரம்பிக்கப்படவில்லை

டி.வி.எஸ்.கால்வாய் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாய் பகுதிகளில் பணி செய்வதற்கு ஏதுவாக பணி இடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் பணி மேற்கொண்டு செய்ய இயலாது என்றும் தெரிவித்துள்ளார்கள். இதனால், இப்பணிக்கான ஒப்பத்தினை ரத்து செய்யும்படி கோரியுள்ளனர்.

மேற்கூறிய காரணங்கள், ஒப்பந்ததாரருக்கு பல முறை கடிதங்களின் மூலம் தெரிவிக்கப்பட்டும் பணியினை திரும்ப ஆரம்பிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும், ஒப்பந்ததாரருக்கு காரணம் கேட்கும் குறிப்பாணை மூலம் விளக்கம் கேட்டு அனுப்பப்பட்டது. இக்காரணம் கேட்டுக்கும் குறிப்பாணைக்கு ஒப்பந்ததாரர் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

டி.வி.எஸ்.கால்வாயில் அண்ணா நகர் இரயில் நிலையம் அருகில் இருபக்கங்களில் 60 மீட்டர் நீளத்திற்கும் மற்றும் ஒப்பந்ததாரர் பணி நிறைவேற்றிய இடத்திலிருந்து 80 மீட்டர் நீளத்திற்கு பணி தொடர பணியிடம் ஏதுவாக உள்ளது. மேலும், பொன்விழா நகர் முதல் அகஸ்தியர் நகர் விரிவாக்கம் வரை பணி நடைபெற ஏதுவாக பணி இடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஏகாங்கிபுரம் கால்வாயில், 30 மீட்டர் நீளத்திற்கு கொண்ணூர் நெடுஞ்சாலை சிறுபாலம் வரை ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் ஐ.சி.எப் கால்வாய் சங்கமிக்கும் இடம் முதல் மேம்பாலம் வரை 450மீ நீளத்திற்கு ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட டி.வி.எஸ்.கால்வாய் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாய்களில் அகலத்தைப் பொறுத்து திருத்திய வடிவமைப்பு (Revised Design) தயாரிக்கப்பட்டு, திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டும் பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், ஒப்பந்ததாரர் கோரியபடி ஏகாங்கிபுரம் கால்வாயில் குன்னூர் நெடுஞ்சாலை அருகே உள்ள பழுதடைந்த கழிவறை இடிக்கப்பட்ட பின்னரும், அப்பகுதியில் தற்போது வரையிலும் பணி துவங்கப்படவில்லை.

தாங்கள் வெள்ள தடுப்பு நடவடிக்கையின் காரணமாக பணியின் முன்னேற்றம் தடைபட்டதாகவும், பணி மேற்கொள்ளும் போது கால்வாயின் அகலம் குறுகலான பகுதியாக இருந்ததால் நீண்ட சரிவின் காரணமாக தொழில்நுட்ப அளவுகளின்படி, பணியிடத்தில் பணி மேற்கொள்ள இயலாவில்லை என தெரிவித்துள்ளனர். மேலும், இப்பணிக்கான பணியிடம் தாங்களுக்கு முழுமையாக கொடுக்கப்படவில்லை எனவும் திரு.வி.தினகரன், தலைமை பொறியாளர், பொதுப் பணித்துறை (ஓய்வு) அவர்களை தீர்ப்பாளராக (Adjudicator) நியமிக்கவும் கோரியுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் காரணம் கேட்டுக்கும் குறிப்பாணைக்கு இந்நாள் வரை பதில் தரரததாலும் மற்றும் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கருத்துகள் யாவும் ஏற்புடையதல்ல. மேலும். ஒப்ப விதி 59 "Termination" மற்றும் 60 "Determination upon termination" துணை விதி 60A of contract due to default or failure of

the contractor"ன்படி ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணிக்களில் முன்னேற்றம் இல்லா காரணத்தினால் திருவாளர்கள் எஸ்.பி.எல். இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

மேலும், ஏகாங்கிபுரம் கால்வாயில் 1525மீ நீளத்தில் 114மீ நீளம் மட்டுமே ஒப்பந்ததாரர் பணி மேற்கொண்டுள்ளனர் மீதம் 1400மீ நீளம் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் டி.வி.எஸ்.கால்வாயில் 907மீ நிளத்தில் 190.50மீ நீளம் மட்டுமே ஒப்பந்ததாரர் பணி மேற்கொண்டுள்ளனர் மீதம் 500மீ நீளத்திற்கு பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ளது, மீதமுள்ள பணிகளை திருத்திய மதிப்பீடு தயார் செய்து மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ள கருதப்படுகிறது.

எனவே,

(1) ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை நிராகரிக்கவும்.

(2) இப்பணிக்காக திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பினை வைப்புத் தொகை (Security Deposit) கையகப்படுத்தவும்,

(3) ஏகாங்கிபுரம் கால்வாயில் 1400மீ நீளத்திற்கும் மற்றும் டி.வி.எஸ்.கால்வாயில் 500மீ நீளத்திற்கும் திருத்திய மதிப்பீடு தயார் செய்து மூன்றாவது நிறுவானம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 146/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 180/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.அ.4.ந.க.எண்.பி2 / 7022/சிப்பம்–2/ 2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.03.13 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.242/2013 **பொருள் எண். 65**

மண்டலம் – 4 – சிப்பம் – 2 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Develoment Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.ஜெ.ஆர்.ஆர்அண்டு கே.சி.பி. ஜெ.வி.கம்பெனி அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது – பணி துவங்கவில்லை மற்றும் ஒப்ப உடன்படிக்கை மேற்கொள்ளவில்லை – காரணம் கோரும் குறிப்பாணைக்கான விளக்கம் ஏற்புடையதாக இல்லாத காரணத்தால் ஒப்பவிதிகளின் கீழ் நடவடிக்கை எடுத்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்க அனுமதி.

****

மண்டலம்–4ல் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் "Chennai Mega City Development Mission" சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், இப்பணிக்கு சிப்பம்–2 (24 பணிகள்) ஒப்பம் 19.12.2012 கோரப்பட்டு, இப்பணிக்கு ஒரு ஒப்பம் அளித்துள்ள திருவாளர்.ஜெ.ஆர்.ஆர்.அண்டு கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி அவர்களின் விலைவிவரப்படி (Price Bid) 24/12/2012 அன்று திறக்கப்பட்டு, 2012–2013ம் ஆண்டில் அலுவலக விலைவிவரப்படி (–) 6.88 சதவீதம் குறைவுக்கு ரூ.9,71,17,888.93 மதிப்பிற்கு பணிகள் வழங்க மன்ற தீர்மானம் எண்.322/2012, நாள் 28.12.2012ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மண்டல அலுவலக 28.12.2012 நாளிட்ட ஏற்றுக்கொள்ளும் கடிதம் (Letter of Acceptance) மேற்கண்ட பணிக்கு கடிதம் கிடைத்த 7 நாட்களுக்குள் ஒப்பதொகையில் 2 விழுக்காடு பிணை வைப்பு தொகை (Performance Security) Security Deposit செலுத்தி ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கடிதம் 02.01.2013 அன்று அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் இப்பணியாணை பெற்றுக் கொண்டுள்ளதற்கான விவரம் ஒப்பந்ததாரர் அனுப்பப்பட்ட 08.02.2013 நாளிட்ட கடிதத்தில் 03.01.2013 அன்று பெற்றுக் கொள்ளப்பட்டது என குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கடிதத்தில் ஒப்பத்தில் பணிக்கான இனவாரியான பட்டியலில் 10 ச.மீ பதிலாக 1 ச.மீ என தவறுதலாக குறிப்பிட்டு ஒப்பம் வழங்கியதாகவும் ஆனால் மொத்த தொகையில் சரியாக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்து இவ்வொப்பத்தை நிராகரித்து ஒப்ப முன்வைப்பு தொகை வழங்குமாறு கடிதம் அளித்துள்ளார்.

மேற்கண்ட பணிக்கு ஏற்றுக்கொள்ளும் கடிதம் (Letter of Acceptance) பெறப்பட்ட 30 நாட்களுக்குள் ஒப்பவிதி எண்.15(3)ன் கீழ் பணியை தொடர்ந்து ஒப்ப உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர் இப்பணிக்கான ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்தாதால் ஏன் ஒப்ப விதி எண். 15(3)ன் கீழ் ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்ப வைப்பு தொகையை பறிமுதல் செய்து ஒப்பந்ததாரருக்கு வழங்கிய பணியாணை ரத்து செய்து மறுஒப்பம் கோரக்கூடாது என்பதற்கான விளக்கத்தை அளிக்கும்படி இவ்வலுவலக 18.01.2013 நாளிட்ட கடிதத்தில், இக்கடிதம் கிடைத்த 7 தினங்களுக்குள் விளக்கம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரர் இக்கடிதம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்பந்ததாரர் 08.02.2013 நாளிட்ட கடிதத்தில், தாங்கள் அனுப்பப்பட்ட கடிதம் 05.02.2013ல் பெற்றுக் கொள்ளப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஒப்பந்ததாரர் அனுப்பப்பட்ட கடிதம் இவ்வலுவலக பெறப்பட்ட நாள் 14.02.2013 இதில் திருவாளர். ஜெ,ஆர்.ஆர். அண்டு கே.சி.பி. ஜெ.வி.கம்பெனி அவர்களின் அளித்துள்ள கடிதத்தில் ஒப்பத்தில் பணிக்கான இனவாரியான பட்டியலில் 10 ச.மீ பதிலாக 1 ச.மீ என தவறுதலாக குறிப்பிட்டு ஒப்பம் வழங்கியதாகவும் ஆனால் மொத்த தொகையில் சரியாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதால் இவ்வொப்பத்தை நிராகரித்து ஒப்ப முன்வைப்பு தொகையை வழங்கும்படி கோரியுள்ளார்.

இப்பணிக்கு ஒப்ப விதிகளின்படி ஒப்பவிதி எண்.15(3)ன்படி ஒப்ப பணிக்கான பணியாணை வழங்கிய 30 நாட்களுக்குள் பணிக்கான பிணை வைப்பு தொகை செலுத்தி ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்தி பணியை தொடங்கப்படவில்லை என கடிதம் அனுப்பப்பட்டதற்கு ஒப்பந்ததாரர் மேற்படி கடிதத்தில் அளித்துள்ள விளக்கம் ஏற்புடைதாக இல்லை.

ஒப்பந்ததாரர் பணியாணை பெறப்பட்டு 73 நாட்கள் கடந்த நிலையில் இதுவரை பணிக்கான ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்த முன்வரவில்லை மேலும் ஒப்பந்ததாரர் பணியை தொடங்கப்படாமல் வேண்டும் என்றே காலதாமதப்படுத்தப்படுவதாக கருதப்படுகிறது.

ஒப்பந்ததாரர் பணி செய்ய முன்வாரததால் ஒப்ப விதிகளின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்பவைப்பு தொகை ரூ.10,43,000/–ஐ ஒப்ப விதி எண்.15(3)ன்படி பறிமுதல் செய்யவும், மற்றும் ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் ஒப்ப விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இறுதியாக கடிதம் 01.03.2013 அன்று அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் பணிக்கான விலை விகிதத்தை தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்ப வைப்பு தொகை திரும்ப பெற கோரியுள்ளது ஒப்ப விதி எண்.15(3)ன்படி ஏற்கக்கூடியது அல்ல என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஒப்பம் திறக்கப்பட்டதற்கு பின்னர் ஒப்பத்தை ஒப்பந்தாரர் வழங்கிய விலையின் அடிப்படையில் தீர்மானித்து பணியாணை வழங்கப்பட்டது.

மேலும் ஒப்பந்ததாரர் தொடர்ந்து பணியை காலதாமதப்படுத்துவதால் இத்திட்டத்தின் செயல்பாடுகள் காலதாமதப்படும் என்பதால் பணியை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணியாணையை இரத்து செய்து ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்ப முன் வைப்பு தொகை ரூ.10,43,000/–ஐ ஒப்ப விதி எண். 15(3)ன்படி பறிமுதல் செய்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–4 பெருநகர வளர்ச்சித் திட்டம் “Chennai Mega City Development Mission) சிப்பம்–2க்கான ஒப்பந்தாரர் திருவாளர்.ஜெ.ஆர்.ஆர்.அண்டு கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி அவர்களுக்கு பணியாணை வழங்கிய 73 நாட்களுக்குள் கடந்த நிலையில் இதுவரை பிணை வைப்பு தொகை (Performance Security) செலுத்தி ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமலும் பணியை தொடங்கப்படாமலும் உள்ளதால் இப்பணிக்கு வழங்கப்பட்ட பணியாணையை இரத்து செய்யவும்,
2. மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்ப வைப்பு தொகை ரூ.10,43,000/–ஐ ஒப்பவிதி எண்.15(3)ன்படி பறிமுதல் செய்து ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும்,
3. மேற்கண்ட பணிக்கு ஆணையை எதிர் நோக்கி ஒப்பம் கோரப்பட்டதற்கு பின்னேற்பு ஒப்புதல் வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 113/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 126/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

ம.து.ந.க.எண்.பி2/382/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.243/2013 பொருள் எண்.66

மன்றத்துறை – ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாமன்றக் கூட்டத்தில் மன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி மற்றும் உணவு வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சியில் மாதாந்திர மன்றக் கூட்டங்கள் நடைபெறும் சமயங்களில் மாமன்ற கூட்டத்திற்கு வருகை புரியும் மாமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற பிரதிநிதிகள், பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்களுடன் வருகைப் புரியும் உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு உயர்தர சிற்றுண்டி, உணவுகள் வழங்கப்பட்டு வந்தது.

மேலும் அரசாணை நிலை எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந–1) துறை நாள்: 10.01.2006–ல் மன்றக்கூட்டம் நடைபெறும் நாட்களில் உணவு வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும், தற்போது விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகள் உள்ளதால், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் காலையில் மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்னதாகவே புறப்பட்டு வருவதாலும், மன்றக் கூட்டம் பிற்பகலில் தான் முடிவடைவதாலும், மாமன்ற உறுப்பினர்களுக்கு காலை சிற்றுண்டியும், பிற்பகலில் மதிய உணவும் வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று 11.03.2013 அன்று நடைபெற்ற வரவு செலவுத்திட்ட கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி மாமன்றக் கூட்டம் நடைபெறும் நாட்களில் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்குவதற்கும், இதுவரையில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் வழங்கப்பட்ட சிற்றுண்டி மற்றும் உணவிற்கு மன்றத்துறை கணக்கு தலைப்பு எண் "220–61–03–00 விருந்தோம்பல்" செலவு என்ற தலைப்பின் கீழ், மேற்கொண்ட செலவீனங்களுக்கு பின்னேற்பு அனுமதியும், மேலும் இனி வருங்காலங்களில் தொடர்ந்து இதனை செயல்படுத்துவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.170/2013 நாள்.19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.6. ந.க.எண். 1920/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.244/2013 **பொருள் எண். 67**

ஓடு வேய்ந்த கொட்டகை இடிப்பதற்கு அனுமதி.

வரிசை எண்	வார்டு எண்.72	மண்டலம்–6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்–6, வார்டு–72 – டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் உள்ள ஆடு மாடு இறைச்சி கூடத்தில் மாடு அடிக்கும் பணி மேற்கொள்ளும் இடத்தின் கிழக்கு பக்கம்பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள ஓடு வேய்ந்த கொட்டகை இடிப்பதற்கு அனுமதி.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	1903 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	179 சதுர அடி தரைதளம்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	179 சதுர அடி
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.25,060/– ஆகும்
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	ஆடு மாடு இறைச்சி கூடம் நவீனமயமாக்குதல்
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–6
10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	6–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.3 நாள் 11.02.2013

எனவே, மண்டலம்–6, வார்டு–72 – டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் உள்ள ஆடு மாடு இறைச்சி கூடத்தில் மாடு அடிக்கும் பணி மேற்கொள்ளும் இடத்தின் கிழக்கு பக்கம் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள ஓடு வேய்ந்த கொட்டகை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.48/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.185/2013, நாள்.22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.6. ந.க.எண். இ3/4263/உ.பொ.73/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.245/2013 **பொருள் எண்.68**

துணை மின்நிலைய கட்டிடம் இடிக்க அனுமதி

வரிசை எண்	வார்டு எண்.73	மண்டலம்–6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	டாக்டர் அம்பேத்கார் காலேஜ் ரோடு மற்றும் ஸ்டீபன்சன் சாலை சந்திப்பில் உபயோகமற்று பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள துணை மின்நிலைய கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	தோராயமாக 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	கட்டிடம் – 1 ன் பரப்பளவு 22.44 சதுர மீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	210 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 48705/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	சாலை அகலம் படுத்தும் பணிக்காக
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்துள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–6
10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.12 நாள்.11.02.2013

எனவே, மண்டலம்–6, பகுதி–17, வார்டு–73 – டாக்டர் அம்பேத்கார் காலேஜ் ரோடு மற்றும் ஸ்டீபன்சன் சாலை சந்திப்பில் உபயோகமற்று பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள துணை மின்நிலைய கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.165/2013, நாள்.22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.6. ந.க.எண். இ3 4264/உ.பொ.73/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.246/2013 **பொருள் எண்.69**

பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள இரண்டு கட்டிடங்கள் இடிக்க அனுமதி

வரிசை எண்	வார்டு எண்.73	மண்டலம்–6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	எண்.71, டாக்டர் அம்பேத்கார் காலேஜ் ரோடு, பழைய மண்டலம்–3 பின்புறம் உபயோகமற்று பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள இரண்டு கட்டிடங்கள்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	தோராயமாக 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	கட்டிடம் – 1 ன் பரப்பளவு 23.1 சதுர மீட்டர் கட்டிடம் – 2ன் பரப்பளவு 23.52 சதுர மீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	பழைய மண்டலம் – 3 வளாகம் 200 ச.மீ
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ஏதுமில்லை
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	அம்மா உணவகம் சுற்றுப்புறம் தூய்மையாக பராமரிப்பதற்காக
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்துள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–6
10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.13 நாள்.11.02.2013

எனவே, மண்டலம்–6, பகுதி–17, வார்டு–73ல் எண்.71, டாக்டர் அம்பேத்கார் காலேஜ் ரோடு, பழைய மண்டலம்–3 பின்புறம் உபயோகமற்ற பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள இரண்டு கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 166/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.6. ந.க.எண். இ3/4265/உ.பொ.73/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.247/2013 **பொருள் எண். 70**

சத்துணவு கூடம் இடிக்க அனுமதி

வரிசை எண்	வார்டு எண்.73	மண்டலம்–6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள சென்னை துவக்கப்பள்ளி வளாகத்தில் உள்ள சத்துணவு கூடம் பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ளது
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	தோராயமாக 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	79.56 சதுர மீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	79.56 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 13149/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் உள்ளது.
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	புதிய சத்துணவு கூடம் கட்டும் பணிக்காக.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–6
10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.16 நாள்.11.02.2013

எனவே, மண்டலம்–6, வார்டு எண்.73ல் ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள சென்னை துவக்கப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள சத்துணவு கூட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 16.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.15/2013–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 182/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.6. ந.க.எண். இ3/4500/உ.பொ.73/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.02013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.248/2013 **பொருள் எண்: 71**

சத்துணவு கூடம் இடிக்க அனுமதி

வரிசை எண்	வார்டு எண்.73	மண்டலம்–6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	பழைய வாழைமா நகரில் உள்ள இரண்டு சத்துணவு கூடம் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. (சத்துணவு கூடம் எண்.661 மற்றும் 662)
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	தோராயமாக 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்.
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	74.20 சதுர மீட்டர் (சத்துணவு கூட எண்.661) 74.20 சதுர மீட்டர்(சத்துணவு கூட எண்.662)
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	200 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 13149/– + ரூ. 13149/– = ரூ.26298/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	உள்ளது
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	புதிய சத்துணவு கூடம் கட்டும் பணிக்காக
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–6
10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.17 நாள்.11.02.2013

எனவே, மண்டலம்–6, வார்டு எண்.73ல் பழைய வாழைமா நகரில் உள்ள இரண்டு சத்துணவு (சத்துணவு கூடம் எண்.661 மற்றும் 662) கூட கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 16.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.16/2013–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 183/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.1.ந.க.எண்.இ1/1348/02/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.249/2013 **பொருள் எண். 72**

மண்டலம் 1 – துப்புரவு பணி மேற்கொள்ளுதல் – பகுதி1ல் கோட்டம் 5 முதல் 9 வரை தேவைப்படும் பணியாளர்கள் 349 எண்ணிக்கை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் தினக்கூலி அடிப்படையில் தொழிலாளர்களை பணியமர்த்த – அனுமதி.

*****

01.பணியின் பெயர்:

வ. ஏண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	1	5 முதல் 9 வரை	மண்டலம் 1 பகுதி 1, வார்டு எண்.5 முதல் 9 வரை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் தினக்கூலி அடிப்படையில் 349 தொழிலாளர்கள் பணியமர்த்தி 12 மாத காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ளுதல்	375.79

2.மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண். நாள் : ஆணையர் அவர்களின் ஒப்புதல் நாள். 06,3,2013
மன்ற தீர்மான எண்.160
நாள் 06.03.2013

03. திட்ட குறியீட்டு எண். : பொருந்தாது

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை : 3,75,78,575.00
அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு இது சேவைப் பணி அலுவலக விலை விகிதம் பொருந்தாது. 2012–2013

அ) பணியின் செலவினம் : 3,75,78,575.00

ஆ) மேற்பார்வை செலவு : –

இ) சில்லரை மேற்பார்வை செலவு : –

ஈ) மற்ற எதிர்பாரா செலவு : –.

உ) மின்சாரம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் : – –

மொத்தம் : 3,75,78,575.00

05. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது நாள் :1. சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள் 28.02.2013
2. இந்தியன் எக்ஸ்பிரஸ்,28,2,2013
3. நமது எம்.ஜி.ஆர். நாள்28,02,2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 06.03.2013

07. ஒப்பந்தப் புள்ளி ஏற்று கொள்வதற்கான கடைசி நாள் : 08.03.2013

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 7 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லையெனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டது ? : ஒப்பங்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டன.

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டது : 3

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஒப்பந்த கால அறிவிப்பின் மூலம் கோரப்பட்டது. அவை பின்வருமாறு

இ–டென்டர் முறையில் மூன்று (Downloaded from Internet) ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது. ஒப்ப நாளான **08.03.2013** அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு

1. திருவாளர் எஸ் .அரிகிருஷ்ணன்
2. திருவாளர் எஸ்.மணி
3. திருவாளர் ஸ்கைலேன்ட் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ்

தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்ததில் திருவாளர் ஸ்கைலேன்ட் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ் குறைவான ஒப்ப வைப்புத் தொகை (EMD) செலுத்தியதால் அவர் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும் திருவாளர் எஸ் .அரிகிருஷ்ணன் மற்றும் திருவாளர் எஸ்.மணி அவர்களின் ஒப்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டதால் இந்த ஒப்பங்கள் தகுதிவாய்ந்த ஒப்பங்களாக கருதி ஒப்பந்ததாரரின் ஒப்பத்தின் நிதி ஆவணம் **12.03.2013** அன்று காலை **12.00** மணிக்கு திறக்கப்பட்டதன் அடிப்படையில் விலைப்புள்ளி ஒப்பீட்டு விவரம் கீழ்வருமாறு

வ. எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	பணியின் அலுவலக மதிப்பீட்டு தொகை	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை	2012–2013 ம் ஆண்டு விலைப்படி சதவிகிதம் அதிகம்/குறைவு
1	திருவாளர் எஸ் .அரிகிருஷ்ணன்	**375.79**	(ஒரு நபருக்கு ரூ.280/– x 365 நாட்களுக்கு x 349 தொழிலாளர்களுக்கு) ரூ.3,56,67,800.00	(–)5.08% குறைவு
2	திருவாளர் எஸ்.மணி	**375.79**	(ஒரு நபருக்கு ரூ.295/– x 365 நாட்களுக்கு x 349 தொழிலாளர்களுக்கு) ரூ.3,75,78,575.00	சமமாக உள்ளது.

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் எஸ்.அரிகிருஷ்ணன் அவருடன் உடனடியாக விலைக்குறைப்புக்கு அழைக்கப்பட்டது. குறைந்த ஒப்பத்திற்கான திருவாளர் எஸ் .அரிகிருஷ்ணன் அவர்கள் **15.03.2013** அன்று நாளிட்ட கடிதத்தில் நான் ஒப்பம் கோரும் போது மிகக் குறைவான ஒப்பத் தொகையே கோரியிருந்தேன். (ஒரு நபருக்கு ரூ.280/– x 365 நாட்களுக்கு x 349 தொழிலாளர்களுக்கு ஆகும் மொத்த தொகை ரூ.3,56,67,800.00) . எனவே மேலும் விலைக்குறைக்க இயலாது என தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

1. இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர் எஸ் .அரிகிருஷ்ணன் அவர்களுக்கு **2012–2013** ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டமதிப்பைவிட(–)5.08% குறைவானது ஆகும். ஒப்பத் தொகை ரூ.3,56,67,800.00க்கு பணி வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி பணி வழங்கவும்
2. மேலும் இப்பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி பணிகளை மேற்கொள்ளவும்,

எனவே மேற்காணும் இனங்களுக்கு (நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம)நிதி)வின் மூலமாக) மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **17.042013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.04.2013** அன்று தீர்மான எண்.**184/2013**, நாள். **22.04.2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.04.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **23.04.2013** அன்று தீர்மான எண்.**213/2013**, நாள்.**23.04.2013**–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.4.ந.க.எண். 1601/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.250/2013 **பொருள் எண். 73**

பணிகள்– 2012 – மண்டலம்–4, பகுதி–9 முதல் 11 வரை, வார்டு–34 முதல் 48 வரை தினக்கூலி சம்பள அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – அனுமதி.

****

பணியின் பெயர்

வ. எண்	வார்டு எண்	பணி/சாலையின்பெயர்	பணியின்விவரம்	மதிப்பீட்டுத் தொகை இலட்சம்
1	34 முதல் 48 வரை	279 பணியாளர்களை கொண்டு வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரித்தல், சாலைகளை பெருக்குதல் ஆகிய பணிகளை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் (167 நாட்களுக்கு)	தினக்கூலி சம்பளம் அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளுதல்	ரூ.1,37,44,935/–

2	மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள்	பணிக்கான நிர்வாக அனுமதியை மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஒப்பம் கோர முதன்மை செயலாளர்/ஆணையாளர் அவர்களிடம் பெறப்பட்ட ஆணை நாள்23/03/2013
3	திட்டக் குறியீட்டு எண்.	பொருந்தாது
4	ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு.	ரூ. 137.45 இலட்சம் 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி
	அ) பணியின் செலவினம்	ரூ.1,37,44,935/–
	ஆ) மேற்பார்வை செலவினம்	ரூ. –––
	இ) சில்லரை மேற்பார்வை செலவு	ரூ. –––
	ஈ) மற்ற எதிர்பாரா செலவு	ரூ. –––
	உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம்	ரூ. –––
	மொத்தம்	ரூ.1,37,44,935/–
5	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	சென்னை மாநகராட்சி செய்தி மலர் 28/03/2013
6	ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்	10/04/2013
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	12/04/2013
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.	இல்லை தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் ஆணை நாள் 26/03/2013
9	பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு	வருவாய் நிதியின்கீழ்
10	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	11/7/2013

மேற்கண்ட பணிக்கான நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஒப்பம் கோர முதன்மை செயலாளர்/ஆணையாளர் அவர்களிடம் பெறப்பட்ட ஆணையின் அடிப்படையில் ஒப்பம் கோரப்பட்டது

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளாக குறைந்த ஒப்பந்தகால அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் ஒப்ப படிவம் செலுத்தப்பட்டு ஒப்பந்ததராரல் பதிவுறக்கம் செய்யப்பட்ட 2 ஒப்ப படிவங்கள் பெறப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி நாளான 12/04/2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ் வருமாறு.

திருவாளர்.நெல்லை மோட்டாஸ் மற்றும் திரு.எம்.ஹரிராமன் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேற்கண்ட பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதால் முதலில் தொழில் நுட்ப அனுபவம் மற்றும் ஒப்ப ஆவணத்தில் கோரப்பட்ட தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் திருவாளர்.நெல்லை மோட்டாஸ் அவர்கள் கீழ்கண்ட ஆவணைங்களை இணைத்துள்ளார்

2009–2010ஆம் ஆண்டில் ரூ.1,11,20,680.00க்கு பணிபுரிந்துள்ளார்

2010–2011ஆம் ஆண்டில் ரூ1,56,42,620.00க்கு பணிபுரிந்துள்ளார்

2011–2012ஆம் ஆண்டில் ரூ.1,93,81,400.00க்கு பணிபுரிந்துள்ளார்

மேலும் ஒப்பந்ததராரின் பணி குறித்த பணியாணையின் நகல் ஒப்பத்துடன் இணைத்துள்ளார்.

திரு.எம்.ஹரிராமன்அவர்கள் கீழ்கண்ட ஆவணைங்களை இணைத்துள்ளார்

2009–2010ஆம் ஆண்டில் ரூ.84,40,396.00க்கு பணிபுரிந்துள்ளார்

2010–2011ஆம் ஆண்டில் ரூ.38,82,581.00க்கு பணிபுரிந்துள்ளார்

2011–2012ஆம் ஆண்டில் ரூ.74,84,867.00க்கு பணிபுரிந்துள்ளார்

மேலும் ஒப்பந்ததராரின் பணி குறித்த பணியாணையின் நகல் ஒப்பத்துடன் இணைத்துள்ளார்.

ஒப்பந்த விதி எண் 4(iv)படி கடந்த மூன்று நிதியாண்டில் ஏதாவது ஒரு நிதியாண்டில் ஒப்பந்ததாரர் ஒரு கோடிக்கு மேல் பணிகள் முடித்திருக்கவேண்டும் ஆனால் மேற்கண்ட பணிக்கான ஒப்பந்ததாரர்களில் திரு.எம்.ஹரிராமன் அவர்கள் இணைத்துள்ள ஆவணத்தின் அடிப்டையில் 2009–2010ஆம் ஆண்டில் அதிக பட்சமாக ரூ.84,40,396.00 மட்டுமே பணிபுரிந்துள்ளதால் இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது. திருவாளர்.நெல்லை மோட்டாஸ் அவர்கள் இணைத்துள்ள ஆவணத்தின் அடிப்படையில் கடந்த மூன்றாண்டுகளிலும் ஒப்ப விதியின் படி ஒரு கோடிக்கு மேல் பணிகள் மேற்கொண்டுள்ளார்

மேற்கண்ட பணிக்கான ஒப்பீட்டு விபரம் பின்வருமாறு.

வ. எண்	ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர்	பணியில் அலுவலக மதிப்பு	ஒப்பந்ததாரரி ன் ஒப்பத் தொகை	2012–2013 விலை விகிதம் அதிகம்/குறைவு
1	திருவாளர்.நெல்லை மோட்டாஸ்	ரூ.295x279 நபர்கள்x167நாட்கள்= ரூ. 1,37,44,935/–	ரூ.260x279 நபர்கள்x167நாட்கள்= ரூ. 1,21,14,180.00/–	(–)11.86% குறைவு

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.நெல்லை மோட்டாஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பதொகை ரூ. 1,21,14,180.00/–என்பது இவ்வலுலவலக விலை விபரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)11.86% குறைவுவாகும் . மேலும் விலை குறைப்பு தொடர்பாக உடனடியாக விலை குறைப்புக்கு அழைக்கப்பட்டதில் ஒப்பத்ததாரர் ஏற்கனவே வழங்கிய ஒப்பப்புள்ளி தொகையான ரூ.260/– லிருந்து குறைக்க இயலாது என 15.04.2013 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்தார்

இப்பணி துப்புரவு பணி என்பதாலும் தற்போது வெளிச்சந்தையில் குறைந்த ஊதியத்திற்கு பணியாளர்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளதாலும் துப்புரவு பணி செய்ய வேண்டியதின் அவசியம் மற்றும் அவசர கருதி ஒப்பந்ததாரர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலே ஒப்பப்புள்ளி தொகையை ஏற்கலாம் என கருதப்படுகிறது.

1. மேற்கண்ட பணிக்கான நிர்வாக அனுமதியை மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு கோரிய ஒப்பத்தில் பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்.நெல்லை மோட்டாஸ் அவர்களுக்கு அலுலவலக விலை விபரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)11.86% குறைவான (ரூ.260x279 நபர்கள்x167நாட்கள்=ரூ. 1,21,14,180.00/–) **ஒப்பத்தொகை** ரூ. 1,21,14,180.00/– க்கு வழங்கவும்

2. மண்டலம்–4, பகுதி–9,10மற்றும் 11, வார்டு–36,37,44,45 மற்றும் 46ல் ஆகிய வார்டுகளுக்கும் , கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கும் , இரவு துப்புரவு பணிக்கும் மற்றும் கூடுதலாக தேவைப்படும் வார்டுகளிலும் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் 279 பணியாளர்களை கொண்டு 1.6.2013 முதல் 14.11.2013 வரை துப்புரவு பணியை மேற்கொள்ளவும்.

1 மற்றும் 2 இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி நிலைக்குழு பணிகள் மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.167/2013, நாள்.22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.199/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ம.7.ந.க.எண். இ1/17230 /01 /2013

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 16.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.251/2013 **பொருள் எண். 74**

மண்டலம் – 7 (அம்பத்தூர்) – பகுதி 18க்கு – விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு அனுமதி

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்–7) 41.32 சதுர .கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 35 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2235 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 4,78,136 ஆகும். மேலும் நகரமயமாதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை அதிகரித்து வருகிறது.

மண்டலம்–7 (அம்பத்தூர்) பகுதிகளில் தினமும் 300 மெ.டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. தனியார் நிறுவனமாக திருவாளர்கள். நீல் மெட்டல் பனால்கா மூலம் 4 வார்டுகள், சென்னை மாநகராட்சி மூலம் 9 வார்டுகள் மற்றும் 2 வார்டுகளில் சென்னை மாநகராட்சி மற்றும் நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இணைந்து துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இந்த குறிப்பிட்ட வார்டுகளில் பணியினை செய்ய பணி ஆணை ஆகஸ்டு 2013 வரை உள்ளது. இப்பணி குறுகிய காலத்தில் முடிவடைய உள்ள நிலையில் இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியால் இப்பணியினை செய்து விட முடியாது என்ற நிலையில் படிப்படியாக சென்னை மாநகராட்சி ஒவ்வொரு வார்டாக துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின்படி படிவம் 1ல் குறிப்பிள்ளவாறு

- மறு ஆய்வின்படி பகுதி 18க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 847
- தற்போது பகுதி 18ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 213
- மறு ஆய்வின் படி பகுதி 18க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 634

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதியாவதால் அனைத்து தெருக்களிலும் பெருக்கும் பணிக்கு தற்போது அவசியம் ஏற்படவில்லை. மேலும் சாலை வசதிகள் முழுமையடைந்த பின்பு தான் ஆராய்ந்து அதற்கேற்ப பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே இக்கருத்துகளின் அடிப்படையில் 847 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 213 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து 470 எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியினை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் நிரப்ப வேண்டி உள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	18	470	5,06,07,250/–

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை ரூ.5,06,07,250/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிக்காலம் ஒரு வருடம் என நிர்ணயித்து துப்புரவு பணிகளை பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத வண்ணம் சுகாதார சீர்கேட்டை கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளுவதற்கு நிபந்தனைகளுடன் இரண்டு உறை முறையில் தகுந்தி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 22.02.2013 அன்று ஆங்கில நாளிதழ் (New Indian Express), தமிழ் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் 21.02.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில் நுட்ப முறையிலும் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.03.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

- திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்
- திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி
- திருவாளர்கள். பால்க்கன் (C) செக்யூரிட்டி சர்வீஸ் (Private) லிமிடெட்

பெறப்பட்ட மூன்று ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 3.04.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

வ எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்	5,06,07,250/–	(ரூ.287X470 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.4,92,34,850/–	(–) 2.71% சதவீதம் குறைவு
2	திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி	5,06,07,250/–	(ரூ.281X470 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.4,82,05,550/–	(–) 4.74% சதவீதம் குறைவு
3	திருவாளர்கள்.பால்க்கன் (C) செக்யூரிட்டி சர்வீஸ் (Private) லிமிடெட்	5,06,07,250/–	(ரூ.393.26X470 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.6,74,63,753/–	(+) 33.31% சதவீதம் அதிகம்

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் 3.04.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/– ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 4.74% சதவீதம் குறைவாகும்.

மேற்படி பணியினை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் –7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியான அம்பத்தூர் மண்டலம்–7ல் பகுதி –18, துப்புரவு பணியின் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படா வண்ணம் தினசரி சேரும் குப்பைகளை உடனுக்குடன் தனியார் மூலம் நியமிக்கப்படும் (ஒப்பந்தபுள்ளியில் கோரியுள்ளபடி) துப்புரவு பணியாளர்களை கொண்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதை கருத்தில் கொண்டு

- இந்த ஒப்பந்தபுள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தபுள்ளியாகும். மேலும் இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/– ஆகும். இப்பணியின் பணிகாலம் ஒரு வருடமாகும்.
- இவ்வொப்பத்தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 4.74% சதவீதம் குறைவாகும்.

ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியின் அவசியம் மற்றும் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 4.74% சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி படி மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி முதன்மை செயலாளர் / ஆணையர் அவர்கள் ஒப்பதல் அளித்துள்ளார்.

எனவே, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும், பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 163/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 193/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

****

ம.7.ந.க.எண். இ1/17230 /02 /2013

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 16.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.252/2013 **பொருள் எண்.75**

மண்டலம் – 7 (அம்பத்தூர்) – பகுதி 19க்கு – விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – பணிக்கு அனுமதி

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்–7) 41.32 சதுர .கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 35 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2235 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 4,78,136 ஆகும். மேலும் நகரமயமாதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை அதிகரித்து வருகிறது.

மண்டலம்–7 (அம்பத்தூர்) பகுதிகளில் தினமும் 300 மெ.டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. தனியார் நிறுவனமாக திருவாளர்கள். நீல் மெட்டல் பனால்கா மூலம் 4 வார்டுகள், சென்னை மாநகராட்சி மூலம் 9 வார்டுகள் மற்றும் 2 வார்டுகளில் சென்னை மாநகராட்சி மற்றும் நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இணைந்து துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இந்த குறிப்பிட்ட வார்டுகளில் பணியினை செய்ய பணி ஆணை ஆகஸ்டு 2013 வரை உள்ளது. இப்பணி குறுகிய காலத்தில் முடிவடைய உள்ள நிலையில் இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியால் இப்பணியினை செய்து விட முடியாது என்ற நிலையில் படிப்படியாக சென்னை மாநகராட்சி ஒவ்வொரு வார்டாக துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி

- மறு ஆய்வின்படி பகுதி 19க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 691
- தற்போது பகுதி 19ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 173
- மறு ஆய்வின் படி பகுதி 19க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 518

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதியாவதால் அனைத்து தெருக்களிலும் பெருக்கும் பணிக்கு தற்போது அவசியம் ஏற்படவில்லை. மேலும் சாலை வசதிகள் முழுமையடைந்த பின்பு தான் ஆராய்ந்து அதற்கேற்ப பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே இக்கருத்துகளின் அடிப்படையில் 691 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 173 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து 470 எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியினை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் நிரப்ப வேண்டி உள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	19	470	5,06,07,250/–

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் கூட்ட நடவடிக்கை குறிப்பில் அறிவுறுத்தியபடி எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை ரூ.5,06,07,250/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிக்காலம் ஒரு வருடம் என நிர்ணயித்து துப்புரவு பணிகளை பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத வண்ணம் சுகாதார சீர்கேட்டை கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளுவதற்கு நிபந்தனைகளுடன் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 22.02.2013 அன்று ஆங்கில நாளிதழ் (New Indian Express), தமிழ் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் 21.02.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில் நுட்ப முறையிலும் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.03.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

- திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்
- திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ்

பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 3.04.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

வ எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்	5,06,07,250/–	(ரூ.288X470 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.4,94,06,400/–	(–) 2.37% சதவீதம் குறைவு
2	திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ்	5,06,07,250/–	(ரூ.281X470 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.4,82,05,550/–	(–) 4.74% சதவீதம் குறைவு

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்கள் 3.04.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/– ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 4.74% சதவீதம் குறைவாகும்.

மேற்படி பணியினை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் –7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியான அம்பத்தூர் மண்டலம்–7ல் பகுதி –19, துப்புரவு பணியின் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படா வண்ணம் தினசரி சேரும் குப்பைகளை உடனுக்குடன் தனியார் மூலம் நியமிக்கப்படும் (ஒப்பந்தபுள்ளியில் கோரியுள்ளபடி) துப்புரவு பணியாளர்களை கொண்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதை கருத்தில் கொண்டு

- இந்த ஒப்பந்தபுள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தபுள்ளியாகும். மேலும் இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/– ஆகும். இப்பணியின் பணிகாலம் ஒரு வருடமாகும்.
- இவ்வொப்பத்தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 4.74% சதவீதம் குறைவாகும்.

ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியின் அவசியம் மற்றும் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 4,74% சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஜெ.கே. டிரான்ஸ் அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 4.74% சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.4,82,05,550/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும், மன்றத்தின் ஒப்புதல் எதிர் நோக்கி, பணி ஆணை வழங்கியதற்கும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 157/2013 நாள் 17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 188/2013 நாள் 19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

****

ம.7.ந.க.எண். இ1/17230 /03 /2013

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 16.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.253/2013 **பொருள் எண்.76**

மண்டலம் – 7 (அம்பத்தூர்) – பகுதி 20க்கு – விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – பணிக்கு அனுமதி.

****

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்–7) 41.32 சதுர.கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 35 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2235 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 4,78,136 ஆகும். மேலும் நகரமயமாதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை அதிகரித்து வருகிறது.

மண்டலம்–7 (அம்பத்தூர்) பகுதிகளில் தினமும் 300 மெ.டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. தனியார் நிறுவனமாக திருவாளர்கள். நீல் மெட்டல் பனால்கா மூலம் 4 வார்டுகள், சென்னை மாநகராட்சி மூலம் 9 வார்டுகள் மற்றும் 2 வார்டுகளில் சென்னை மாநகராட்சி மற்றும் நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இணைந்து துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . நீல் மெட்டல் பனால்கா நிறுவனம் இந்த குறிப்பிட்ட வார்டுகளில் பணியினை செய்ய பணி ஆணை ஆகஸ்டு 2013 வரை உள்ளது. இப்பணி குறுகிய காலத்தில் முடிவடைய உள்ள நிலையில் இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியால் இப்பணியினை செய்து விட முடியாது என்ற நிலையில் படிப்படியாக சென்னை மாநகராட்சி ஒவ்வொரு வார்டாக துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி

- மறு ஆய்வின்படி பகுதி 20க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 672
- தற்போது பகுதி 20ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 0
- மறு ஆய்வின் படி பகுதி 20க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 672

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதியாவதால் அனைத்து தெருக்களிலும் பெருக்கும் பணிக்கு தற்போது அவசியம் ஏற்படவில்லை. மேலும் சாலை வசதிகள் முழுமையடைந்த பின்பு தான் ஆராய்ந்து அதற்கேற்ப பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

எனவே இக்கருத்துகளின் அடிப்படையில் 672 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுது 560 எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியினை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் நிரப்ப வேண்டி உள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	20	560	6,02,98,000/–

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் கூட்ட நடவடிக்கை குறிப்பில் அறிவுறுத்தியபடி எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை ரூ.6,02,98,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிக்காலம் ஒரு வருடம் என நிர்ணயித்து துப்புரவு பணிகளை பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத வண்ணம் சுகாதார சீர்கேட்டை கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளுவதற்கு நிபந்தனைகளுடன் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 22.02.2013 அன்று ஆங்கில நாளிதழ் (New Indian Express), தமிழ் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் 21.02.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில் நுட்ப முறையிலும் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.03.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

- திருவாளர்கள்.நெல்லை மோட்டார்ஸ்
- திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட்,
- திருவாளர்கள்.கிளாசிக் பில்டிங் மெயின்டனஸ்
- திருவாளர்கள்.ஐடெக் சர்வீஸஸ்

பெறப்பட்ட நான்கு ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 3.04.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

வ எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.நெல்லை மோட்டார்ஸ்	6,02,98,000/–	(ரூ.279X560 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.5,70,27,600/–	(–) 5.42% சதவீதம் குறைவு
2	திருவாளர்கள்.ஜி.எஸ்.கே. பெசலிட்டி பிரைவேட் லிமிடெட்,	6,02,98,000/–	(ரூ.274X560 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.5,60,05,600/–	(–) 7.12% சதவீதம் குறைவு
3	திருவாளர்கள்.கிளாசிக் பில்டிங் மெயின்டனஸ்	6,02,98,000/–	(ரூ.330X560 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.6,74,52,000/–	(+) 11.86% சதவீதம் அதிகம்
4	திருவாளர்கள்.ஐடெக் சர்வீஸஸ்	6,02,98,000/–	(ரூ.281 X 560 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.5,74,36,400/–	(–) 4.74% சதவீதம் குறைவு

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்கள் 3.04.2013 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.5,60,05,600/–ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 7.12% சதவீதம் குறைவாகும்.

மேற்படி பணியினை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் –7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியான அம்பத்தூர் மண்டலம்–7ல் பகுதி –20, துப்புரவு பணியின் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படா வண்ணம் தினசரி சேரும் குப்பைகளை உடனுக்குடன் தனியார் மூலம் நியமிக்கப்படும் (ஒப்பந்தபுள்ளியில் கோரியுள்ளபடி) துப்புரவு பணியாளர்களை கொண்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதை கருத்தில் கொண்டு

- இந்த ஒப்பந்தபுள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தபுள்ளியாகும். மேலும் இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்களின் ஒப்பத்தொகை ரூ.5,60,05,600/– ஆகும். இப்பணியின் பணிகாலம் ஒரு வருடமாகும்.
- இவ்வொப்பத்தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–)7.12% சதவீதம் குறைவாகும்.

ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியின் அவசியம் மற்றும் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–)7.12% சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.5,60,05,600/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.ஜி.எஸ்.கே.பெசலிட்டி பிரைவேட் லிமிடெட், அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 7.12% சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.5,60,05,600/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும், பணி ஆணை வழங்கியதற்கும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 158/2013 நாள் 17.4.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 189/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’.

****

ம.அ.7.ந.க.எண். இ1/3701 /0 1/2012

முதன்மை செயலாளர் (ம) ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.254/2013 **பொருள் எண். 77**

மண்டலம் – 7 (அம்பத்தூர்) –பகுதி 18க்கு – விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் பணியாளர்களை கொண்டு மலேரியா பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் (மண்டலம்–7) 41.32 ச.கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்த மண்டலத்தில் 135 கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும் 3 கி.மீ நீளமுள்ள மழைநீர் கால்வாய்களும், 29.4 கி.மீ.நிளமுள்ள வாய்க்காலும் உள்ளது. மேலும் 133500 தனியார் மேல்நிலைத் தொட்டிகளும், 10484 கீழ்நிலைத் தொட்டிகளும், சிறிதும் பெரிதுமான 4 ஏரி, குளங்களும், 21 கழிவுநீர்க் குட்டைகளும் உள்ளது.

இம்மண்டலத்தில் தொற்றுநோய் பரவலைத் தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியைத் தடுக்கவும், மேலும் கால்வாய் நீரோட்டத்தை பராமரிக்கவும், மற்றும் கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள, பொது சுகாதாரப் பிரிவில் மொத்தம் 124 நிரந்தரப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். மேலும் 11.02.2013 முதல் 89 தினங்களுக்கு 157 ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

ஆனால் ஆட்கள் தேவை குறித்து ஆய்வின்படி, இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள 371 பணியாளர்கள் கொசுப்புழு தடுப்பு பணிகளுக்கும், 135 பணியாளர்கள் கால்வாய் பணிக்கும், 31 பணியாளர்கள் வாய்க்கால் பணிகளுக்கும், 30 பணியாளர்கள் தெளிப்பான் பணிக்கும், 15 பணியாளர்கள் புகைபரப்பும் பணிக்கும் ஆக மொத்தம் 582 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்சமயம், பணிபுரியும் 124 நிரந்தர பணியாளர்கள் தவிர்த்து கூடுதலாகத் தேவைப்படும் 458 பணியாளர்களை 2013–14 ஆம் நிதியாண்டிற்கு, குறைந்த பட்ச தினசரி ஊதியமான ரூ.289/–ற்கு ஓராண்டிற்கு ஒப்பம் கோரி தேர்வு செய்து கொள்ள தோராய செலவினம் ரூ. 289 x 458 x 365= 4,83,12,130/– என ஓர் ஆண்டிற்கு தேவைப்படுகிறது.

அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை ரூ.4,83,12,130/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு தனியார் மூலம் தேவையான பணியாளர்கள் பகுதி 18க்கு 167 எண்ணிக்கை அளவில் தினக்கூலி அடிப்படையில் ரூ.289x167x365= 1,76,15,995/– வீதம் ஒப்பம் கோரி பணியமர்த்தவும், பணிக்காலம் ஒரு வருடம் என நிர்ணயித்து மலேரியா பணியாளர்களை நியமிக்க, பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத வண்ணம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளுவதற்கு நிபந்தனைகளுடன் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 01.03.2013 அன்று ஆங்கில நாளிதழ் (Indian Express)லும், தமிழ் நாளிதழான மக்கள் குரல் செய்தித் தாளிலும் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலர் 19 நாள் 28.02.2013 ஆகியவற்றிலும் பிரசுரிக்கப்பட்டது. இணைய தளத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்ப முறையில் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 05.04.2013 அன்று கலந்து கொண்ட ஆறு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

1. திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்
2. திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி
3. திருவாளர்கள். கிலாஸிக் பில்டிங் மெயின்ட்டனஸ்
4. திருவாளர்கள். மாடர்ன் மேனேஜ்மெண்ட் ஆப் பெஸ்ட்
5. திருவாளர்கள் சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
6. திருவாளர்கள் வெங்கடேஷ்வரா அக்ரோ கார்ப்பரேசன்

பெறப்பட்ட ஆறு ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 10.04.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

வ எ ண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டு தொகை 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்	1,76,15,995/–	(ரூ.280 X 167 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.1,70,67,400/–	(–) 3.11% குறைவு
2	திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி	1,76,15,995/–	(ரூ.274 X 167 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.1,67,01,670/–	(–) 5.19% குறைவு
3	திருவாளர்கள். கிலாஸிக் பில்டிங் மெயின்ட்டனஸ்	1,76,15,995/–	(ரூ.290 X 167 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.1,76,76,950/–	(+) 0.35% அதிகம்
4	திருவாளர்கள். மாடர்ன் மேனேஜ்மெண்ட் ஆப் பெஸ்ட்	1,76,15,995/–	(ரூ.450 X 167 நபர்கள் X365 நாட்கள்) =ரூ.2,74,29,750/–	(+) 55.71% அதிகம்
5	திருவாளர்கள் சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்	1,76,15,995/–	(ரூ.360 X 167 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.2,19,43,800/–	(+) 24.57%அதிகம்
6	திருவாளர்கள் வெங்கடேஷ்வரா அக்ரோ கார்ப்பரேசன்	1,76,15,995/–	(ரூ.351ஓ167 நபர்கள் X 365 நாட்கள்) =ரூ.2,13,95,205/–	(+) 21.45%அதிகம்

குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,67,01,670/– ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 5.19 சதவீதம் குறைவாகும்.

திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் வைப்புத் தொகையாக 2 சதவீதம் ரூ.3, 54,000/– செலுத்தியுள்ளார். 5 சதவீதத்திற்கு குறைவாக ஒப்பத்தொகை அளித்துள்ளதால் 1 சதவீதம் பிணை வைப்புத் தொகையும், 2 சதவீதம் கூடுதல் காப்புத் தொகையும் செலுத்த வேண்டும். ஆனால் இவர் 1 சதவீதம் பிணை வைப்புத் தொகையும், 1 சதவீதம் கூடுதல் காப்புத் தொகையும் செலுத்தியதால், மீதம் 1 சதவீதம் கூடுதல் காப்புத் தொகையை செலுத்துமாறும், விலைக்குறைப்பு செய்யவும் கோரப்பட்டது.

மேற்படி பணிக்கு திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் கூடுதல் காப்புத் தொகை 1 சதவீதத்தை வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளார். மேலும் இப்பணிக்கு மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் கடிதம் அளித்துள்ளார்.

பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு இப்பணியினை குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் கூடுதல் காப்புத் தொகை 1 சதவீதத்தை செலுத்திவிட்டபடியால் இப்பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் –7 அவர்களால் பொருள் நிரல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியான அம்பத்தூர் மண்டலம்–7ல் பகுதி –18, பொது சுகாதாரப் பணியின் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படா வண்ணம் தொற்றுநோய் பரவலைத் தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியைத் தடுக்கவும், மேலும் கால்வாய் நீரோட்டத்தை பராமரிக்கவும், மற்றும் கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் வேண்டியுள்ளது. தினசரி மேற்படி பணிகளை உடனுக்குடன் தனியார் மூலம் நியமிக்கப்படும் (ஒப்பந்தபுள்ளியில் கோரியுள்ளபடி) மலேரியா பணியாளர்களை கொண்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதை கருத்தில் கொண்டு

- குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,67,01,670/– ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக மதிப்பீட்டை விட (–) 5.19 சதவீதம் குறைவாகும். இப்பணியின் பணிகாலம் ஒரு வருடமாகும்,
- இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களுக்கு கூடுதல் காப்புத் தொகை 1 சதவீதத்தை செலுத்திவிட்டபடியால் இப்பணியினை வழங்க,

ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியின் அவசியம் மற்றும் முக்கிய தன்மையை கருத்தில் கொண்டு திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்கள் அளித்த ஒப்பத்தை ஏற்று பணியினை வழங்க ஒப்பக்குழும கூட்டம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 5.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.1,67,01,670/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி முதன்மை செயலாளர் / ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள்.கிராம்ஸ் என்விரான்மென்டல் புரடக்ஷன் ஏஜென்ஸி அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையை விட (–) 5.19 சதவீதம் குறைவான ஒப்பத்தொகை ரூ.1,67,01,670/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7 (2)–ன் படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.04.2013 அன்று தீர்மான எண். 43/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 195/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.

****

ம.7.ந.க.எண். இ1/3701 /02 /2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.255/2013 பொருள் எண்:78

மண்டலம் – 7 (அம்பத்தூர்) – பகுதி 19க்கு – விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் பணியாளர்களை கொண்டு மலேரியா பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள்.நெல்லை மோட்டார்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர் (மண்டலம்–7) 41.32 ச.கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்த மண்டலத்தில் 135 கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும் 3 கி.மீ நீளமுள்ள மழைநீர் கால்வாய்களும், 29.4 கி.மீ. நீளமுள்ள வாய்க்காலும் உள்ளது. மேலும் 133500 தனியார் மேல்நிலைத் தொட்டிகளும், 10484 கீழ்நிலைத் தொட்டிகளும், சிறிதும் பெரிதுமான 4 ஏரி, குளங்களும், 21 கழிவுநீர்க் குட்டைகளும் உள்ளது.

இம்மண்டலத்தில் தொற்றுநோய் பரவலைத் தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியைத் தடுக்கவும், மேலும் கால்வாய் நீரோட்டத்தை பராமரிக்கவும், மற்றும் கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள, பொது சுகாதாரப் பிரிவில் மொத்தம் 124 நிரந்தரப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். மேலும் 11.02.2013 முதல் 89 தினங்களுக்கு 157 ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

ஆனால் ஆட்கள் தேவை குறித்து ஆய்வின்படி, இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள 371 பணியாளர்கள் கொசுப்புழு தடுப்பு பணிகளுக்கும், 135 பணியாளர்கள் கால்வாய் பணிக்கும், 31 பணியாளர்கள் வாய்க்கால் பணிகளுக்கும், 30 பணியாளர்கள் தெளிப்பான் பணிக்கும், 15 பணியாளர்கள் புகைபரப்பும் பணிக்கும் ஆக மொத்தம் 582 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்சமயம், பணிபுரியும் 124 நிரந்தர பணியாளர்கள் தவிர்த்து கூடுதலாகத் தேவைப்படும் 458 பணியாளர்களை 2013–14 ஆம் நிதியாண்டிற்கு, குறைந்த பட்ச தினசரி ஊதியமான ரூ.289/–ற்கு ஓராண்டிற்கு ஒப்பம் கோரி தேர்வு செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.289 x 458 x 365= 4,83,12,130/– என ஓர் ஆண்டிற்கு தேவைப்படுகிறது.

அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணியினை ரூ.4,83,12,130/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு தனியார் மூலம் தேவையான பணியாளர்கள் பகுதி 19க்கு 146 எண்ணிக்கை அளவில் தினக்கூலி அடிப்படையில் ரூ.289x146x365=ரூ.1,54,00,810/– வீதம் ஒப்பம் கோரி பணியமர்த்தவும், பணிக்காலம் ஒரு வருடம் என நிர்ணயித்து மலேரியா பணியாளர்களை நியமிக்க, பொது மக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத வண்ணம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளுவதற்கு நிபந்தனைகளுடன் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 01.03.2013 அன்று ஆங்கில நாளிதழ் (Indian Express)லும், தமிழ் நாளிதழான மக்கள் குரல் செய்தித் தாளிலும் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலர் 19 நாள் 28.02.2013 ஆகியவற்றிலும் பிரசுரிக்கப்பட்டது. இணைய தளத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்ப முறையில் ஒப்பந்தபுள்ளி பதிவிறக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 05.04.2013 அன்று கலந்து கொண்ட ஏழு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

- திருவாளர்கள்.அன்னை எர்த் மூவர்ஸ்
- திருவாளர்கள்.நெல்லை மோட்டார்ஸ்
- திருவாளர்கள். ஹைடெக் சர்வீஸஸ்
- திருவாளர்கள். மாடர்ன் மேனேஜ்மெண்ட் ஆப் பெஸ்ட்
- திருவாளர்கள் சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
- திருவாளர்கள் வெங்கடேஷ்வரா அக்ரோ கார்ப்பரேசன்
- திரு. பூபாலன்

பெறப்பட்ட ஏழு ஒப்பங்களில் அவர்களுடைய தொழில் நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன. பின்னர் ஒப்பத் தொகை ஆவணங்கள் 10.04.2013 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதன் விவரம் கீழ்வருமாறு

முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 20–4–2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.261/2013 **பொருள் எண். 84**

மண்டலம் 11 – சிப்பம் 4 'சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்' சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள்– ஒப்பந்த புள்ளிகள் – அனுமதி .

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு இரண்டாம் கட்டமாக 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் வளசரவாக்கம் மண்டலத்தில் (மண்டலம் – 11) 33.86 கி.மீ. நீளமுள்ள 37 சாலைகளில் 50.71 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.8.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. ஐந்து சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 4– 7 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 11ல் உள்ள 7 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.1090 இலட்சங்கள்.

முதல் அழைப்பு ஒப்பந்த அறிவிப்பு 08.11.2012 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் நாள் 09.11.2012 அன்று சென்னை மாநகராட்சி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 06.12.2012 அன்று தொழில்நுட்ப ஆவணத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமறு,

சிப்பம்– 4 (முதல் அழைப்பு)

1. திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ்
2. திருவாளர். ஆர்.கே. அண்டு சன்ஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 4ல் கலந்து கொண்ட திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் திருவாளர். ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களாக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 10.12.2012 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 4

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ்	108927075.71	137171866.44	(+) 25.93

2	திருவாளர். ஆர்.கே. அண்டு சன்ஸ்	108927075.71	147759578.20	(+) 35.65

சிப்பம்–4 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. 27.12.2012 அன்று வழங்கப்பட்ட கடிதத்தில் அலுவலக விலையை விட (+) 13.49% அதிகமாகவும் சந்தை விலையைவிட (–) 0.21% குறைவாகவும் பணி செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். மேலும் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தையில் திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளதால் ஒப்பம் ரத்து செய்யப்பட்டு இரண்டாம் அழைப்பு ஒப்பம் 21.01.2013 அன்று கோரப்பட்டது. அவ்வொப்பத்திற்கான ஒப்பந்த அறிவிப்பு 04.01.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் நமது எம்.ஜி.ஆர் நாள் 04.01.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 21.01.2013 அன்று தொழில் நுட்ப ஆவணத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

சிப்பம்– 4 (இரண்டாம் அழைப்பு)

1. திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 4ல் கலந்து கொண்ட திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒரு ஒப்பந்ததாரர் நிதி ஆவணம் 23.01.2013 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 4

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ்	108927075.71	125261343.26	(+) 15.00 %

சிப்பம்–4 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் 28.01.2013 நாளிட்ட கடிதத்தில் அலுவலக விலையைவிட (+) 2.84% அதிகமாகவும் சந்தை விலையைவிட (–) 11.05% குறைவாகவும் பணி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும், 2வது விலைக்குறைப்பு பேச்சு வார்த்தையில் திருவாளர். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மேலும், விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளதால் ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மூன்றாம் அழைப்பு ஒப்பம் 22.02.2013 அன்று கோரப்பட்டது. அவ்வொப்பத்திற்கான ஒப்பந்த அறிவிப்பு 07.02.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் நமது எம்.ஜி.ஆர் நாள் 07.02.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. ஒப்பங்கள் ஏதும் பெறப்படாததால் நான்காம் அழைப்பு ஒப்பம் 20.03.2013 அன்று கோரப்பட்டது. அவ்வொப்பத்திற்கான ஒப்பந்த அறிவிப்பு 07.03.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் தினமணி நாள்.01.03.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 20.03.2013 அன்று தொழில் நுட்ப ஆவணத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

சிப்பம்– 4 (நான்காம் அழைப்பு)

1. திரு சி.என். அண்ணாதுரை

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 4ல் கலந்து கொண்ட திருசி.என்.அண்ணாதுரை அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டு. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் நிதி ஆவணம் 22.03.2013 அன்று திறக்கப்பட்டது.

சிப்பம் 4

வ.எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு சி.என். அண்ணாதுரை	108927075.71	133590458.61	(+) 22.64

சிப்பம்–4 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு சி.என்.அண்ணாதுரை அவர்களிடம் முதல் முறை விலைக்குறைப்பு செய்ய கோரி 22.03.2013 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில் திரு சி.என்.அண்ணாதுரை அவர்கள் 26.03.2013 நாளிட்ட கடிதத்தில் அலுவலக விலையைவிட (+) 7.48 % அதிகமாகவும் சந்தை விலையைவிட (–) 1.46% குறைவாகவும் பணி செய்ய கடிதம் அளித்துள்ளார். இரண்டாவது முறை விலைகுறைப்பு செய்ய கோரி 27.03.2013 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் 28.03.2013 நாளிட்ட கடிதத்தில் அலுவலக விலையைவிட (+) 5.00 % அதிகமாகவும் சந்தை விலையைவிட (–) 3.72% குறைவாகவும் பணி செய்ய கடிதம் அளித்துள்ளார். மூன்றாவது முறை விலைக்குறைப்பு செய்ய கோரி 05.04.2013 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் 05.04.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகை ரூ.114379863.17/–லிருந்து ரூ.111976572.44/–க்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.80% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலை ரூ.121213605.90 உடன் ஒப்பிடுகையில் (–) 7.62% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 11 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு சி.என்.அண்ணாதுரை அவர்களின் ஒப்பத்தொகை ரூ.111976572.44 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையான ரூ.111976572.44 ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.80% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)7.62% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திரு சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 2.80% அதிகமான ஒப்பத்தொகை ரூ.111976572.44க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு சி.என்.அண்ணாதுரை அவரின் ஒப்பத்தொகை ரூ.111976572.44 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.
4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.80% விழுக்காடு அதிமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)7.62% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு சி.என்.அண்ணாதுரை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.ரூ.111976572.44 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.80% அதிகமாகவும் மற்றும் சந்தைவிலையைவிட (–)7.62% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் – 4க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருசி.என்.அண்ணாதுரை அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.111976572.44க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 2.80% அதிகமான ஒப்பத்தொகை ரூ.111976572.44க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதியும் மற்றும் இப்பணியின் அவசர அவசியம் கருதி திரு சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கு பணி ஆணை வழங்கியதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 167/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 201/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

****

சு.து.ந.க.எண். பி1/1562/2013.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.262/2013 **பொருள் எண்.85**

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் மண்டலம்–15 கோட்டம். 192 மற்றும் 195ல் ஆரம்ப சுகாதார மையங்கள் நிறுவுதல் – பணியாளர்களை வெளிநிறுவனம் மூலம் பணி நியமனம் செய்யவும் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் அரசின் அனுமதி பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி.

சென்னை மாநகராட்சியிலுள்ள 7 மண்டலங்களில் 80 நகர்புர ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகிறது. இதன் மூலம் ஏழை, எளிய மக்கள் பயன் பெற்று வருகின்றனர். வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–2013 நிதி நிலை அறிக்கையின்படி சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக 5 மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் 2 நகர்புர ஆரம்ப சுகாதார மையங்கள் நிறுவ மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாமன்ற உறுப்பினர்கள் கோட்டம்–192 மற்றும் கோட்டம்–195 அவர்கள் தங்களின் கோட்டமான நீலாங்கரை சாலை மற்றும் கண்ணகி நகரில் துணை சுகாதார மையம் இயங்கி கொண்டு இருந்த கட்டிடத்தில் அமைக்க கேட்டுக் கொண்டுள்ளனர். ஏழை எளிய மக்களின் சுகாதாரத்தின் நலன் கருதி இவ்விரண்டு கோட்டங்களில் ஆரம்ப சுகாதார மையம் நிறுவுதல் அவசியமாகிறது.

1. மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் தேவையான மேம்பாட்டு பணிகளை அந்தந்த மண்டல அலுவலர் மூலமாக மேற்கொள்ளலாம்.
2. புதியதாக துவங்கப்படவுள்ள 2 ஆரம்ப சுகாதார மையத்திற்கு தேவையான உபகரணங்கள் தமிழ்நாடு சேவை கழகத்தில் இருந்து கொள்முதல் செய்ய வேண்டும் எனில் ஆரம்ப சுகாதார மையத்திற்கு உபகரணங்களுக்கு ஆகும் செலவு முன்பணமாக செலுத்த வேண்டும். மேலும் ஒப்பம் கோர ஆகும் விளம்பரம் செலவு மற்றும் 5% சேவை தொகையை முன்பணமாக வழங்க வேண்டும் இவற்றை செலுத்திய பின் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் ஒப்பம் கோரும். இதனால் காலதாமதம் ஆகும், எனவே சென்னை மாநகராட்சியே TTA விதிகளின் படி ஒப்பம் முறையில் கொள்முதல் செய்யலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள புதிதாக துவங்கப்படவுள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தேவையான மருத்துவ அலுவலர்கள் (ம) பணியாளர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. மருத்துவ அலுவலர் –2
2. மருந்தாளுநர் –2
3. ஆய்வக நுட்புனர் –2
4. ஆண்ரண சிகிச்சையாளர் பெண்ரண சிகிச்சையாளர் –4
5. துப்புரவு பணியாளர் –2

மருத்துவமனைக்கு தேவைப்படும் 2 மருத்துவ அலுவலர் மற்றும் 2 ஆய்வக நுட்புனர், 4 ஆண்/பெண் இரண சிகிச்சையாளர், 2 வரவேற்பாளர் வெளி நிறுவனம் மூலம் பணியில் அமர்த்தவும், 2 மருந்தாளுநர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெயர் பட்டியல் பெற்று பணி நியமனம் செய்யவும் மற்றும் 2 அலுவலக உதவியாளர் மற்றும் 2 துப்புரவு பணியாளர்கள் பொதுத்துறை மூலம் நியமனம் செய்யலாம்.

வ.எண்	விவரங்கள்	தோராயமாக (லட்சங்கள்)
1	2 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர்கள் நியமனம்	22.08
2	2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க தேவைப்படும் தளவாட பொருட்கள்	3.75
3	2 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான உபகரணங்கள்	6.80
4	2 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான மருந்துகள் ஆண்டுக்கு	9.00
	மொத்தம்	41.63/(41.65)

எனவே சென்னை மநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளான கோ– 192 மற்றும் கோட்டம்–195ல் ஏழை எளிய மக்கள் பயன் பெரும் வகையில் 2 ஆரம்ப சுகாதார மையங்கள் துவங்க கீழ்க்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. தேர்வு செய்யப்பட்டுள்ள 2 இடங்களில் ஆரம்ப சுகாதார மையம் துவங்க ஒப்புதலும்.
2. ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவைப்படும் தளவாட சாமான்கள் அரசு நிறுவனமான TANSI யிலிருந்து கொள்முதல் செய்யவும் இருப்பு இல்லாத பட்சத்தில் வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தம் மூலம் கொள்முதல் செய்யவும்.
3. ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவைப்படும் மருந்துகளை தமிழ்நாடு சேவை கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்ளவும் அரசு நிறுவனங்களின் இருப்பு இல்லாத பட்சத்தில் வெளிநிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தம் மூலம் கொள்முதல் செய்யவும்.
4. ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான உபகரணங்கள் TTA விதிகளின் படி ஒப்பந்தம் முறையில் கொள்முதல் செய்யவும்.
5. ஆரம்ப சுகாதார மையங்கள் துவங்க ஆகும் செலவீனம் தோராயமாக ரூ. 41.65 லட்சங்கள் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு செய்யவும் இதன் பொருட்டு அரசின் அனுமதி பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்.

" ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.46/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 198/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி14/1404/2013
முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.263/2013 **பொருள் எண்.86**

ரிப்பன் மாளிகையின் நூற்றாண்டு நிறைவையொட்டி (1913–2013) நூற்றாண்டு நிறைவு விழா பல்நோக்கு அரங்கம் மண்டலம்–14, வார்டு–188 வேளச்சேரி–தாம்பரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை அரசு நிலத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அரசிடம் முன் நுழைவு அனுமதி, நிலப்பயன் மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யக் கோரி அரசுக்கு கடிதம் அனுப்புவதற்கு அனுமதி

******

2013–2014ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்பு எண்.47ல் சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையின் நூற்றாண்டு நிறைவையொட்டி (1913–2013) நூற்றாண்டு நிறைவு விழா பல்நோக்கு அரங்கம் கட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அரசாணை நிலை எண்.547, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.06.1988–ல் ஆலந்தூர் நகராட்சி 1988ஆம் வருடத்திற்கு முன் நில அளவை எண்கள்.108, 116/2 மற்றும் 118/2ஏ மற்றும் பி, வேளச்சேரி கிராமம், சென்னை மாவட்டம் 2 ஏக்கர் நிலத்தில் குப்பை கொட்டி வந்ததை மாற்றி பள்ளிக்கரணை கிராமம் நில அளவை எண்.23/1ஏ, வருவாய்த் துறைக்கு சொந்தமான 15 ஏக்கர் நிலத்தில் குப்பை கொட்ட ஆலந்தூர் நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.1039, வருவாய் (டி1) துறை, நாள்.03.06.1988–ல் செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலூக்கா, பள்ளிக்கரணை கிராமம், நில அளவை எண்.23/1ஏ–ல் உள்ள 15 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் குப்பை கொட்ட ஆலந்தூர் நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆலந்தூர் நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட 15 ஏக்கர் நிலத்தில் 1988 முதல் 2012ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட இடத்தில் குப்பை கொட்டப்பட்டு வந்தது. இந்தக் குப்பை கொட்டும் வளாகத்தின் அருகில் வசிக்கும் பொதுமக்களும், நலச் சங்கங்களும் குப்பை கொட்டும் வளாகத்தில் ஏற்படும் தீயின் விளைவாக உண்டாகும் புகையின் காரணமாகவும், குப்பையிலிருந்து உருவாகும் துர்நாற்றம் மற்றும் கொசு உற்பத்தியினால் தங்களது உடல் நலம் பாதிக்கப்படும் என்று தெரிவித்து இந்தக் குப்பை கொட்டும் வளாகத்தை வேறு இடத்தில் மாற்றி அமைக்கும்படி சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடர்ந்தனர். சென்னை உயர்நீதி மன்றத்தில், இந்த குப்பை கொட்டும் வளாகத்தில் இனி குப்பை கொட்டுவது நிறுத்தப்படும் என்றும், ஏற்கனவே கொட்டிய குப்பையும் அகற்றப்படும் எனவும் சென்னை மாநகராட்சி சார்பாக தெரிவிக்கப்பட்டு, இந்த வளாகத்தில் குப்பை கொட்டுவது முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

ரிப்பன் மாளிகையின் நூற்றாண்டு நிறைவு விழா பல்நோக்கு அரங்கம் மண்டலம்–14, வார்டு–188 வேளச்சேரி–தாம்பரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட பள்ளிக்கரணை நிலத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், பள்ளிக்கரணை கிராமம், நில அளவை எண்.23/1A–ல் உள்ள 15 ஏக்கர் நிலத்தில் குப்பை கொட்டுவதற்கு ஆலந்தூர் நகராட்சிக்கு அளிக்கப்பட்ட முன்நுழைவு அனுமதி தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண்.547, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.06.1988 மற்றும் அரசாணை நிலை எண்.1039, வருவாய் (டி1) துறை, நாள்.03.06.1988 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட குப்பை கொட்டுவது என்ற பயன்பாட்டினை மாற்றி அதே இடத்தில் பல்நோக்கு அரங்கம் மற்றும் பிற கட்டடங்கள் கட்டும் பணிகளை மேற்கொள்ள உரிய நிலப்பயன் மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்து தருமாறு அரசை கோருவதற்கும், அதற்காக அரசுக்கு உரிய கடிதம் அனுப்புவதற்கும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.171/2013, நாள். 22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.203/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1635 / 2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.264/2013 **பொருள் எண்.87**

புதியதாக 10 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் 2013–14 நிதியாண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இயந்திர பொறியியல் துறை என்னும் தலைப்பின் பத்தி எண். 43, வரிசை எண். 5ல் , 10 எண்ணிக்கையில் புதியதாக கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

தற்போது 20 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி எல்லைகள் விரிவாக்கப்பட்டதால் இவை போதுமானதாக இல்லை. மேலும் இவற்றில் 3 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் அதிகமான பூங்காக்கள் மற்றும் மைய தடுப்பு சுவரில் அமைக்கப்பட்டுள்ள செடிகளை பராமரிக்க இவ்வகை வாகனங்கள் கூடுதலாக தேவைப்படுகின்றன. தற்போது பராமரிக்கப்பட்டு வரும் பூங்காக்களை மேலும் செம்மையாக பராமரித்திட கூடுதலாக 10 புதிய கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்வது அவசியமாகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் புதிய வாகனங்களில் பயன்படுத்தபடும் தண்ணீர் அதிகஅளவில் வீணாகாமல் தடுக்கும் வகையில் அதற்கேற்ற உபகரணங்கள் பொருத்தப்பட்டும் மற்றும் தேங்கிய நீரை உறிஞ்சி லாரியில் வடிவமைக்கப்பட்டுள்ள தொட்டியில் சேகரிக்கும் திறன் கொண்ட மோட்டர்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, புதியதாக 10 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் ரூ. 1,75,00,000/– செலவில் (17.50,000 x 10) கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் இத்தொகை இயந்திரப் பொறியியல் துறை 2013–14ம் ஆண்டிற்கான மூலதன நிதி ஒதுக்கீட்டில் லாரிகள் என தலைப்பில் கூடுதல் நிதியாக பெற்று கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பூங்காக்களின் பராமரிப்பிற்காக 10 எண்ணிக்கையில் கனரக தண்ணீர் லாரிகள் ரூ. 1,75,00,000/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்திட நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.172/2013, நாள். 22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.204/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 1638/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.265/2013 **பொருள் எண். 88**

இயந்திரப் பொறியியல் துறை – 2013-2014 ஆம் ஆண்டு நிதியாண்டிற்கான வரவு செலவு குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் புதியதாக 20 எண்ணிக்கையில் ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்ய அனுமதி.

****

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால், 2013–14ம் நிதியாண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இயந்திரப்பொறியியல் துறையில் ஆய்வு வாகனங்கள் ஏற்கனவே கழிவு செய்யப்படும் நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு பதிலாக கொள்முதல் செய்து பயன்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்கள்.

தற்போது இயந்திர பொறியியல் துறையின் கீழ் உள்ள பல ஆய்வு வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக பராமரித்து பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாகனங்களை பராமரிக்க ஆகும் செலவு மிக அதிகமாக உள்ளதால் இவ்வாகனங்களை கழிவு செய்து புதியதாக 20 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தால் ஒரு வாகனத்திற்கு தோராயமாக ரூ. 7,50,000/– வீதம் 20 வாகனங்களுக்கு ரூ. 1,50,00,000/– செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்கொள்முதலுக்கான மொத்த செலவினை இயந்திரப்பொறியியல் துறை 2013 – 2014 ம் நிதியாண்டில் மூலதன நிதி ஒதுக்கீட்டில் கூடுதல் நிதியாக பெற்று கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்டு 15 மண்டலங்களாக மாற்றப்பட்ட பிறகு வட்டார துணை ஆணையர் அலுவலர்கள், புதிய மண்டலங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 50க்கும் மேற்பட்ட அலுவலர்களுக்கு வாகனங்கள் இல்லாத நிலையில் ஆய்வுப்பணியை மேற்கொள்ள தனியார் வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. வாடகை வாகனங்களை பயன்படுத்துவதை விட , மாநகராட்சியின் சொந்த வாகனங்களை பயன்படுத்தினால் நீண்டகால அடிப்படையில் பொருளாதார ரீதியில் பயன் உள்ளதாக இருக்கும்.

எனவே இவ்வாகனங்களை கழிவு செய்ய மாற்று ஏற்பாடாக 20 ஆய்வு வாகனங்கள் உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டியது அவசியம் ஆகின்றது.

எனவே இத்தகைய சூழ்நிலையில் சென்னை மாநகராட்சியில் உள்ள அதிகாரிகளின் ஆய்வுப்பணிக்காக முதற்கட்டமாக 20 எண்ணிக்கையில் புதிய ஆய்வு வாகனங்கள் ரூ. 1,50,00,000/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.173/2013, நாள்.22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.205/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

பா.து.ந.க.எண்.பி3/ 1744/2001

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் .22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.266/2013 **பொருள் எண்: 89**

பாலங்கள் துறை –மண்டலம் – 4 மற்றும் 5 கோட்டம் – 47 மற்றும் 53ல் போஜராஜ நகரில் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வரையறக்கப்பட்ட வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணி – சென்னை மாநகராட்சியின் தோராய மதிப்பீட்டுக்கு ரூ.6,68,00,000க்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறவும் மற்றும் இரயில்வே துறையின் மதிப்பீட்டுத் தொகையினை வழங்கவும் அனுமதி.

,,,,,,,,,,,,,,

போஜராஜ நகர் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வரையறக்கப்பட்ட வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணியானது இரயில்வே துறையும் சென்னை மாநகராட்சியும் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள பணியாகும்.

போஜராஜ நகர் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே இருவழி வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணி கலந்தறிதற்குரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 43மீ நீள இரயில்வே பகுதியையும் சேர்த்து மொத்த சுரங்கப்பாதையின் நீளம் 161.60மீ மற்றும் அகலம் 6மீ ஆகும்.

இது குறித்து இரயில்வே துறையின் இசைவு கோரப்பட்டது. இரயில்வே துறை இப்பாலத்திற்கான தோராய மதிப்பீடு ரூ.77,40,000/– ஆகும் எனவும் அதற்கான நூற்றுவீதக்கட்டணமாக (Centage Charges) ரூ.1,54,800/– வழங்க கோரியது. இரயில்வே துறைக்கு ரூ.1,54,800/– வழங்க ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டது. இரயில்வே துறைக்கு ரூ.1,54,800/– வழங்கப்பட்டது.

இப்பணிக்காக விரிவான வடிவமைப்பு மற்றும் விரிவான வரைபடம் போஜராஜ நகரில் இரயில்வே பகுதிக்கான கடைக்கால்களுக்கான வரைபடம் இரயில்வே துறை மூலம் 16.03.2012 அன்று சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டது. இவ்வரைபடத்தின் அடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் முழுமையான வடிவமைப்பு, வரைபடம், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக இரயில்வே துறையிடமிருந்து பெறப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் கலந்தறிதற்குரியவர் விரிவான திட்ட அறிக்கை, வரைபடம் மற்றும் வடிவமைப்பு தயாரித்து வருகின்றனர்.

தற்போது இரயில்வே துறை 05.04.2013 நாளிட்ட கடிதத்தில் இப்பணிக்கான மதிப்பீடு ரூ.1,11,11,200/– ஆகும் என தெரிவித்து இம்மதிப்பீட்டு தொகையை வழங்க கோரியுள்ளனர். மேலும், சுரங்கப்பாதையின் பராமரிப்புக்கான ஆண்டுதோறும் இரயில்வே துறைக்கு வழங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரயில்வே துறை கோரியுள்ள ரூ.1,11,11,200/– மதிப்பீட்டில் ஏற்கனவே நூற்றுவீதக்கட்டணமாக ரூ.1,54,800/– வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை கழித்து ரூ.1,09,56,400/– ஐ முன் பணமாக இரயில்வே துறைக்கு வழங்கலாம்.

தற்போது, கலந்தறிதற்குரியவர் வழங்கியுள்ள வடிவமைப்பின்படி இப்பணிக்கான தோராய மதிப்பீடு இரயில்வே துறையின் மதிப்பீட்டையும் சேர்த்து ரூ.6,68,00,000/– என கணக்கிடப்பட்டுள்ளது.

இரயில்வே துறை கோரியுள்ளபடி ரூ.1,09,56,400/–யை இரயில்வே துறைக்கு வழங்கலாம். மேலும், இரயில்வே துறை தனது பகுதியில் பெட்டக வடிவ பாலத்தை அமைக்கவுள்ளது. இப்பெட்டக வடிவ பாலம் சென்னை மாநகராட்சியின் அணுகு சாலையில் அமைத்து பின்னர் இரயில்வே பகுதியில் நிறுவப்படும். எனவே, இரயில்வே பணி முடிவடைந்த பிறகே சென்னை மாநகராட்சி பணி துவங்க இயலும்.

எனவே,

1. போஜராஜ நகர் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வரையறக்கப்பட்ட வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கான தோராய மதிப்பீடான ரூ.6,68,00,000 ஆட்சி முறை ஒப்பளிப்பு,
2. மேற்கண்ட மதிப்பீட்டுத்தொகையினை பாலங்கள் துறையின் மூலதன நிதியில் மேற்கொள்ளவும்,
3. இரயில்வே சந்திக்கடவு எண்.11 ஏ வரையறக்கப்பட்ட சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு சென்னை மாநகராட்சி மூலம் வைப்பு நிதி வழங்கி இரயில்வே துறையால் மேற்கொள்ள அனுமதி,

4. இரயில்வே துறை கோரியுள்ள ரூ.1,11,11,200/– மதிப்பீட்டில் ஏற்கனவே நூற்றுவீதக்கட்டணமாக ரூ.1,54,800/– வழங்கப்பட்டுள்ளதை கழித்து ரூ.1,09,56,400/– ஐ இரயில்வே துறைக்கு " The Senior Divisional Finance Manager, Chennai Division, Southern Railway, Chennai–600 003. என்ற பெயரில் முன் பணமாக காசோலையாக வழங்க

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு மற்றும் மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.6,68,00,000 மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள் 30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் கட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003 நாள் 21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின் படியும் நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 175/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 206/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.எண்.பி1/3891/2012

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.267/2013 **பொருள் எண். 90**

மண்டலம்–9, வார்டு எண்.118 மற்றும் 119ல் உள்ள பேருந்து தட சாலையான கதிட்ரல் சாலை, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை மற்றும் டி.டி.கே சாலை ஆகிய சாலைகளை இணைக்கும் சந்திப்பில் சந்திப்பு மேம்படுத்தும் பணிக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டதற்கு அனுமதி.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 6 மேம்பாலங்களை அழகுபடுத்தி மேம்படுத்த உத்தரவிட்டதின் பேரில் பாலங்கள் துறையில், 6 மேம்பாலங்களை அழகுமிக்க ஓடுகள் பதித்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு தன்விருப்பதாரர்கள் நியமிக்க பாலங்கள் துறையால் ஒப்பம் கோரப்பட்டு, இதில் திருவாளர்கள்.அட்லாண்டிக் என்ற நிறுவனம் மட்டும் ஒப்பத்தில் பங்கேற்றது.

திருவாளர்கள்.அட்லாண்டிக் நிறுவனம் சமர்ப்பித்த ஒப்பந்தத்தில் பாலங்களின் சுவர்களில் அழுகு மிக்க ஓடுகள் ஒட்டுதல் என்பதற்கு பதிலாக சுவர்களில் சுவரொட்டி செடிகள் வளர்த்தல், செடி கொடிகள் அமைத்தல் மற்றும் இதை பராமரிப்பிற்கு ஏற்ப பாலங்களின் சுவர்களில் மிகுந்த அளவில் விளம்பரத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விளம்பர பகுதி அதிக அளவில் ஒதுக்க, சென்னை முனிசிபல் சட்டம் 6/2003ன் கீழ் விளம்பர பலகை அமைத்தல் மற்றும் வரி வசூலித்தல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளதால், இந்த ஒப்பம் நிராகரிக்கப்பட்டு, ஒவ்வொரு மேம்பாலத்தின் அமைப்பிற்கும், அளவிற்கும் ஏற்ப தனித்தனியாக மேம்பாலங்கள் அழகுபடுத்தி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களால் ஆணையிடப்பட்டதன் அடிப்படையில் மாதிரியாக மண்டலம்–9, வார்டு எண்.118 மற்றும் 119ல் உள்ள பேருந்து தட சாலையான கதிட்ரல் சாலை, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை மற்றும் டி.டி.கே சாலை ஆகிய சாலைகளை இணைக்கும் சந்திப்பில், சந்திப்பு மேம்படுத்துதல், பாலங்களின் சுவர் மற்றும் பாலங்களின் கீழ் அமைந்த பகுதிகளை அழகுபடுத்த சிட்டி கனெக்ட் என்ற நிறுவனம் ஒரு மாதிரி வரைபடம் கொடுத்தன் அடிப்படையில் மதிப்பீடுகள் ரூ.1,83,40,000/–க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பம் மூன்று முறை கோரப்பட்டுள்ளது அதில் 21.12.2012 அன்று ஒப்பத்தில் யாரும் பங்கேற்றவில்லை, 11.01.2013 அன்று ஒரே ஒரு ஒப்பம் பெறப்பட்டது திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்கள் (+) 24.99 விழுக்காடு அளித்துள்ளார். அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதில் (+) 19.99 விழுக்காடு குறைத்து அளித்துள்ளார். மேலும் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்ததன் அடிப்படையில் அவ்வொப்பத்தை இரத்து செய்யப்பட்டது. மேலும் முன்றாவது முறையாக 22.02.2013 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

மூன்றாவது முறையாக கோரப்பட்ட ஒப்பத்தில் ஒரே ஒரு ஒப்பம் பெறப்பட்டதில் திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்கள் (+) 24.99 விழுக்காடு அளித்துள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு

வ.எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத்தொகை 2012-2013 ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ்	15398404.95	19246466.35	(+)24.99% அதிகம்

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பத்தில் திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதில் (+) 24.99 அதிகமான விழுக்காட்டிலிருந்து குறைத்து (+)19.99 அதிகம் என்ற விழுக்காடு குறைத்து, அதுவே தனது இறுதி விலைப்புள்ளி எனத் தெரிவித்துள்ளார்.

இந்த பணியின் மதிப்பீட்டில் கட்டிடத் துறையை சார்ந்த பெரும்பாலான இனங்களும் மேலும் Interlocking Blocks, கிரானைட் நடைபாதை, சிறப்பு வகை வர்ணப்பூச்சு முதலிய இனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது 2012–2013ம் நிதியாண்டில் இறுதியில் இருக்கும் நிலையில் வருகிற ஒரு மாதத்தில் 2013–14ம் ஆண்டு விலைவிவர பட்டியல் தயாராக உள்ளது. மேற்கூறிய காரணங்களினால் திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2012–13ம் ஆண்டின் விலை தொகையை விட (+) 19.99% அதிகமாகும். இதன்படி அவர் அளித்த

ஒப்பத் தொகை ரூ.1,84,76,546.10 ஆகும். 30.03.2013 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (+)3.75% அதிகமாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13ம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)19.99% அதிகமான ஒப்பத் தொகை ரூ.1,84,76,546.10க்கு பணியை வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

இந்த பணியின் மதிப்பீட்டில் கட்டிடத் துறையை சார்ந்த பெரும்பாலான இனங்களும் மேலும் Interlocking Blocks, கிரானைட் நடைபாதை, சிறப்பு வகை வர்ணப்பூச்சு முதலிய இனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது 2012–2013ம் நிதியாண்டில் இறுதியில் இருக்கும் நிலையில் வருகிற ஒரு மாதத்தில் 2013–14ம் ஆண்டு விலைவிவர பட்டியல் தயாராக உள்ளது. மேற்கூறிய காரணங்களினால் திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2012–13ம் ஆண்டின் விலை தொகையை விட (+) 19.99% அதிகமாகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத் தொகை ரூ.1,84,76,546.10 ஆகும். 30.03.2013 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (+)3.75% அதிகமாகும்.

ஒப்பக்குழுமம் மேற்கூறிய விவரங்களை பரிசீலித்து இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13ம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)19.99% அதிகமான ஒப்பத் தொகையான ரூ.1,84,76,546.10க்கு பணியினை வழங்க ஒப்பம் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2012–13ம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)19.99% அதிகமான ஒப்பத் தொகையான ரூ.1,84,76,546.10க்கு பணியினை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.விதி(ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 181/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 212/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1896/2009

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.268/2013 பொருள் எண். 91

சிப்பம் 1 – கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொளத்தூர் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 1 கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொளத்தூர் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணி முடிவடையும் காலம் 26 மாதங்கள், அதாவது 03.03.2013ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், சிப்பம் 1 கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொளத்தூர் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்தேக்கப்பணிகள் உள்ள பகுதியில் போக்குவரத்து இடையூறுகள், சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் குழாய் இணைப்பு, மழைநீர் வடிகால்வாய் பகுதிகளில் மின்சார கம்பிவடங்களும் மற்றும் இணைப்பு பெட்டிகளின் இடையூறுகள், கேப்டன் காட்டன் கால்வாய் பகுதியில் பணிகள் முடிவடையாமல் நடைபெற்று வருகிறது மேற்கூறிய காரணங்களினால், கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

06.08.2011 மற்றும் 03.08.2012 தேதிகளில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வட கிழக்கு பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடந்த ஆய்வு கூட்டத்தில் சாலை வெட்டு மேற்கொள்ள தடைவிதிக்கப்பட்டது. மேலும், உள்ளாட்சி தேர்தல்களில் நன்நடத்தை விதிகளின்படி பணிகள் தொய்விற்கு காரணமாகின. எனவே, தாமதத்திற்கான காரணம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாமதத்திற்கான காரணம்

2011 – உள்ளாட்சி தேர்தல்	செப்டம்பர் 2011 முதல் அக்டோபர் 2011 வரை	2 மாதங்கள்
2011 – பருவமழை	ஆகஸ்ட் 2011 முதல் டிசம்பர் 2011 வரை	5 மாதங்கள்
2012 – பருவமழை	ஆகஸ்ட் 2012 முதல் அக்டோபர் 2012 வரை	3 மாதங்கள்

மேற்கூறிய காரணங்களால் சுமார் ஆறு மாத காலங்கள் பணிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகள் நிறைவேற்ற வேண்டிய கால அளவுகள் (Mile Stone) எட்டப்படவில்லை. ஒப்ப விதியின் கீழ், பணிகள் மேற்கொள்ளப்பட முடியாததால், பணி ஆணை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை மற்றும் உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்திய காரணத்தினால் பத்து மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதாலும், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததால் இப்பணிகளுக்கு மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 04.03.2013 முதல் 03.06.2013 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 1 கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொளத்தூர் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு மேலும், 04.03.2013 முதல் 03.06.2013 வரை மூன்று மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண்.180/2013, நாள். 22.04.2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 211/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/2192/2010

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.269/2013 பொருள் எண். 92

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி

சென்னை மாநகரில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது.

மேற்கண்ட பணிகளில் வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு 05.03.2010 அன்று திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 26.04.2010 அன்று பணியிடம் ஒப்படைத்து பணி நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், அதாவது 25.04.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணமாக பணிகள் சுமார் எட்டு மாதங்களாக தொடர்ந்து நடைபெறாததால் வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதிக்கு மேலும் 6 மாதங்கள் கால நீட்டிப்பு ஆணை பெறப்பட்டுள்ளது. இதன்படி, 25.10.2012ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

2011ல் உள்ளாட்சி தேர்தல் மற்றும் 2012ன் பருவமழை காரணமாக பதினொரு மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதால் மேலும் மீண்டும் ஐந்து மாத காலத்திற்கு 25.03.2013 வரை பணி நீட்டிப்பு வழங்க மன்றத்தின் ஆனுமதி பெறப்பட்டது.

வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதியில் ராஜ்பவன் கால்வாயின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் சிறிது சிறிதாக அகற்றப்படுவதாலும், பெருங்குடி இரயில் நிலையத்திலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை பிரதான மழைநீர் வடிகால்வாய் அமைக்க சர்வே செய்து உரிய நேரத்தில் பணியிடம் தரப்படாமை, நேதாஜி காலனி பிரதான சாலை மற்றும் கக்கன் நகர் பிரதான சாலையில் கால்வாயில் அதிப்படியான கழிவுநீர் தொடர்ந்து செல்வதாலும், இப்பணிகள் 25.03.2013 முடிக்க இயலவில்லை என்றும், மேலும், ஆறு மாதங்களுக்கு கால நீட்டிப்பு கோரியுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில்,

(1) வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதியில் 1200மீ நீளமுள்ள ராஜ்பவன் கால்வாய் பணிகள் தற்போது 800மீ நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்வாயின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் பெரும்பாலனவை அகற்றப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. பணி மேற்கொள்ளும் போது கனரக வாகனங்கள் செல்ல வேறு வழிகள் இல்லாததால் கால்வாயினுல் கொண்டு சென்று சிறிது சிறிதாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் காலதாமாகிறது.

(2) பெருங்குடி இரயில் நிலையம் அருகில் கல் குட்டையிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரையில் உள்ள 1500மீ நீளத்திற்கு பிரதான மழைநீர் வடிகால்வாய் அமைக்க இடம் இல்லாததால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் இரயில்வேக்கு வழங்கப்பட்ட உள்ளவட்ட சாலை வழியாக கொண்டு செல்ல எல்லைகள் சர்வே செய்யப்பட்டு பணி ஜூலை’ 2012 அன்று துவங்கப்பட்டது. தற்போது 700மீ நீளத்தில் கால்வாய் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள துரத்திற்கும் முழுமையாக பணி நடைபெற்று வருகிறது.

(3) கக்கன் நகர் பிரதான சாலை மற்றும் நேதாஜி நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாயில் கழிவு நீர் தொடர்ச்சியாக செல்வதால் இக்கால்வாய் பணி நிறுத்திவைக்கப்பட்டு, தற்போது நடைபெற்று வருகிறது.

மேற்கூறிய காரணங்களால் பணிகளை 25.03.2013ற்குள் ஒப்ப விதியின் கீழ், பணிகள் முடிக்க முடியாததால், திருவாளர்கள் ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு முழுமையாக பணிகளை முடிக்க 26.03.2013 முதல் மூன்று மாத காலத்திற்கு 25.06.2013 வரை பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) திருவாளர்கள் ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், வேளச்சேரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய் அமைக்கும் பணிகள் செய்து முடிப்பதற்கு 26.03.2013 முதல் 25.06.2013 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) வேளச்சேரி மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கால்வாய் பணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் நிறைவேற்றப்படாததற்காக ஒப்பந்ததாரர் மீது விதிக்க வேண்டிய (Liquidated damages) அபராதத் தொகைக்கு 25.03.2013 வரை விலக்கு அளிக்கவும், மற்றும்

(3) மீதமுள்ள ஒப்பப் பணிகளுக்கு ஒப்ப விதிகளில் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 26.03.2013 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 178/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 209/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0592/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.270/2013 **பொருள் எண். 93**

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – கூவம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்ய அனுமதி

கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணிக்காக ரூ.69,97,55,580/–க்கு திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களுக்கு 28.06.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 28.10.2010க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக 08.09.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி (Revised Detailed Project Report) இத்தொகுப்பில் மொத்தம் 98 பணிகள் ஆகும். அதில், 22 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 24 பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் 52 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி ஒப்பந்ததாரர் இன்றைய தேதியில் 85% முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 35% மட்டுமே பணி மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்ததாரின் வேலையின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் ஒப்பந்ததாரர் பணி துரிதமாக மேற்கொள்ள உறுதிப்படுத்தியும் இந்நாள் வரை பணிகளை துரிதப்படுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், பார்வை 3ல் கண்டுள்ளபடி, திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களுக்கு காரணம் கேட்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டும், இக்குறிப்பாணைக்கு இவ்வலுவலகத்திற்கு இந்நாள் வரை எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை.

திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்கள் காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு இந்நாள் வரை பதில் தாரததாலும். மேலும். இந்நாள் வரை பணியில் முன்னேற்றம் இல்லாததாலும் ஒப்ப விதி 59 “Termination” மற்றும் 60 “Determination upon termination” துணை விதி 60A of contract due to default or failure of the contractor”ன்படி கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் உள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்காணும் 52 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரப்பட்டது

சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவிருக்கும் பணிகள்

வ. எண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் பெயர்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை
1	5	66	3வது நிழற்சாலை	650	9383000
2	5	76	நெல்சன் மாணிக்கம் சாலை (இருபுறமும்)	1200	17460000
3	7	111	அண்ணா சாலை	1100	23775000
4	7	47, 103	ஈ.வெ.ரா சாலை	2000	43282000
5	5	66	2வது நிழற்சாலை (தெற்கு)	1100	16041000
6	5	67	2வது நிழற்சாலை (தெற்கு)	720	10513000
7	5	72	பூந்தமல்லி நெடுஞ்சாலை (ஈ.வெ.ரா சாலை)	950	13677000
8	5	68	திரு.வி.க பூங்கா (மேற்கு பக்கம்)	350	3846000
9	5	67	2வது நிழற்சாலை (வடக்கு)	720	10513000
10	6	82	அண்ணா சாலை	650	7218000
11	6	82	அண்ணா சாலை	750	8325000
12	6	81	அருணாச்சலம் சாலை (வடக்கு)	750	8215000
13	7	105	ஹால்ஸ் சாலை	600	6626000
14	7	105	ராமநாதன் சாலை	530	5861000

15	7	105	காந்தி இர்வீன் சாலை	700	7648000
16	7	105	ஏழும்பூர் நெடுஞ்சாலை (தெற்கு பக்கம்)	800	8832000
17	7	105	மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு)	350	3832000
18	7	105	ஏழும்பூர் நெடுஞ்சாலை (வடக்கு பக்கம்)	450	5197000
19	7	105	ஈ.வெ.ரா சாலை	1500	21604000
20	7	107	கோடம்பாக்கம் நெடுஞ்சாலை	900	9832000
21	7	108	கோடம்பாக்கம் நெடுஞ்சாலை	1500	16388000
22	7	111	ஊட்ஸ் சாலை	450	4980000
23	7	110	திரு.வி.கா சாலை	640	7002000
24	7	110	ஓயிட்ஸ் சாலை	400	4370000
25	7	110	ஓயிட்ஸ் சாலை	600	6555000
26	7	110	அண்ணா சாலை	1100	12017000
27	7	110	திரு.வி.கா சாலை	650	7109000
28	5	73	துரைசாமி தெரு	100	773000
29	7	108	கோடம்பாக்கம் நெடுஞ்சாலை	600	6555000
30	7	110	பட்டூளாஸ் சாலை	400	4370000
31	3, 5	47, 59	ஈ.வெ.ரா சாலை	500	7203000
32	5,8	71,104	ராஜ அண்ணாமலை சாலை	150	1652000
33	7	103,58	வள்ளியம்மாள் சாலை	375	4158000
34	9	110	ஸ்ட்ராலிங் சாலை	1050	15112000
35	8	109	பஜனை கோயில் முதல் தெரு	200	2174000
36	8	104	டாக்டர் அழகப்பா சாலை	400	4379000
37	8	100	ஏடி பிளாக் 1வது முதல் 4வது தெரு வரை	450	4943000
38	8	107	மேக் நீக்கலாஸ் சாலை	300	3278000
39	5	67	குருவாப்பா செட்டி தெரு	450	4933000
40	9	114	சாமி சிவனாந்தா சாலை	950	13662000
41	5	61	காசா மேஜர் சாலை	320	3509000
42	9	115	பீட்டர்ஸ் சாலை (தெற்கு)	700	7729000
43	5	61	வேலாயுதம் தெரு	180	1394000
44	8	108	கண்ணதாசன் தெரு	215	1566000
45	5	62	ஆதிபக்தன் தெரு	300	2317000
46	9	115	மீராபக்ஸி சாலை	370	2864000
47	9	115	பீட்டர்ஸ் சாலை	600	4634000
48	9	115	ஜானி ஜான்கான் சாலை	250	1940000
49	9	115	ஜெ.ஜெ.கான் சாலை	440	3536000
50	5	62	அய்யா முதலி தெரு	370	2864000
51	8	107	மேஜர் ராமநாதன் சாலை	300	3317000
52	9	113	கோடம்பாக்கம் நெடுஞ்சாலை (தெற்கு)	200	2214000
			மொத்தம்	**32280**	**411177000**

எனவே,

(1) கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது நடைபெறும் 24 பணிகளை தொடர்ந்து குறிப்பிட்ட காலவரையான 08.09.2013க்குள் முடிக்கவும். அதன் பின்னர், திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்திடவும்,

(2) கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 52 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து திருத்திய மதிப்பீடு தயார் செய்து புதிய ஒப்பம் கோரவும் மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும்,

(3) இப்பணிக்காக திருவாளர்கள் மார்க் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை (Security Deposit) மற்றும் ஊந்துதல் தொகை (Mobilization Advance) கையகப்படுத்தவும்,

(1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 170/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 202/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1179/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.271/2013 பொருள் எண். 94

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்திட அனுமதி

அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.46,92,00,000/–க்கு திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 24 மாதங்கள் ஆகும். அதாவது 01.11.2012க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக 19.06.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி (Revised Detailed Project Report) இத்தொகுப்பில் மொத்தம் 63 பணிகள் ஆகும். அதில், 34 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 8 பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் 21 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி ஒப்பந்ததாரர் இன்றைய தேதியில் 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 35 விழுக்காடு பணிகள் மட்டுமே மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்ததாரரின் வேலையின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் ஒப்பந்ததாரர் பணி துரிதமாக மேற்கொள்ள உறுதிப்படுத்தியும் இந்நாள் வரை பணி துரிதப்படுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியின் முன்னேற்றம் குறித்து பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டும் இந்நாள் வரை பணியின் முன்னேற்றத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்கள் இந்நாள் வரை பணியில் எவ்வித முன்னேற்றம் இல்லாததாலும் ஒப்ப விதி 59 “Termination” மற்றும் 60 “Determination upon termination” துணை விதி 60A of contract due to default or failure of the contractor”ன்படி அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகளில் எவ்வித முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் திருவாளர்கள் சிராக் இன்ப்ரா பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

மேலும், அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் உள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்காணும் 21 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோர கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவிருக்கும் பணிகள்

வ. எண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் பெயர்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை
1	8	122	4வது நிழற்சாலை	130	3701280
2	10	140	காந்தி நகர் பிரதான சாலை	450	5044200
3	8	122	7வது நிழற்சாலை	1100	12337600
4	8	128	ராமசாமி மற்றும் லஷ்மணசாமி சாலை	1400	15702400
5	9	141	வேளச்சேரி பிரதான சாலை	750	10730250
6	9	138	தாலுகா ஆபிஸ் சாலை	800	11445600
7	8	138	காந்தி மண்டபம் சாலை	2300	32906100
8	9	132	பெருமாள் கோயில் தெரு	175	1362375
9	10	140	கத்திபாரா சாலை	500	10651000
10	10	140	கணபதி நகர்	100	778500
11	10	140	காந்தி நகர் விரிவாக்கம்	250	1946250

12	10	150	சந்தோம் நெடுஞ்சாலை	550	6168800
13	8	131	100 அடி சாலை	1000	11216000
14	9	139	அண்ணா சாலை	250	3576750
15	8	122	1வது நிழற்சாலை	1350	15141600
16	8	122	அசோக் பில்லர் சாலை	750	8412000
17	8	122	2வது நிழற்சாலை	600	6729600
18	9	140	அண்ணா சாலை	450	6438000
19	8	122	அசோக் பில்லர் சாலை	150	1682400
20	9	140	அண்ணா சாலை	800	8972800
21	9	140	100 அடி சாலை	450	6438000
			மொத்தம்	**13955**	**175215705**

எனவே,

(1) அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது நடைபெறும் 8 பணிகளை தொடர்ந்து குறிப்பிட்ட காலவரையான 19.06.2013க்குள் முடிக்கவும். மீதமுள்ள 21 பணிகள் ஒப்பந்த அட்டவணையிலிருந்து விடுவிக்கவும்,

(2) அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 21 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவும் மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட (1) மற்றும் (2) இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 177/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 208/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/2189/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.272/2013 பொருள் எண். 95

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தினை ரத்து செய்திட ஆணை வேண்டி

மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணிக்காக ரூ.38,15,40,491/–க்கு திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 05.05.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 24 மாதங்கள் ஆகும். அதாவது 04.05.2012க்குள் முடிக்கப்படவேண்டும். மேலும், இயற்கை இடர்பாடுகள், தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காக 04.11.2012 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேலும், உள்ளாட்சி தேர்தல் மற்றும் 2012ம் ஆண்டின் பருவமழை காரணமாகவும் மற்றும் சில இடர்பாடுகளாலும் 04.05.2013 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் திருத்திய விரிவான திட்ட அறிக்கையின்படி (Revised Detailed Project Report) இத்தொகுப்பில் மொத்தம் 63 பணிகள் ஆகும். அதில், 14 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 18 பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் 31 பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி ஒப்பந்ததாரர் இன்றைய தேதியில் 85 பணிகள் விழுக்காடு முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 50 விழுக்காடு மட்டுமே பணி மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்ததாரின் வேலையின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் ஒப்பந்ததாரர் பணி துரிதமாக மேற்கொள்ள உறுதிப்படுத்தியும் இந்நாள் வரை பணி துரிதப்படுத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், திருவாளர்கள் ரோமன் டார்மெட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பல முறை பணி முன்னேற்றம் குறித்து கடிதம் அனுப்பப்பட்டும், இவ்வலுவலகத்திற்கு இந்நாள் வரை எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை.

திருவாளர்கள் ரோமன் டார்மெட் பிரைவேட் லிமிடெட் அவர்கள் இந்நாள் வரை பணியில் முன்னேற்றம் இல்லாததால் ஒப்ப விதி 59 “Termination” மற்றும் 60 ‘‘Determination upon termination” துணை விதி 60A of contract due to default or failure of the contractor”ன்படி மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் திருவாளர்கள் ரோமன் டார்மெட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யலாம்.

மேலும், மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் உள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்காணும் 31 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோர கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

சிறு ஒப்பங்களாக பிரித்து புதிய ஒப்பம் கோரவிருக்கும் பணிகள்

வ. எண்	மண்டலம்	வார்டு எண்	பணியின் பெயர்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை
1	9	80	எல்லீஸ் ரோடு	450	5531621
2	13	150	பி.எஸ்.கே. சாலை	200	3159621
3	6	96	ஆர்.கே.சாலை	500	4737413
4	6	96	டாக்டர். நடேசன் சாலை	50	510712
5	7	111	பீட்டர்ஸ் சாலை (தெற்கு)	400	4033922
6	7	113	ஆர்.கே.சாலை	750	9170962
7	7	113	கஸ்தூரி ரங்கன்சாலை	600	5679839
8	10	143	ராயப்பேட்டை நெடுஞ்சாலை	330	3127485
9	10	144	நாட்டு சுப்பராயன் சாலை	490	4638311
10	6	89	தெற்கு மாடா சாலை	290	1652129
11	6	89	நல்ல தம்பி சாலை	290	1759723
12	6	84	மேயர் சிட்டிபாபு சாலை	250	1520388
13	7	112	பொன்னுசாமி சாலை	145	882639
14	10	143	செயின்ட் மேரிஸ் சாலை	900	8088449
15	10	147	ஆர்.கே.மட் சாலை	400	3785539

16	6	84	குப்பா முத்து தெரு	375	4585537
17	6	95	டீ.டீ.கே.,சாலை	450	12858241
18	6	88	டாக்டர் பெசன்ட் சாலை	900	8352695
19	6	87	தேவராஜ் சாலை	360	3281895
20	6	89	திருவல்லிக்கேனி நெடுஞ்சாலை	500	4735774
21	6	83	ஜி..பி.சாலை	250	2430151
22	6	83	ஜி.பி.சாலை	600	5657111
23	6	85	திருவல்லிக்கேனி நெடுஞ்சாலை	500	4735774
24	6	83	செல்லபிள்ளையார் கோயில் சாலை	320	4792945
25	6	87	மல்லன் பொன்னப்பன் சாலை	260	2350466
26	6	84	திருவல்லிக்கேனி நெடுஞ்சாலை	1000	9257929
27	10	145	ராதாகிருஷ்ணன் சாலை	50	696488
28	7	112	அம்மையப்பன் லேன்	255	2278662
29	9	129	பல்லக்குமாணியம் சந்து	90	888801
30	7	112	சினிவாசபுரம் 1வது மற்றும் 2வது சாலை	841	7776298
31	6	87	பாரதி சாலை	360	3437895
				13156	135995415

எனவே,

(1) மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது நடைபெறும் 18 பணிகளை தொடர்ந்து குறிப்பிட்ட காலவரையான 04.05.2013க்குள் முடிக்கவும். அதன் பின்னர் திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்யவும்,

(2) மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 31 பணிகளை சிறு ஒப்பங்களாக பிரித்து திருத்திய மதிப்பீடு தயார் செய்து புதிய ஒப்பம் கோரவும் மூன்றாவது நிறுவனம் மூலம் மேற்கொண்டு ஒப்பந்ததாராகிய திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவெட் லிமிடெட் அவர்களின் இடர்பாடுகள் மற்றும் செலவுகளின் (Risk and Cost) மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும், மற்றும்

(3) இப்பணிக்காக திருவாளர்கள் ரோமன் டார்மார்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பினை வைப்புத் தொகை (Security Deposit) கையகப்படுத்தவும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 176/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 207/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண். பி5/2191/2010

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.273/2013 பொருள் எண். 96

மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – செல்லம்மாள் கல்லூரி கால்வாய், கிண்டி இண்டஸ்டிரியல்ஸ் எஸ்டேட், ஜபார்கான்பேட்டை கால்வாய் மற்றும் எம்.ஜி.ஆர். கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்டெரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்திட அனுமதி.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் அடையாறு நீர்பிடிப்பு பகுதியில் அமைந்துள்ள கீழே குறிப்பிட்டுள்ள நான்கு கால்வாய்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்பங்கள் கோரப்பட்டு பணி ஆணை 02.11.2010 அன்று பார்வை 1ல் கண்டுள்ள கடிதத்தின்படி, திருவாளர்கள் எஸ்.பி.எல். இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

வ. எண்	பணியின் பெயர்
01.	செல்லம்மாள் கல்லூரி கால்வாய்
02.	கிண்டி இண்டஸ்டிரியல்ஸ் எஸ்டேட் கால்வாய்
03.	ஜாபர்காண்பேட்டை கால்வாய்
04.	எம்.ஜி.ஆர். கால்வாய்

மேலே குறிப்பிட்ட நான்கு கால்வாய்களுக்கு திட்ட மதிப்பீட்டு விவரங்கள்,

வ. எண்	பணியின் பெயர்	மொத்தப் பணியின் நீளம் மீட்டர்	முடிக்கப்பட்ட பணியின் நீளம் மீட்டர்
01.	செல்லம்மாள் கல்லூரி கால்வாய்	360	360
02.	கிண்டி இண்டஸ்டிரியல்ஸ் எஸ்டேட் கால்வாய்	1900	93
03.	ஜாபர்காண்பேட்டை கால்வாய்	600	–
04.	எம்.ஜி.ஆர். கால்வாய்	1800	–

இந்த பணிகளை முடிப்பதற்கு ஒப்பந்த காலம் 20 மாதங்கள் ஆகும். இந்த ஒப்பந்த காலம் மேலும் இரண்டு மாதத்திற்கு கால நீட்டிப்பு ஆணை மன்ற தீர்மானம் எண். 268/2011 மூலம் வழங்கப்பட்டுள்ளது.

01. செல்லம்மாள் கல்லூரி கால்வாயின் நீளம் 360மீ இப்பணிகள் முற்றிலுமாக முடிக்கப்பட்டுள்ளது.

02. ஜாபர்கான்பேட்டை கால்வாய் தற்போதைய கால்வாய் சுவர்கள் நல்ல நிலையில் இருப்பது மறுகள ஆய்வு மூலம் தெரியவந்தது. ஒரு சில இடங்களில் மட்டும் இடற்பாடுகள் உள்ளன.

இந்த கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அதனால் கால்வாய் நல்ல நிலையில் இருக்கும் கால்வாய் இடித்து விட்டு புதிய கால்வாய் கட்டினால் சென்னை மாநகராட்சியின் நிதி விரயமாகும் என்பதை கருத்தில் கொண்டு ஜாபர்கான்பேட்டை கால்வாயில் உள்ள சுவற்றின் சிறிய சிதலங்களை சீர் செய்து கால்வாயை துார்வாரினால் போதுமானது என்பதால் பணி மேற்கொள்ளவில்லை.

03. எம்.ஜி.ஆர். கால்வாய் – இதன் நீளம் 1800 மீட்டர் ஆகும். இந்த கால்வாயில் ஆக்கிரமிப்புகள் உள்ளதால் பணி ஆணை வழங்கப்பட்டும் பணி இடத்தை ஒப்பந்ததாரருக்கு முழுமையாக ஒப்படைக்க முடியாத சூழ்நிலையுள்ளது.

மேலும், ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பிட்டில் அஸ்திவாரத்திற்காக மண் அகழ்வு செய்த பின் செவ்வக வடிவில் கான்கிரீட் கால்வாய் கட்டுவதில், கால்வாயின் இரு மருங்கிலும் உள்ள சுவர்கள் இடிந்து விழும் என்ற அச்சத்தினாலும் கால்வாயின் வடிவமைப்பு செவ்வக வடிவிலிருந்து, நாற்கர வடிவத்திற்கு (Trapezoidal shape) மாற்றியமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்புகளாலும், வடிவமைப்பு மாற்றியமைக்க உள்ளதாலும் இந்த பணி ஒப்பந்ததாரருக்கு பணி தடம் ஒப்படைக்கப்பட இயலவில்லை.

ஜாபர்கான்பேட்டை மற்றும் எம்.ஜி.ஆர். கால்வாயின் இருபுறமும் ஆக்கிரமிப்புகள் உள்ளதால், இது சம்மந்தமான கணக்கெடுப்பு பணிகள் (BIOMETRIC SURVEY) முடிக்கப்பட்டு குடிசை மாற்று வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிரப்பாளர்களுக்கு குடிசை மாற்றுவாரியத்தால் இட ஒதுக்கீடு இது வரை வழங்கப்பட வில்லை என்பதால் இப்பணிகள் இது வரையில் தொடங்கப்படவில்லை.

04. கிண்டி இண்டஸ்டிரியல்ஸ் எஸ்டேட் கால்வாய் – இந்த கால்வாயின் மொத்த நீளம் 1900 மீட்டர் ஆகும். இந்த நீளத்தில் அடையாறு ஆற்றில் கலக்கும் இடத்தில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. இந்த கால்வாயின் இரு மருங்கிலும் தனியாரின் மதில் சுவர்கள் உள்ளன. கால்வாய்க்கு அஸ்திவாரம் அமைக்க மண் அகழ்வு செய்தால் இந்த மதில் சுவர்கள் இடிந்து விழ வாய்ப்புள்ளது. இதை கருத்தில் கொண்டு செவ்வக வடிவமைப்பு கால்வாயை மாற்றி நாற்கர வடிவத்திற்கு (Trapezoidal shape) கால்வாயாக அமைத்தால் தான் பணியை மேற்கொள்ள முடியும்.

இந்த சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளின்படி, தனக்கு ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு மிக குறைவாக பணிகள் தான் ஒப்படைக்க முடியும் என்ற சூழ்நிலை ஆக்கிரமிப்புகளாலும், மதில் சுவர்களாலும், ஏற்பட்டுள்ளதால் ஒப்பந்ததாரர் இந்த ஒப்பந்த பணிகளை செய்ய மறுக்கின்றார்.

மேலும், இந்த ஒப்பந்ததாரர் மேற்கூறிய காரணங்களுக்காக தீர்ப்பாய்வாளர் அமைக்கும்படி கோரியுள்ளார்.

எனவே,

1. அவசரம், மக்கள் நலமும் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்டுள்ள 3ல் 2 கால்வாய்களான எம்.ஜி.ஆர். கால்வாய் மற்றும் கிண்டி இண்டஸ்டிரியல்ஸ் எஸ்டேட் கால்வாய் இப்பணிகளுக்கு மறு வடிவமைப்பு செய்வதற்கும், அதற்கான திருத்திய மதிப்பீடு தயார் செய்வதற்கும் திருவாளர்கள் எஸ்.பி.எல். இன்ப்ராஸ்டெ்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும்.
2. திருத்தி வடிவமைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மறு ஒப்பந்தம் கோரவும், இப்பணியை ஒப்பந்ததாரின் இடர்பாடுகள் மற்றும் செலவினங்களில் (Risk and Cost) மேற்கொள்ளவும்
3. ஜாபர்கான்பேட்டை கால்வாய் ஏற்கனவே நல்ல நிலையில் உள்ளதால் காலிவாயின் சுவர்களின் பூச்சு வேலையை அகற்றிவிட்டு, புதிய பூச்சு வேலை செய்யவும், ஆங்காங்கே கால்வாய் சுவர்களில் உள்ள இடர்பாடுகளை சரிசெய்யவும் மறு மதிப்பீட செய்யவும்
4. அவசரம், மக்கள் நலமும் கருத்தில் கொண்டு மேற் குறிப்பிட்டுள்ள ஜாபர்கான்பேட்டை கால்வாய் பணியினை மறு மதிப்பீடு செய்யவும் புதிய ஒப்பந்தம் கோரவும் ஒப்பந்ததாரரின் இடர்பாடுகள் மற்றும் செலவினங்களில் மேற்கொள்ளவும் (Risk and Cost)

மேற்கண்ட (1) முதல் (4) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 179/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 210/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

க.து.ந.க.எண்.இ1/761/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 19.03.2013

தீர்மான எண்.274/2013 **பொருள் எண்.97**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளராக (க(ம)பா) பணியாற்றும் திரு.வி.சி.ராஜசேகரன், கட்டடத்துறை அவர்கள் 30.04.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் மேற்பார்வையாளராக 19.02.1978 முதல் பணியில் சேர்ந்து பின்னர் 19.11.1979 முதல் பயிற்சி அலுவலராகவும், 05.07.1982 முதல் உதவி பொறியாளர் ஆகவும் 16.04.1993 முதல் உதவி செயற் பொறியாளராகவும், 07.07.2000 முதல் செயற் பொறியாளராகவும், 22.09.2011 முதல் கண்காணிப்பு பொறியாளராகவும் பின்னர் தலைமை பொறியாளராக (க(ம)பா) 06.02.2013 முதல் தொடர்ந்து 35 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். தனியர் வகித்த பதவிகளில் தலைமை பொறியாளர் (க(ம)பா) பதவியைத் தவிர அனைத்து பதவிகளிலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்கள் ஆகியவற்றிடமிருந்து தணிக்கைத்தடை, நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து விவரம் கோரியதில் பேருந்து சாலைத்துறையின் குறிப்பில் தனியர் பணியாற்றிய காலத்திற்குரிய 2009–10, 2010–11 ஆம் ஆண்டிற்கான தணிக்கைத் தடைகள் பெறப்படவில்லை என்றும், பின்னர் தெரியவரின் தனியரே முழு பொறுப்பாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை நீர் வடிகால் துறையின் குறிப்பில், தனியர் மழைநீர் வடிகால் துறையில் பணியாற்றிய காலத்தில் தனியரின் பெயரில் முன்பண நிலுவை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர பொறியியல் துறையின் குறிப்பில், தனியர் பணியாற்றிய காலங்களில் தணிக்கைத்தடைகள் இல்லை என்றும் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) ஆக பணியாற்றி வரும் காலத்திற்கு தணிக்கையில் ஆய்வு இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும், பின்னர் தெரியவரின் தனியரின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது.பிற துறைகளிலிருந்து தணிக்கைத்தடை இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

25.02.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலரின் அறிக்கையில் இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது. தனியர் சென்னை மாநகராட்சியிடமிருந்து வீடுகட்டும் முன்பணம் மற்றும் வாகனமுன்பணம் ஏதும் பெறவில்லை. மேலும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை.

திரு.வி.சி.ராஜசேகரன், தலைமை பொறியாளர் (க.(ம).பா) அவர்கள் வகித்து வரும் பதவி சென்னை மாநகராட்சி பணி விதிகளில் வகுப்பு 1–ஹ (வகைப்படுத்தப்படாத பிரிவில்) கீழ் வருவதால், தனியர் மீது தணிக்கைத்தடைகள், நேர்செய்யப்படாத முன்பணங்கள் நிதி இழப்பீடுகள் ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க அரசின் அனுமதி வேண்ட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க.எண். சி3/000977/2013.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.275/2013 பொருள் எண்.98

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

டாக்டர். ஜி.டி. தங்கராஜன், கூடுதல் மாநகர நல அலுவலர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2013 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளார்.

டாக்டர். ஜி.டி. தங்கராஜன் அவர்கள் 16.06.1989 அன்று சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலராக பணியமர்த்தப்பட்டார். இவருக்கு இப்பதவியில் 16.06.1989 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு 16.06.1991 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டது.. (செயல்முறை ஆணை சு.து.ந.க.எண். சி1/319/1989, நாள். 24.12.1992) இதனை தொடர்ந்து மன்றத் தீர்மான எண். 242/2007, நாள். 28.05.2007ல் சென்னை மாநகராட்சியில் கூடுதலாக ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பதவி தோற்றுவிக்கப்பட்டு அப்பதவியில் 10.08.2007 பிற்பகல் முதல் இவர் கூடுதல் சுகாதார அலுவலராக பணியமர்த்தப்பட்டார். இவருக்கு கூடுதல் சுகாதார அலுவலராக 10.08.2007 பி.ப. முதல் கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு அரசு பின்னேற்பு வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை (ப) எண். 413, ந.நி.ம.கு.வ.து, (மா.ந.3) நாள்.24.10.2011)

இவர் பணியாற்றிய மண்டலம் / துறைகளிலிருந்து தணிக்கைத்தடை மற்றும் முன்பண நிலுவை ஆகியவை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது. துறைப் பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திலிருந்து நிலுவை ஏதுமில்லை என சான்று பெறப்பட்டுள்ளது. இவரது பணிப்பதிவேடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையின் தணிக்கைக்கு உட்படுத்தி சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் தனது 16.04.2013 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார். மேலும் சில கோப்புகளின் நிலை குறித்து இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் பொதுத்துறையிடமிருந்து தெரிந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் பொதுத்துறையின் கருத்துரை கோரப்பட்டது. உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பில் மேற்கண்ட அலுவலர் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை கோப்பும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார். இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அவர்கள் தனது 19.04.2013 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீதான விசாரணையில் இறுதி அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் தனியர் மீதான நடவடிக்கைகள் கைவிடப்பட்டு அரசாணை (G.O.(D)No.175, M.A. & W.S. (ME.4) Department dt. 03.04.2013) பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் நீண்ட கால முன்பணம் மற்றும் தணிக்கைத் தடை ஏதேனும் நிலுவையிலிருப்பது பின்னர் தெரியவரின், இவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி 30.04.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. இவர் வகிக்கும் பதவி வகுப்பு–1 (பி) ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

எனவே, நீண்ட கால முன்பணம் மற்றும் தணிக்கைத் தடை ஏதேனும் நிலுவையிலிருப்பது பின்னர் தெரியவரின் அவற்றை அன்னாருக்கு வழங்க இருக்கும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு டாக்டர். ஜி.டி. தங்கராஜன், கூடுதல் மாநகர நல அலுவலர் அவர்கள் 30.04.2013 பிற்பகலில் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/2375/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.276/2013 **பொருள் எண்.99**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, மேற்பார்வை பொறியாளராக பணிபுரியும் திரு.கே.யதுகுலராவ் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 02.06.1979ல் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து 02.06.1979 முதல் 06.06.1991 வரை பணியாற்றி பின்னர் பதவி உயர்வின் மூலம் உதவி செயற் பொறியாளராக 06.06.1991 முதல் 17.10.2002 வரையிலும், செயற் பொறியாளராக 17.10.2002 முதல் 02.04.2012 வரையிலும், மேற்பார்வை பொறியாளராக 02.04.2012 முதல் இந்நாள் வரை தொடர்ந்து 34 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். தனியர் வகித்த பதவிகள் அனைத்து பதவிகளிலும் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களிடமிருந்து தணிக்கைத்தடை நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரி, இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. மேலும் தனியர் பேருந்து சாலைகள் துறையில் பணிபுரிந்த காலத்தில், தனியர் மீது தணிக்கைத்தடை நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

13.03.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் தனியர் மீது ஏதேனும் விசாரணை நிலுவையில் உள்ளதா என தெரிவிக்க இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், இந்நாள் வரை பதில் பெறப்படவில்லை.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தனி அலுவலர் அவர்களின் 14.03.2013 நாளிட்ட கடிதம் நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மேற்பார்வை பொறியாளர் பதவி வகுப்பு–1ஏ–ன் கீழ் வருவதால், அரசின் அனுமதி பெற்று ஓய்வு பெற அனுமதிக்கப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டம் இம்மாத கடைசி வாரத்தில் நடைபெறவுள்ளதால் கால அவகாசம் இன்மையை கருத்தில் கொண்டு தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க அரசாணை வேண்டி, அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு 12.04.2013 அன்று கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.கே.யதுகுலராவ், மேற்பார்வை பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், அரசாணையை எதிர்நோக்கியும் தனியரை 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

இ.பொ.து.ந.க.எண்.எம்4/1113/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.277/2013 **பொருள் எண்.100**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

திரு.கே. வரதராஜி, மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்கள் 30.04.2013 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். இவர் வகிக்கும் பதவி மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு 1 B - ன் கீழ் வருவதால், மன்றத்தின் அனுமதிபெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி இவரை பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க அரசாணை பெறப்படல் வேண்டும்.

திரு.கே. வரதராஜி, மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களது பிறந்த தேதி 30.04.1955 ஆகும். அவர் 06.07.1979 அன்று சென்னை மாநகராட்சியில் உதவிபொறியாளராக பணியை துவக்கியுள்ளார். தற்போது மேற்பார்வை பொறியாளராக பணிபுரிகின்றார். இவர் 30.04.2013 அன்று 58 வயது பூர்த்தியடைந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்கள் 13.03.2013 தேதியிட்ட குறிப்பில் திரு.கே. வரதராஜி, மேற்பார்வை பொறியாளர், (இயந்திரம்) அவர்களின் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், தனியரை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு ஏற்படுத்தும் வகையிலான தணிக்கை தடைகள் மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2010–2011 முதல் 2012–2013 வரையிலான ஆண்டுகளுக்குக்கான தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. ஆதலால், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் இருப்பது பின்னர் தெரியவரின், அத்தணிக்கை தடைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி, அவருக்கு வழங்கப்பட உள்ள ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தணிக்கை சான்று வழங்கப்பட்டுள்ளது.

இயந்திர பொறியியல் துறையில் தனியர் மேற்பார்வை பொறியாளராக 01.03.2013 அன்று பணியேற்றிருப்பதால் இக்காலத்திற்கும் தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தணிக்கை தடைகள் இருப்பது பின்னர் தெரியவரின், அதற்கு தனியரை பொறுப்பாக்கி, அவரது ஓய்வூதியம் பணிக்கொடை / அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 30.04.2013 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க அரசாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.கே. வரதராஜி, மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களை தணிக்கை தடைகள் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அதனை இவரது ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்று நிபந்தனைக்குட்பட்டும் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி அரசாணை பெற்று தனியரை 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ப.து.ந.க.எண்.அ3/677 /2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.278/2013 **பொருள் எண்.101**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சியில் திட்டம் மற்றும் ஆய்வு, அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு. ஆ.ஞானமணி, மேற்பார்வை பொறியாளர் (திட்டம் மற்றும் ஆய்வு) பணித்துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 04.07.1979ல் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து 04.07.1979 முதல் 25.05.1984 வரை பணித்துறையில் பணிபுரிந்துள்ளார் மற்றும் 25.05.1984 முதல் 27.03.1985 வரை மாவட்ட அலுவலகம் (வடக்கு) பு.ம(9)ல் பணிபுரிந்துள்ளார். 27.03.1985 முதல் 27.03.1988 வரை பணித்துறை (பாலம்) துறையில் பணிபுரிந்துள்ளார். 28.03.1988 முதல் 26.04.1988 வரை கட்டிட துறையில் பணிபுரிந்துள்ளார். 27.04.1988 முதல் 04.05.1992 வரை மாவட்ட அலுவலகம் (தெற்கு) பணிபுரிந்துள்ளார். பின்னர் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 05.05.1992 முதல் 26.03.1993 வரை புதிய மண்டலம்–13ல் பணிபுரிந்துள்ளர். 26.03.1993 முதல் 16.04.1993 வரை உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–9ல் பணிபுரிந்துள்ளார். 17.04.1993 முதல் 22.04.1997 வரை உதவி செயற் பொறியாளராக பேருந்து சாலைத் துறையில் பணிபுரிந்துள்ளார். 23.04.1997 முதல் 06.09.2001 வரை உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்துள்ளார். 07.09.2001 முதல் 29.09.2003 வரை உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–9 பணிபுரிந்துள்ளார். மேலும் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 29.09.2003 முதல் 11.05.2005 வரை பேருந்து சாலைத் துறையில் பணிபுரிந்துள்ளார். 11.05.2005 முதல் 03.06.2007 வரை செயற் பொறியாளராக புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்துள்ளார். மேலும் மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்று 04.06.2007 முதல் 21.06.2007 வரை புதிய மண்டலம்–9ல் பணிபுரிந்துள்ளார். 22.06.2007 முதல் 08.04.2010 வரை மண்டல அலுவலராக புதிய மண்டலம்–10ல் பணிபுரிந்துள்ளார். 09.04.2010 முதல் 06.02.2011 வரை மண்டல அலுவலராக புதிய மண்டலம்–5ல் பணிபுரிந்துள்ளார். 07.02.2011 முதல் 15.09.2011 வரை மண்டல அலுவலராக பேருந்து சாலைத் துறையில் பணிபுரிந்துள்ளார். 16.09.2011 முதல் 24.05.2012 வரை மண்டல அலுவலராக மண்டலம்–1ல் பணிபுரிந்துள்ளார்.25.05.2012 முதல் 06.08.2012 வரை மண்டலம்–2ல் பணிபுரிந்துள்ளார். 07.08.2012 முதல் 20.11.2012 வரை மண்டல அலுவலராக பேருந்து சாலைத் துறையில் பணிபுரிந்துள்ளார். 21.11.2012 முதல் 01.03.2013 வரை மண்டல அலுவலராக மண்டலம்–1ல் பணிபுரிந்துள்ளார். மேலும் பணித்துறையில் மேற்பார்வை பொறியாளராக (திட்டம் மற்றும் ஆய்வு) பதவி உயர்வு பெற்று 1.03.2013 முதல் இது நாள் வரை பணிபுரிந்து வருகிறார்.

தனியர் பணிபுரிந்த அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களில் தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது. 26.03.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் கடன் ஏதும் பெறவில்லை என தனி அலுவலர் அவர்களின் 20.03.2013 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் S.B.C.I.D. துறையில் 14.03.2013 நாளிட்ட கடிதத்தில் இவர் மீது ஏதும் வழக்கு நிலுவையில் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது. மற்றும் C.B.C.I.D. மற்றும் மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என அனுப்பப்பட்டுள்ளது. இந்நாள் வரை பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

எனவே, திரு. ஆ.ஞானமணி, மேற்பார்வை பொறியாளர் (திட்டம் மற்றும் ஆய்வு) அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி அரசாணை பெற்று தனியரை 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே திரு.ஆ.ஞானமணி, மேற்பார்வை பொறியாளர், அவர்களை 30.04.2013 முதல் பணியிலிருந்து ஓய்வுபெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ப.து.ந.க.எண்.அ3/867 /2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.279/2013 **பொருள் எண்.102**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சியில் பணித்துறை அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.ஆர்.சுதா, நகரப்பொறியாளர், பணித்துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 03.07.1979ல் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து 03.07.1979 முதல் 14.04.1985 வரை பணித்துறையில் பணிபுரிந்துள்ளார். 15.04.1985 முதல் 01.07.1991 வரை மாவட்ட அலுவலகம் வடக்கு (புதிய மண்டலம்–8)ல் உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 02.07.1991 முதல் 13.07.1992 வரை புதிய மண்டலம்–5ல் உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 14.07.1992 முதல் 14.05.1996 வரை பணித்துறையில் (தனியார் தெருக்கள்) உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். பின்னர் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 15.05.1996 முதல் 12.03.1997வரை புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்துள்ளார். 13.03.1997 முதல் 10.04.2003 வரை பேருந்து சாலைத்துறையில் உதவி செயற் பொறியாளர்/செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 11.04.2003 முதல் 22.08.2005 வரை மழைநீர் வடிகால் துறையில் செயற் பொறியாளராக பணிபுரிந்த காலத்திற்கு தணிக்கை தடையின்மை சான்று கோரியதில் தனியரின் பேரில் கூட்டு பொறுப்பில் தணிக்கை தடை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 22.08.2005 முதல் 18.01.2013 வரை பாலங்கள் துறையில் செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 18.01.2013 முதல் 08.03.2013 வரை மத்திய வாட்டார அலுவலகத்தில் (மத்தியம்) செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார். பின்னர் நகரப்பொறியாளராக பதவி உயர்வு பெற்று 08.03.2013 முதல் இது நாள் வரை பணிபுரிந்து வருகிறார்.

திருமதி.ஆர்.சுதா, அவர்கள் பணிபுரிந்துள்ள மழைநீர் வடிகால் துறையில் அவர் மீது கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடையில் தனியரை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு தொகை ரூ.1,34,418/– மட்டும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கை தடை தொகையினை பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட துறையில் தெரிவித்துள்ள தணிக்கை தடையை நிவர்த்தி செய்த பிறகே பிடித்தம் செய்யப்பட்டுள்ள பணிக்கொடை தொகை விடுவிக்க ஆவணம் செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் மற்ற அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களில் தணிக்கை தடை, முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது.

02.04.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று 02.04.2013 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் கடன் ஏதும் பெற்றுள்ளாரா என 10.04.2013 அன்று கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் S.B.C.I.D., யில் 06.04.2013 நாளிட்ட கடிதத்தில் இவர் மீது வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது, C.B.C.I.D. யில் 15.04.2013 நாளிட்ட கடிதத்தில் இவர் மீது வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது மற்றும் மாவட்ட ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறைக்கு வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என தெரிவிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது நாள் வரை பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

சென்னை மாநகராட்சியில் 2013–2014ஆம் ஆண்டு நடைபெற்ற நிதி நிலை கூட்டத்தில் வாலாயமாக பணியமைப்பு சார்ந்த பொருள் எதுவும் மன்றத்தில் வைக்கப்படாததால் அடுத்த நியமனக்குழு வருகின்ற 23.04.2013 அன்று நடைபெறவுள்ளதாலும், அதற்கு பின்பு மாமன்றக்கூட்டம் நடைபெறும் என்பதாலும் கால அவகாசமின்மையை கருத்தில் கொண்டு தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அரசாணை கோரும் செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்படுகிறது. மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திருமதி.ஆர்.சுதா, நகரப்பொறியாளர், அவர்கள் பணிபுரிந்துள்ள மழைநீர் வடிகால் துறையில் அவர் மீது கூட்டு பொறுப்பில் உள்ள தணிக்கை தடையில் தனியரை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு தொகை ரூ.1,34,418/– மட்டும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி அரசாணை பெற்று தனியரை 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, திருமதி.ஆர்.சுதா, நகரப்பொறியாளர், அவர்களை 30.04.2013 முதல் பணியிலிருந்து ஓய்வுபெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.15.ந.க.எண்.அ1/3608/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.280/2013 **பொருள் எண்.103**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

பொதுத்துறை சுற்றறிக்கை பொ.து.ந.க.எண்.ஜி3/40809/2012ல் அறிவிக்கப்பட்டவாறு, திரு.அ.சண்முகம், மண்டல அலுவலர்/ மண்டலம்–15 அவர்கள் 30.04.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். மண்டல அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு 1ஏ–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.2009ன்படி, வகுப்பு 1-ஏ கீழ்வரும் மண்டல அலுவலர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலர் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

திரு.அ.சண்முகம் அவர்கள் உதவி பொறியாளராக 10.11.1980 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். 29.11.1993 முதல் உதவி செயற்பொறியாளராகவும் 06.06.2007 முதல் செயற்பொறியாளராகவும் பதவி உயர்வுகள் பெற்றார். பின்னர் 8.03.2013 முற்பகல் முதல் மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த 10.11.1980 முதல் இந்நாள் வரை பணிபுரிந்த அனைத்து துறை / மண்டலங்களில் தனியர் மீது தணிக்கைத்தடை, முன்பண பிடித்தங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிகழ்வுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், அவ்வாறான இனங்கள் ஏதும் நிலுவையில் இருப்பதாக பின்னர் தெரியவரின் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதனால் ஏற்படக்கூடிய நிதி இழப்பீடுகள் அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்படுத்தி அந்தந்த துறைத்தலைவர்களிடமிருந்து சான்றுகள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களது 02.04.2013 நாளிட்ட குறிப்பில் மேற்படி அலுவலர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் தற்போது சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அன்னார் மீது வேறு எந்த கடன் தொகைக்கான பிடித்தங்களும் நிலுவையில் இல்லை.

தனியர் மீது தணிக்கைத்தடைகளால், நிதி இழப்பீடு மற்றும் முன்பணம் நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரின் அத்தொகையினை பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்துகொள்ள சம்மதம் என தெரிவித்து தனியர் அளித்த கடிதம் கோப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–15ல் துறை ரீதியான விசாரணையோ, ஒழுங்கு நடவடிக்கையோ தணிக்கைத்தடைகளோ மற்றும் தனிப்பட்ட முறையில் முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே, திரு.அ.சண்முகம், மண்டல அலுவலர், மண்டலம்– 15 அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது மற்றும் முன்பணங்கள் நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரின் அத்தொகையினை அன்னாரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 30.04.2013 அன்று பிற்பகல் முதல் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிக்க நியமனக்குழு மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.க.கு.ந.க.எண்.அ2/177/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.281/2013 **பொருள் எண்.104**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

12.12.2012 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திருமதி. சி. பால்மணி, உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் நிதிக்குழுமம்) அவர்கள் 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் உதவி கணக்கு அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு IIன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

திருமதி. சி. பால்மணி அவர்கள் சென்னை மாநகராட்சியில் 21.06.1979 அன்று தட்டச்சராக பணியில் சேர்ந்தார். 04.08.1989 அன்று உதவியாளராகவும் 14.07.2005 அன்று பிரிவு மேலாளராகவும் 15.09.2011 அன்று நிர்வாக அலுவலராகவும், 07.09.2012 அன்று உதவி கணக்கு அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறார்.

06.02.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியர் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி உறுதியாக்கம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருமதி. சி. பால்மணி, உதவி கணக்கு அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாளான 21.06.1979 முதல் இதுநாள் வரை பணிபுரிந்த துறை / மண்டலங்கள் மற்றும் மத்திய கணக்கு குழுமத்திலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள், விசாரணை (ம) தணிக்கை தடைகள் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது. மேலும், தனியரின் மீது தணிக்கை தடைகள் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு அன்னாரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய அகவிலைபடியிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்படுத்தி சான்றளிக்கப்படுகிறது.

எனவே, தணிக்கை அறிக்கை பெறப்பட்டு அதில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்த தனியரின் உறுதி மொழி கடிதம் பெறப்பட்டுள்ளது.

07.03.2013 நாளிட்ட விழிப்பு அலுவலர் அவர்கள் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், தனியர் மீது சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்கத்தில் கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்ற சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. தனியர் மீது வேறு எந்த முன்பண நிலுவையோ கடன் தொகைக்கான பிடித்தங்களோ இல்லை என தெரிவிக்கப்படுகிறது. உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

எனவே, திருமதி. சி. பால்மணி, உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் நிதிக்குழுமம்) அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/ 580/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.282/2013 **பொருள் எண்.105**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

28.02.2013 நாளிட்ட சுற்றறிக்கையின்படி திரு. J. முரளிதர், உதவி வருவாய் அலுவலர்–8, அவர்கள் 30.04.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.தனியர் சென்னை மாநகராட்சியில் 29.08.1974 அன்று தட்டச்சர் (ம) உதவியாளர் பணியில் சேர்ந்து 21.01.2009 முதல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

அன்னாரின் பிறந்த தேதி 14.04.1955 ஆகையால் 30.04.2013 அன்று 58 வயது நிறைவு பெறுவதையொட்டி 30.04.2013 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க வேண்டும்.

தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை மேலும் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது. காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு தனியர் பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தெரிவிக்கப்படவுள்ள தணிக்கை குறிப்புகளுக்கு பொறுப்பாக்கி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

திரு. J. முரளிதர், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8 அவர்கள் வகித்து வரும் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அன்னாரை 30.04.2013 அன்று பி.ப முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

திரு. J. முரளிதர், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8, அவர்கள் சென்னை மாநகரட்சிக்கு நிதி இழுப்பீடு ஏதேனும் ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் அதனை அவரது ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்கின்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 30.04.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மா.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்1/998/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின்18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.283/2013 **பொருள் எண். 106**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

திரு.எஸ்.பரமசிவம், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக 24.04.1990 அன்று பணியில் சேர்ந்தார். இவருடைய பிறந்த தேதி 05.04.1955. வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள் 30.04.2013.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிகாண் பருவம் முடித்துள்ளார்.

பணியமர்த்தப்பட்ட மற்றும் பதவி உயர்வு பெற்ற விவரம்	பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறை நாள்	தகுதி காண் பருவம் முடிக்கப்பட்ட நாள்
1. தொகுப்பாளர் (ம) எழுத்தர் 24.04.90	இணை ஆணையர் (அ) அவர்களின் செயல்முறை ஆணை எப்5/751–2/2002 நாள் 11.11.02ன்படி 24.04.90	இணை ஆணையர் (சு) அவர்களின் செயல்முறை ஆணை எண் எப்5/751–2/2002 நாள் 11.11.2012ன்படி 24.4.92 முதல் தகுதிக்கான் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.
2. துணை தகவல் தொடர்பு அலுவலர் 9.4.1997	சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் எப்4/3147/97 நாள் 2.3.2005ன்படி 9.4.1997 அன்று பணிவரன் முறைப்படுத்தப் பட்டது	

1. திரு.எஸ்.பரமசிவம், துணை தகவல் தொடர்பு அலுவலர்,அவர்கள் மீது நாளது தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 26.03.2013 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என துறையில் சான்றளிக்கப்படுகிறது.
2. இத்துணை தகவல் தொடர்பு அலுவலர் வயது முதிர்வு ஓய்வு பெறுவது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டு தணிக்கை துறையில் முன் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.
3. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்பட வில்லை.
4. தனியர் மீது 30.04.2013 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் ஏதும் நிலுவையில் இல்லை. பின்னர் ஏதேனும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20 முத்திரை தாளில் சம்மத ஒப்புதல் அளித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு 2 என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே திரு.எஸ்.பரமசிவம், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்களால், நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவரை 30.04.2013 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ப.து.ந.க.எண்.அ3/ 847/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.284/2013 **பொருள் எண்.107**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் (பொது) அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு. R.குமரேசன், தலைமை பொறியாளர் (பொது) பணித்துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 29.12.1978ல் சூப்பரவைசர் (உதவி பொறியாளர்) ஆக பணியில் சேர்ந்தார். இவர் 29.12.1978 முதல் 04.12.1983 வரை புதிய மண்டலம்–10ல் சூப்பரவைசராக பணிபுரிந்துள்ளார். 04.12.1983 முதல் 01.02.1988 வரை புதிய மண்டலம்–8 பணித்துறையில் மற்றும் 02.02.1988 முதல் 19.02.1988 வரை பாலங்கள் துறையில் உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 20.02.1988 முதல் 14.12.1988 வரை மற்றும் 15.12.1988 முதல் 06.06.1991 வரை புதிய மண்டலம்–8ல் உதவி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 06.06.1991 முதல் 05.11.1991 வரை புதிய மண்டலம்–9ல் பணிபுரிந்துள்ளார். 6.11.1991 முதல் 18.04.1993 வரை உதவி செயற் பொறியாளராக கட்டிடத் துறையில் பணிபுரிந்துள்ளார். 19.04.1993 முதல் 08.09.1995 வரை உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–9ல் பணிபுரிந்துள்ளார். 09.09.1995 முதல் 02.11.1995 வரை உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்துள்ளார். 03.11.1995 முதல் 24.01.2000 உதவி செயற் பொறியாளராக புதிய மண்டலம்–13ல் பணிபுரிந்துள்ளார். பின்னர் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 24.01.2000 முதல் 13.07.2000 வரை கட்டிடத் துறையில் பணிபுரிந்துள்ளார். 13.07.2000 முதல் 27.01.2004 வரை செயற் பொறியாளராக பேருந்து சாலைத் துறையில் பணிபுரிந்துள்ளார். 28.01.2004 முதல் 07.06.2007 வரை செயற் பொறியாளராக கட்டிடதுறையில் பணிபுரிந்துள்ளார். 07.06.2007 முதல் 21.01.2008 வரை செயற் பொறியாளராக புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்துள்ளார். மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு பெற்று 21.01.2008 முதல் 08.07.2009 வரை மழைநீர் வடிகால் துறையில் பணிபுரிந்துள்ளார். 09.07.2009 முதல் 02.04.2012 வரை மேற்பார்வை பொறியாளராக கட்டிடத் துறையில் பணிபுரிந்துள்ளார். 02.04.2012 முதல் 03.08.2012 வரை திட்டம் மற்றும் ஆய்வு பிரிவில் மேற்பார்வை பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 03.08.2012 முதல் 05.02.2013 வரை தலைமை பொறியாளர் (க (ம) பா) ஆக கட்டிடம் மற்றும் பாலங்கள் துறையில் பணிபுரிந்துள்ளார். 06.02.2013 முதல் இது நாள் வரை பணித்துறையில் தலைமை பொறியாளர் (பொது) ஆக பணிபுரிந்து வருகிறார்.

இவர் பணிபுரிந்து அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களிலிருந்து தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

பார்வை–2ல் கண்டுள்ள சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் 04.04.2013 அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் கடன் ஏதும் பெறவில்லை என தனி அலுவலர் அவர்களின் 21.02.2013 நாளிட்ட கடிதம் நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் S.B.C.I.D. துறையில் 06.04.2013 நாளிட்ட கடிதத்தில் இவர் மீது ஏதும் வழக்கு நிலுவையில் இல்லை என்று சான்று பெறப்பட்டுள்ளது. மற்றும் C.B.C.I.D. மற்றும் மாவட்ட ஊழல் மற்றும் லஞ்சம் ஒழிப்பு துறைக்கு வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது நாள் வரையில் பதில் ஏதும் கிடைக்க பெறவில்லை.

திரு.ர.குமரேசன், தலைமை பொறியாளர் (பொது) பணித்துறை அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, 31.05.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க அரசின் ஆணை கோர நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/ 0029 /2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.285/2013 **பொருள் எண்.108**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

28.02.2013 நாளிட்ட முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு.P.சுப்பைய்யா, செயற் பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களை தணிக்கை தடை, நிலுவையிலுள்ள வீடு கட்டும் முன்பணம் தொகை மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின், அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தியும் மற்றும் நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 28.02.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வில் செல்ல அனுமதியும் மற்றும் பணியிலிருந்து விடுவித்தும் ஆணை வழங்கப்பட்டது.

தனியர் 25.10.1979 அன்று சூப்ரவைசர் / உதவி பொறியாளராக சென்னை மாநகராட்சியில் பணியமர்வு செய்யப்பட்டார். 15.05.1996 அன்று உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். 06.06.2007 அன்று செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 07.07.2008 அன்று உதவி செயற் பொறியாளராக பதவியிறக்கம் செய்யப்பட்டார். பின்னர், 21.08.2008 பி.ப. அன்று செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வந்தார். தனியர் பணிபுரிந்த அனைத்து துறை மற்றும் மண்டலங்களிலிருந்தும் ஒழுங்கு நடவடிக்கை, தணிக்கை தடைகள் மற்றும் முன்பண நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அதனை இத்துறைக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தனியர் சூப்ரவைசர் / உதவி பொறியாளராகவும், உதவி செயற் பொறியாளராகவும் மற்றும் செயற் பொறியளராகவும் பணியாற்றிய வெவ்வேறு துறைகளான இயந்திரப் பொறியியல் துறை, மழைநீர் வடிகால் துறை, மண்டலம்–5 (பழைய மண்டலம்–2), மண்டலம்–4, பணித்துறை, கட்டடத் துறை, பாலங்கள் துறை, மண்டலம் –10 (பழைய மண்டலம்–9), மண்டலம்–15 மற்றும் பேருந்து சாலைகள் துறையில் தனியர் மீது முன்பணம் மற்றும் தணிக்கை தடை ஏதும் இல்லை எனவும் பின்னர் தெரியவரின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனையின் பேரில் சான்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த அனைத்து துறை / மண்டலங்களிலிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மேலும் பேருந்து சாலைகள் துறையில் பணியாற்றிய காலத்தில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை எதுவும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியர் சென்னை மாநகராட்சி மூலம் வீடுகட்டும் முன்பணம் பெற்றுள்ளார். நிலுவையில் உள்ள வீடுகட்டும் முன்பண தொகையை தனியரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

11.02.2013 நாளிட்ட கடிதத்தில் விழிப்புத் துறையில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், மேலும் தனியர் மீது பொதுத் துறையில் பொ.து.ந.க.எண்.இ13/43030/2012 நாள்: 08.11.2012 தேதியின்படி தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் பொ.து.ந.க.எண்.இ13/43030/2012 நாள்: 22.02.2013 தேதியின்படி திரு. P. சுப்பையா, செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதற்கான நகலினை கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வருவதால், வயது முதிர்வு ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, திரு. P. சுப்பையா, செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களை தணிக்கை தடை மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின், அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தியும் மற்றும் நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு இவரை 28.02.2012 அன்று பிற்பகல் முதல் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின்28.02.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்தற்கும், பணியிலிருந்து விடுவித்தமைக்கும், நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.4.ந.க.எண்.அ2/0666/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.286/2013 **பொருள் எண்.109**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

திரு.எஸ்.வைகுண்டம், செயற் பொறியாளர், மண்டலம்–4, அவர்கள் 05.03.1977 முதல் ஓவர்சீயராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். அப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் 30.06.1979 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்று, 15.05.1989 முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். 28.02.2009 முதல் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-4 ல் பணிபுரிந்துவருகிறார். உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. அன்னார் 36 ஆண்டுகள் தகுதியுள்ள பணிக்காலமாக பணிபுரிந்துள்ளார்.

06.02.2013 நாளிட்ட விழிப்பு அலுவலர் அவர்களின் குறிப்பில் திரு.எஸ்.வைகுண்டம், செயற் பொறியாளர், மண்டலம்–4, அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் நிலுவை ஏதும் இல்லை என்ற சான்று பெற்று கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

திரு.எஸ்.வைகுண்டம், செயற் பொறியாளர், மண்டலம்–4, அவர்கள் பணிபுரிந்த கீழ்கண்ட துறை / மண்டங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லையென சான்றுகள் பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

- பணித்துறை
- மண்டலம்-5 (பழைய மண்டலம்-2)
- நிலம் மற்றும் உடமைத்துறை
- மண்டலம்-6 (பழைய மண்டலம்-3)
- கட்டடத்துறை
- மழைநீர் வடிகால் துறை
- மண்டலம்-9
- பேருந்து சாலைத்துறை

தனியர் மண்டலம்-4 ல் பணிபுரிந்த காலத்தில் ஏதேனும் தணிக்கைத்தடை உள்ளதாயென உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினை கோரியதில், 2011-12 மற்றும் 2012-13 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை தற்போது முடிவடையாத நிலையில் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை பத்திகளின் விவரத்தினை தெரிவிக்க இயலாத நிலை உள்ளது எனவும் 2011-12 மற்றும் 2012-13 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை முடிவடைந்த பின்னரே அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை குறித்த விவரம் தெரிவிக்க இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்காலங்களுக்கு உண்டான தணிக்கையில் தனியர் சென்னை மாநகராட்சிக்கு ஏதேனும் நிதி இழப்பு ஏற்படுத்தி இருப்பது தெரியவரின் அதனை தனியரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

தனியர் மண்டலம்-4 ல் பணிபுரிந்த காலத்தில் 2012 ம் வருடத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள நிவாரண பணிகளுக்காக ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) முன்பண தொகையாக பெற்றுள்ளார். இம்முன்பணத்தொகையை நேர்செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கோப்பு நடைமுறையில் உள்ளது.

அன்னாருடைய பிறந்த தேதி 07.02.1955 என்பதால் 28.02.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க வேண்டும். அன்னார் வகுப்பு–2ன் கீழ்வரும் அலுவலர் என்பதால் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளிக்க வேண்டும்.

தனியரை 28.02.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் தனியர் மீது தணிக்கை தடைகளால் தொகை இழப்பீடு மற்றும் முன்பணம் நேர்செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரின் மற்றும் தற்போது நிலுவையில் உள்ள தணிக்கை மற்றும் முன்பணம் ஆகியவற்றில் தனியரை பொறுப்பாக்கி தனியரது ஓய்வூதிய பயன்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனையுடனும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அன்னாரை 28.02.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, 28.02.2013 நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலமாக அனுமதிக்கப்பட்டார்.

எனவே தனியரை 28.02.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமன குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண்.ஏ1/0082/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.287/2013 **பொருள் எண்.110**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

13.01.2013 நாளிட்ட சுற்றறிக்கையின் படி, திரு. ஏ.சுப்ரமணியன் உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.03.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 07.10.1975ல் முதல் ஓவர்சீயராக பணியில் சேர்ந்தார். 21.02.1976 முதல் 30.05.1976 வரை சர்வேயராக பணியாற்றி பின்னர் சூப்பர்வைசர் மற்றும் இளநிலைபொறியாளராக 31.05.1979 முதல் 30.04.1982 வரையிலும், இளநிலை பொறியாளராக 01.05.1982 முதல் 07.08.2007 வரையிலும், 07.08.2007 முதல் இந்நாள் வரை உதவி செயற்பொறியாளராக தொடர்ந்து 36 ஆண்டு பணியாற்றி வருகிறார். தனியர் வகித்த இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவிகளிலும் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது,

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களிலிருந்து தணிக்கைத்தடை நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரி, இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. மேலும், பணிமாற்று அடிப்படையில் மழைநீர்வடிகால்துறையில் பணிபுரிந்தபொழுது ஒழுங்கு நடவடிக்கை 1 (ஒன்று) நிலுவையில் உள்ளது. எனவும் தணிக்கை தடை, நேர்செய்யப்படாத முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

15.03.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் உதவிசெயற்பொறியாளராக பழைய மண்டலம் –2ல் இருந்த சமயம் பொது.ந.கஎண்.இ1/54900/12, நாள்: 24.08.2012ன்படி தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு பொதுத்துறையில் குறிப்பு வைத்து தெரிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

08.03.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என தனி அலுவலர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.03.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி திரு.ஏ.சுப்ரமணியன் உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏதும் இருப்பதாக பின்னர் தெரியவரின்,தனியரை அதற்கு பொறுப்பாக்கி, ஓய்வூதிய பணிக்கொடையிலுருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், தனியர் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு எவ்வித குத்தகமின்றி (Without Prejudice to the Disciplinary Proceedings Pending against him) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்புக்குட்டுபட்டு 31.03.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

28.03.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி திரு, ஏ. சுப்ரமணியன் உதவி செயற்பொறியாளர் மீது தொரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை காரணமாக 07.12.2011 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு பின்னர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொது.ந.க.எண். இ1/54900/2011, நாள்: 07.09.2012ன் படி தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி மீண்டும் 10.09.2012 முற்பகல் முதல் பணியில் சேர அனுமதிக்கப்பட்டவருக்கு விசாரணை அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் தணியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையிலும் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது என சென்னை மாநகராட்சி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் இறுதி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. ஏ. சுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏதும் இருப்பதாக பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், 31.03.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்1/922/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.288/2013 **பொருள் எண்.111**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர். டி.செல்வராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் புதுக்கோட்டை நகராட்சியில் 28.08.1989 அன்று பணியில் சேர்ந்து பணி மாறுதல் மூலம் 18.07.1991 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு கும்பகோணம் நகராட்சியில் 24.07.1991ல் பணியில் சேர்ந்து மீண்டும் பணிமாறுதல் மூலம் 27.05.1997 முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தஞ்சாவூர் நகராட்சியில் 28.05.97ல் பணியில் சேர்ந்தார். மீண்டும் பணி மாறுதல் மூலம் தஞ்சாவூர் நகராட்சியிலிருந்து 30.06.97 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு 1.07.97 அன்று கும்பகோணம் நகராட்சியில் பணியில் சேர்ந்தார். பின்னர் மீண்டும் இவர் பணி மாறுதல் மூலம் கும்பகோணம் நகராட்சியிலிருந்து 30.06.1999 அன்று விடுவிக்கப்பட்டு 1.7.99 அன்று ஆலந்தூர் நகராட்சியில் பணியில் சேர்ந்தார். அன்னாருக்கு தகுதிகாண் பருவம் 18.09.91ல் முடிக்கப்பட்டுள்ளது.

1. டாக்டர். டி.செல்வராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது ஓய்வு பெற்ற நாள் 31.03.2013 வரை இவர் நகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை.
2. இம்மருத்துவ அலுவலர் வயது முதிர்வு ஓய்வு பெறுவது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு தணிக்கை துறையில் முன் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.
3. தனியர் மீது 31.03.2013 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் ஏதும் நிலுவையில் இல்லை. பின்னர் ஏதேனும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20 முத்திரை தாளில் சம்மத ஒப்புதல் அளித்துள்ளார்.
4. தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை/குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என சான்றளிக்கப்படுகிறது.

வகுப்பு 2ன் கீழ் வரும் மருத்துவ அலுவலர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் இந்நிலையில் டாக்டர் டி.செல்வராணி மருத்துவ அலுவலர் வகுப்பு 2 அவர்களை 31.3.2013 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டிய நிலையில் மார்ச் 2013 மாத மன்றக் கூட்டம் முடிந்துவிட்டதால் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.3.2013 அன்று பிற்பகல் முதல் டாக்டர் டி.செல்வராணி, மருத்துவ அலுவலர் மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர் டி.செல்வராணி மருத்துவ அலுவலர் மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.3.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.13.சு.து.ந.க.எண்.எ1/0054/2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.289/2013 **பொருள் எண்.112**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.எம்.மல்லிகா, அவர்கள் சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் முதன் முதலாக 14.06.1988 அன்று தற்காலிக மருத்துவ அலுவலராக (சித்தா) பணியில் சேர்ந்துள்ளார். பின்னர், அன்னாரின் பணி நியமனத்திற்கு அரசின் பின்னேற்பாணை பெறப்பட்டுள்ளது. 14.06.1988 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. 14.06.1990 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பிறந்த நாள்04.03.1955 ஆகும். அன்னார் 24 ஆண்டுகள் 9 மாதங்கள் 14 நாட்கள் பணி முடித்துள்ளார். அன்னாரின் வயது முதிர்வு ஓய்வு நாள்.31.03.2013 பிற்பகல் ஆகும்.

டாக்டர்.மல்லிகா, மருத்துவ அலுவலர்ர்(சித்தா) மண்டலம்–13 அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. அவர்கள் மீது விசாரணை ஏதும் விழிப்பு குழுமத்தில் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் தெரிவித்துள்ளார். அன்னார் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை. அன்னார் பணிக்காலத்தில் பணிபுரிந்துள்ள மண்டலங்களிலிருந்து தணிக்கைத் தடை , ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரங்கள் பெறப்பட்டுள்ளது. மண்டலம்–13லிருந்து வழங்கப்பட்டுள்ள தணிக்கைத்தடை விவரத்தில் 2012–2013 ம் ஆண்டுக்கு உரிய தணிக்கை அறிக்கை தணிக்கை பிரிவில் இருந்து இன்னும் பெறப்படவில்லை எனவும், பெறப்பட்ட பின்னர் அதில் தணிக்கைத் தடை தெரியவரின் அதற்கு தனியரே முழுப் பொறுப்பாவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரி பழைய மண்டலம்–2ல் பணிபுரிந்த போது அன்னாருக்கு அரசாணைக்கு மாறாக சிறப்பூதியம் வழங்கியது ரூ.23,908/– பிடித்தம் செய்யப்பட வேண்டும். அதனை அன்னாருக்கு வழங்கப்படவுள்ள பணிக்கொடைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அன்னார் மீது நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் எதும் நிலுவையில் இல்லை. அன்னாருக்கு சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை.

சென்னை மாநகாட்சி பணி விதிகளின்படி மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு இரண்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மருத்துவ அலுவலர் அவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனினும் மன்றத்தீர்மானம் பெறுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் டாக்டர்.மல்லிகா, மருத்துவ அலுவலர்(சித்தா) மண்டலம்–13 அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படவுள்ள நிலுவைத் தொகைகள் நிதி இழப்பீடு, தணிக்கைத் தடை மற்றும் நீண்ட கால முன்பணம் நேர் செய்யப்படாமல் இருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரின் அவற்றை மேற்கண்ட அலுவலரின் ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 31.03.2013 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

எனவே, டாக்டர்.எம்.மல்லிகா, மருத்துவ அலுவலர் (சித்தா) மண்டலம்–13 அவர்களை 31.03.2013 அன்று பிற்பகல் வது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ3/52271/1991

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.290/2013 **பொருள் எண். 113**

பணியமைப்பு

சென்னை மாநகராட்சியில், அரசாணை (பல்வகை) எண். 328, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.12.1991ன் படி, தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 5 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவியில் ஒவ்வொரு ஆண்டும் அரசின் அனுமதி பெற்று நீட்டிக்கப்பட்டு வந்தது.

அரசாணை (பல்வகை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 06.04.1993ன் படி, சென்னை மாநகராட்சியில் ஒரு துணை ஆணையர் (போக்குவரத்து) பதவியும், அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளும் கலைக்கப்பட்டன, மற்ற 4 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளும் அரசின் கடைசி நீட்டிப்பு 27.09.12 நாளிட்ட அரசாணை (ப) எண். 244, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறையின் படி, 01.01.2011 முதல் 31.01.2012 வரையில் பணி நீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

27.09.2012 நாளிட்ட அரசு கடிதத்தில், சென்னை மாநகராட்சியில் உள்ள 4 துணை ஆணையர் பணியிடங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு, சென்னை மாநகராட்சியில் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால், இப்பணியிடங்களை சென்னை மாநகராட்சியில் நிரந்தரமாக வைத்துக்கொள்வது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, சென்னை மாநகராட்சியில் உள்ள 4 துணை ஆணையர் பணியிடங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர்களான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் (புதிய ஊதிய விகிதம் ரூ 9300–34800+ 4200 மற்றும் இதர படிகள்) பணியிடங்களை 01.01.2013 முதல் 31.03.2013 வரை நீட்டிப்பு ஆணை மற்றும் 01.04.2013 முதல் சென்னை மாநகராட்சியில் நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்வது தொடர்பாக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க.எண். பி1/6626/2013.

முதன்மை செயலாளர் (ம) ஆணையர் அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.291/2013 பொருள் எண்:114

11 பல் மருத்துவமனை நேரம் மாறும் பணி முறையில் இயங்கவும், கூடுதலாக 15 பல் மருத்துவர்களை பணி நியமனம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–2013 நிதிநிலை அறிக்கை வ.எண். 32ன் படி ஏழை, எளிய மக்களின் மருத்துவ தேவைகளை கருத்தில் கொண்டு 11 புதிய பல் மருத்துவமனைகள் நிறுவ அறிவித்தார்.

மன்றத் தீர்மான எண். 40/2013, நாள். 21.01.2013ல் தேர்வு செய்யப்பட்ட 11 இடங்களில் 11 பல் மருத்துவமனைகள் இயங்க 11 பல் மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்த மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

பெரும்பாலான ஏழை, எளிய மக்கள் பணிக்கு செல்வதாலும், பணிக்கு சென்ற பின் அரசு மருத்துவமனைகளை நாடவேண்டியுள்ளதால் இவ்வேழை எளிய மக்கள் பயன்பெறுவதற்காக தொடங்கப்பட்ட 11 பல் மருத்துவமனைகள், மேலும் நல்லமுறையில் இந்த மக்களுக்கு பயன்பெறும் வகையில் நேரம் மாறும் பணி முறையில் (shift basis) இயக்க வேண்டும் என்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

ஏற்கனவே, இயக்கத்திலுள்ள 4 பல் மருத்துவமனைகளுடன் தொடங்கவிருக்கும் 11 பல் மருத்துவமனைகள்நேரம் மாறும் முறையில் இயக்க 26 பல் மருத்துவர்கள் தேவைப்பட்டதால் ஆணையர் அவர்களிடம் 15.02.2013 அன்று ஆணை பெற்று 11 பல் மருத்துவர்களுக்காக ஆங்கிலம் மற்றும் தமிழ் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்தில் 78 பேர் பங்கு பெற்றதிலிருந்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ. 15,000/– வீதம் கீழ்க்கண்ட 26 பல் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை நாள். 23.3.13ன் படி பணியமர்த்தும் ஆணை வழங்கப்பட்டது.

வ.எண்	பெயர்	பணிபுரிய வேண்டிய இடம்
1	டாக்டர். ஜெ. நித்யா	பெருமாள் கோயில் தெரு, நெற்குன்றம், மண்டலம் –11, கோ –145,காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
2	டாக்டர். பிரித்திங்கா	பாரதிபுரம் மண்டலம்–9 /கோ –101 காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
3	டாக்டர். ஆர் சுந்தர்	கே,கே. நகர் பிரதான சாலை நங்கநல்லூர் மண்டலம்–12 கோ– 166காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
4	டாக்டர். என் பிரவீன் குமார்	வரதராஜபுரம் மண்டலம் –7, கோ– 85மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
5	டாக்டர். உண்ணாமலை	சி.பி. ராமசாமி ரோடு, மண்டலம்–9 கோ–123,காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
6	டாக்டர். ஜெ. தமிழ்மணி	இளங்கோ நகர், மண்டலம்–4/கோ–45,காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
7	டாக்டர். ஆர். ராதிகா	வரதராஜபுரம் மண்டலம் –7, கோ– 85காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
8	டாக்டர். முத்து விஜய ராஜா	பாரதிபுரம் மண்டலம்–9 /கோ –101மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
9	டாக்டர். என். மதுமிதா	தேனாம்பேட்டை மண்டலம் –9, கோ–122,மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
10	டாக்டர். கனிமொழி வசந்குமார்	புதுபேட்டை, மண்டலம் – 9, கோ– 63மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
11	டாக்டர். எஸ். கார்த்திகேயன்	பெசன்ட் நகர், மண்டலம் – 13 கோ–176மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
12	டாக்டர்.காயத்திரிதேவி	அம்பேத்கார் சாலை, மடிப்பாக்கம் மண்டலம்–14 கோ–188, மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
13	டாக்டர். ஆர். காமினி குமாரி	செம்பியம், மண்டலம் –6/கோ –68மதியம் 3 முதல் மாலை 8மணி வரை

14	டாக்டர்.கே. கார்த்திக் பிரபு	தாலாங்குப்பம் பஜார் டெ தரு மண்டலம்–1, கோ–1 காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
15	டாக்டர்.பி.எ. கார்த்திக்	கண்ணபிரான் கோயில் தெரு, மாதவரம் , மண்டலம்–3 கோ–31மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
16	டாக்டர். எஸ். குமரன்	கண்ணபிரான் கோயில் தெரு, மாதவரம் , மண்டலம்–3 கோ–31காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
17	டாக்டர். ஜி. ஆர். ஜெரிஷா	நல்லாங்குப்பம் அசோக் நகர், மண்டலம் –10, கோ– 133 மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
18	டாக்டர். ஆர். நித்யா	அம்பேத்கார் சாலை, மடிப்பாக்கம் மண்டலம்–14 கோ–188,காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
19	டாக்டர். வி.பிரவீன்	பெருமாள் கோயில் தெரு, நெற்குன்றம், மண்டலம் –11, கோ –145, மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
20	டாக்டர். எல். பிரவீனா பெர்னான்டோ	பெசன்ட் நகர், மண்டலம் – 13 கோ–176 காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
21	டாக்டர். கே. பொன்னி	செம்பியம், மண்டலம் –6/கோ –68 காலை 8 முதல் மதியம் 1 மணி வரை
22	டாக்டர். கே. ராஜாத்தி	இளங்கோ நகர், மண்டலம்–4/கோ–45, மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
23	டாக்டர். கே. ஷோபனா	சி.பி. ராமசாமி ரோடு, மண்டலம்–9 கோ–123, மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
24	டாக்டர். சுபாதினி	வி.ஆர் நகர், மண்டலம்–4 கோ– 43, மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
25	டாக்டர். எஸ். சுரேஷ்குமார்	தாலாங்குப்பம் பஜார் டெ தரு மண்டலம்–1, கோ–1 மதியம் 3 முதல் மாலை 8மணி வரை
26	டாக்டர். அன்பரசி	கே,கே. நகர் பிரதான சாலை நங்கநல்லூர் மண்டலம்–12 கோ– 166மதியம் 3 முதல் மாலை 8மணி வரை

எனவே,

1. புதியதாக துவங்கப்படவுள்ள 11 பல் மருத்துவமனைகளை நேரம் மாறும் பணி முறையில் இயங்கவும் (shift basis),
2. நேர்காணல் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து 11 பல் மருத்துவர்களை நியமிக்கும் ஆணையில் நேரம் மாறும் பணி முறையில் பல் மருத்துவமனையை இயக்க கூடுதலாக தேவைப்பட்ட 15 பல் மருத்துவர்களை பங்கு கொண்ட 78 பேரில் தேர்வு செய்யப்பட்டமைக்கு,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.04.2013 அன்று தீர்மான எண். 42/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 186/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.நக.எண்.சி2/0267/2012.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.292/2013 **பொருள் எண்.115**

மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் அனுமதி

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம்–14, சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு கா. செல்வகுமார், என்பவர் தன்னுடைய சொந்த ஊர் மதுரையில் உள்ள உசிலம்பட்டியில் உள்ளதாகவும், அவருடைய தந்தை காலமாகிவிட்டதாலும், தனது மனைவி மதுரையில் உள்ள மருத்துவனையில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்து தனது குடும்பத்தின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் வேண்டி 24.12.12 நாளிட்ட தனியரது கடிதம் வாயிலாக கோரியுள்ளார். இதனை தொடர்ந்து தனியரை ஒரு வழி பணியிட மாறுதல் செய்வது குறித்து முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.02.2013 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், திரு. கா. செல்வகுமார் சுகாதார ஆய்வாளர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் 07.02.2009 முதல் சுகாதார ஆய்வாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு சுகாதார ஆய்வாளர் பதவியில் 07.02.2011 முதல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டது. இவர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தனியர் பணிபுரிந்த காலங்களுக்கு மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு தனியரின் பணிப்பதிவேட்டினை உட்படுத்தி தணிக்கைத்தடை விவரம் பெறப்பட்டதாக 06.03.2013 நாளிட்ட மண்டல அலுவலர், மண்டலம் – 14 அவர்களின் 06.03.2013 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று 13.03.2013 அன்று சான்று கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் இல்லை என 25.02.2013 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 08.07.1996 அரசு கடிதம் பத்தி –4ல் தெரிவித்துள்ளபடி ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் தனியரை எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயல் குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.கா. செல்வகுமார், சுகாதார ஆய்வாளர் மண்டலம் – 14 சுகாதாரத்துறை, சென்னை மாநகராட்சி என்பவரது ஒரு வழி பணியிட மாறுதல் மூலம் மதுரை மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரிக்கையை தொடர்ந்து தனியரை சென்னை மாநகராட்சியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க..எண். சி2 /6930/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்08.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.293/2013 **பொருள் எண்.116**

சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு வேண்டி தளர்வு

திரு. பெ. கோவிந்தராஜ், பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் என்பவருக்கு சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து 21.11.2012 நாளிட்ட பொதுத்துறையின் குறிப்பின் மீது தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திருத்திய குறிப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மண்டலம்– 4 (பணியிடம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு பிரிவு தலைமையகம்) பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணி புரியும் திரு. பெ கோவிந்தராஜ் என்பவர் தனக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்குமாறு 23.11.2011 நாளிட்ட மனுவினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு சமர்பித்துள்ளார்.

திரு. பெ கோவிந்தராஜ், என்பவர் சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண். சி2/2616/2008, நாள். 21.02.2009ன் படி 2.3.2009 முதல் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணியில் சேர்ந்தார். இவருக்கு பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் பதவியில் 02.03.2009 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவருக்கு 02.03.2011 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும், தனியர் பதவி உயர்வு கோரும் கோரிக்கையை 23.12.2011ல் சமர்ப்பித்துள்ளதால் இவரது கோரிக்கை குறித்து தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்மீது இன்றைய தேதியில் துறைசார்ந்த நடவடிக்கை ஏதும் இல்லை. தனியர் சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். இவ்வழக்கில் இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டு டபிள்யூ.பி. எண். 2069/2012 மூல வழக்கு நிலுவையில் உள்ளது என 27.11.2012 நாளிட்ட சட்ட அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரது கோரிக்கை குறித்து ஆணையர் அவர்களுக்கு குறிப்பு சமர்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 10.07.2012 நாளிட்ட உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 10.07.2012 நாளிட்ட குறிப்பில் பின்வரும் விவரங்களை அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கான விவரங்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

1. திரு.பெ. கோவிந்தராஜ் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் என்பவர் சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை வகுப்பு 3 மற்றும் 4 ம் நிலை பணியாளர் வரைவு துணை விதி 2009 ன் படி சுகாதார ஆய்வாளருக்கான நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதியான இளங்கலை அறிவியல் (வேதியியல்) பட்டம் பெறாமல் பள்ளி இறுதி தேர்வில் (+2) ல் வேதியியல் பாடத்தை பயின்று காந்திகிராமத்தில் சுகாதார ஆய்வளருக்கான பயிற்சியினை முடித்துள்ளார். இதற்கு முன்னால் மன்ற தீர்மான எண் 240/2007 நாள் 28.05.2007ன் படி அனுமதி பெற்று சுகாதார ஆய்வாளருக்கான கல்வி தகுதி B.sc (வேதியியல்) பட்டம் அல்லது +2 தேர்வில் தேர்ச்சி மற்றும் காந்திகிராமத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சியில் தேர்ச்சி எனக் குறிப்பிடப்பட்டு 3ம் மற்றும் 4ம் நிலை பணியாளருக்கான வரைவு துணை விதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு முறையே நியமன குழு தீர்மான எண் 377/2007 நாள் 18.07.2007. மற்றும் நியமன குழு தீர்மான எண் 106/2009 நாள் 19.05.2009ன் வாயிலாக அனுமதி பெற்று 25 பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தருக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.
2. தனியர் காந்திகிராமத்தில் சுகாதார ஆய்வளாருக்கான பயிற்சி படிப்பினை 1988ல் முடித்துள்ளார். அக்காலக்கட்டத்தில் +2 தேர்வில் வேதியியல் (Chemistry)பாடத்தை படித்திருந்தால் அவர்களுக்கு சுகாதார ஆய்வாளருக்கான பயிற்சியில் சேர அனுமதித்து பயிற்சி முடித்தற்கான சான்றிதழ் வழங்கப்பட்டு வந்தது. தற்போது B.sc வேதியியல் பயின்றவர்களுக்கு மட்டும் சுகாதார ஆய்வாளர் பயிற்சியில் சேர அனுமதிக்கப்படுகிறார்கள்.
3. தனியர் தலைமையிடம் பிறப்பு மற்றும் இறப்பு பிரிவில் கணினி மூலம் பதிவு செய்யும் பணியினை செய்து வருகிறார். இதனால் இவர் கணினியை கையாளும் அனுபவத்தை பெற்று உள்ளார் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், சென்னை மாநகராட்சி பொது சுகாதார துறையில் ஒரே ஒரு நபரான திரு.பெ. கோவிந்தராஜ் என்பவர் மட்டுமே பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணியாற்றி வருகிறார். இவருக்கு சுகதார ஆய்வாளர் பதவி உயர்வு வழங்காத பட்சத்தில் இவர் ஓய்வு பெறும் நாள் வரை எவ்வித பதவி உயர்வுமின்றி பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.

மேற்கண்ட பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் திரு.பெ. கோவிந்தராஜ் என்பவருக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கிட சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் வரைவு துணை விதி 2009ல் வரிசை எண் 7ல் உள்ள சுகாதார ஆய்வாளர் பணி நியமனம் மற்றும் கல்வி தகுதியினை பின்வருமாறு தளர்வு செய்து சிறப்பு நிகழ்வாக இந்த ஒரு நபருக்கு மட்டும் சுகாதார ஆய்வாளராக பணி நியமனம் செய்ய ஆணை வேண்டப்படுகிறது.

வரைவு துணை விதி 2009ல் தற்போது உள்ள கல்வி தகுதி மற்றும் நியமனமுறை

வ.எண்.	பதவியின் பெயர்	கல்வித்தகுதி	நியமனமுறை
7	சுகாதார ஆய்வாளர் /பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்	1. இளங்கலை அறிவியல் (வேதியியல்) பட்டம் 2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினரால் நடத்தப்படும் சுகாதார ஆய்வாளர் படிப்பில் முதுநிலை பட்டயம் பெற்றிருத்தல் வேண்டும். 3. கணினிப் பயிற்சியில் சான்றிதழ்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதி காணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம். 2. பதவி மாற்றம் வழியாக. 3. நேரடி நியமனம்

தளர்வு செய்யப்படவேண்டிய விவரங்கள்

வ.எண்.	பதவியின் பெயர்	கல்வித்தகுதி	நியமனமுறை
7	சுகாதார ஆய்வாளர்	1பி.எஸ்.சி. (வேதியியல்) பட்டம் (அல்லது) +2 தேர்வில் தேர்ச்சி 2. காந்தி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சியில் தேர்ச்சி	பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யலாம்

திரு பெ. கோவிந்தராஜ் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் என்பவருக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க பொது சுகாதாரத்துறை வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான வரைவு துணை விதியில் மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு தளர்வு செய்து சிறப்பு நிகழ்வாக கருதி இவருக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட கோப்பில் பொதுத்துறையின் 10.01.2013 நாளிட்ட குறிப்பில் தனியர் துணை விதி 2009ன் படி சுகாதார ஆய்வாளர் பதவிக்குண்டான அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்தால் மட்டுமே மேல்நடவடிக்கை தொடருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், திரு பெ. கோவிந்தராஜ், பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் என்பவர் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள 21.02.2013 நாளிட்ட கடிதத்தில், அவர் ஒருவர் மட்டும் சென்னை மாநகராட்சியில் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக குறைந்த ஊதியத்தில் எவ்வித பதவி உயர்வுமின்றி பணிபுரிந்து வருவதாகவும், தனது கோரிக்கையை மறு பரிசீலனை செய்து சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார்.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் +2 தேர்வில் தேர்ச்சி மற்றும் காந்தி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சியில் தேர்ச்சி பெற்று பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணியாற்றி வந்த 25 நபர்களை மன்றத் தீர்மான எண். 240/2007, நாள். 28.05.2007ன் படி கல்வித்தகுதியினை தளர்த்தி அனுமதி பெற்று சிறப்பு நிகழ்வாக நியமனக்குழு தீர்மான எண். 377/2007, நாள். 18.09.2007ன் படி அனுமதி பெற்று 21 பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர்களுக்கு சுகாதார ஆய்வாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக மேலும் இதே கல்வித்தகுதியை பெற்ற 4 நபர்களுக்கு சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. அத்தருணத்தில் திரு.பெ.கோவிந்தராஜ் என்பவர் சென்னை மாநகராட்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்று 02.03.2009ல் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவர் ஒருவர் மட்டுமே தற்போது சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணிபுரிந்து வருகிறார்.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் +2 தேர்வில் தேர்ச்சி மற்றும் காந்தி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்து பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணிபுரிந்த 25 நபர்களுக்கு கல்வித்தகுதியினை தளர்த்தி மன்றத் தீர்மான எண். 240/2007, நாள். 28.05.2007ன் வாயிலாக அனுமதி பெற்று சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட முன் நிகழ்வு இருப்பதாலும், பொது சுகாதாரத்துறையில் இவர் ஒருவர் மட்டுமே பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக பணிபுரிந்து வருவதாலும், பொது சுகாதாரத்துறை வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் வரைவு துணை விதி 2009ல் மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு கல்வித்தகுதி மற்றும் நியமன முறையில் தளர்வு செய்து சிறப்பு நிகழ்வாக திரு.பெ. கோவிந்தராஜ், பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் அவர்களுக்கு சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.02.2013 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு பெ. கோவிந்தராஜ் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தர் என்பவருக்கு சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க பொது சுகாதாரத்துறை வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான வரைவு துணை விதி 2009ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதி மற்றும் நியமனமுறையை தளர்வு செய்து சிறப்பு நிகழ்வாக ரூ. 9300–34800+4300 தர ஊதியத்தில் மற்றும் இதர படிகளுடன் சுகாதாரத்துறையில் காலியாக உள்ள சுகாதார ஆய்வாளர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தில் இவரை சுகாதார ஆய்வாளராக நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

சு.து.ந.க.எண்/000789/2013

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 06.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.294/2013 பொருள் எண்:117

சுகாதாரத்துறை தொற்றுநோய்கள் தடுப்பு மற்றும் வராமல் காத்தல் – பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – புதிதாக மூன்று முழுநேர சுகாதாரக்கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி.

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையின் மூலம் தொற்றுநோய்கள் தடுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், குடிநீர் மற்றும் உணவு சுகாதாரம், பள்ளி மாணவர் நலத்திட்டம், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் மற்றும் தமிழ்நாடு பொதுச்சுகாதாரச் சட்ட விதிகளை அமல்படுத்துதல், பிறப்பு இறப்பு பதிவு செய்து சான்றிதழ் வழங்குதல் மற்றும் பல சுகாதாரப் பணிகள் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றில் கீழ்கண்ட பிரச்சினைகள், வருடம் முழுவதுமோ அல்லது குறிப்பிட்ட காலங்களிலோ ஏற்படுகின்றன.

1)	கொசு தொல்லை	–	வருடம் முழுவதும்
2)	எலி தொல்லை	–	வருடம் முழுவதும்
3)	மலேரியா நோய்	–	வருடம் முழுவதும்
4)	டெங்கு / சிக்குன்குனியா	–	குறிப்பிட்ட காலநிலையில் மட்டும்
5)	குடிநீரின் மூலம் பரவும் நோய்கள்	–	குறிப்பிட்ட காலநிலையில் மட்டும்
6)	ஈ தொல்லை	–	குறிப்பிட்ட காலநிலையில் மட்டும்

இவ்வகையான பிரச்சினைகளை இல்லாமல் ஒழிப்பதற்கு மாநகராட்சி சீரிய நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், இவற்றை முழுவதுமாக ஒழிக்க இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுவது, பொதுமக்களிடம் நோய் உருவாகும் மற்றும் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு இன்மை மற்றும் பங்களிப்பு குறைபாடாகும்.பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி சுகாதாரத்தை மேம்படுத்துவது கடினமான செயலாகும்.

இத்தகைய சூழ்நிலையில், பொதுமக்களிடம் தொற்றுநோய் உருவாகும் விதம், வராமல் தடுக்கும் முறைகள் போன்றவற்றை குறித்து தொடர்ந்து சுகாதாரக்கல்வி வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் நோய்கள் உருவாகாமல் தடுக்க முடியும். சமீபத்தில் சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் சுகாதாரக் கல்வி முறையை தீவிரமாக செயல்படுத்தியதன் மூலம், டெங்கு முதலிய தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதில் பெருமளவு வெற்றியடைந்திருக்கின்றன.

எனவே, பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த, அவர்களின் எண்ணத்திலும் செயல்பாடுகளிலும் மாற்றம் ஏற்படுத்த சுகாதாரக்கல்வி இன்றியமையாததாகும். ஒரே நாளில் இத்தகைய மாற்றம் கொண்டு வருவது கடினமான ஒன்றாகும். இத்தகைய மாற்றத்தை தனிமனிதன், குடும்பம் மற்றும் சமுதாயத்தில் கொண்டுவர, சுகாதாரக்கல்வி மூலமாக தொடர்ந்து விழிப்புணர்வை உருவாக்கி அதன்மூலம் அறிவுப்பூர்வமாக சிந்தித்தல், புதிய மாற்றம் மற்றும் எண்ணங்களை ஏற்றுக்கொள்ளுதல், பழக்க வழக்கத்தில் மாற்றம் முதலியவற்றை முறையாக கடைபிடித்து மாநகராட்சியின் நலத்திட்ட பயனை பெற்று தொற்றுநோய்களை சென்னை மாநகரில் வராமல் தடுக்கலாம்.

கடந்த ஆண்டு சென்னை மாநகரில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டபோது, பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், சமூக குழுக்கள், அலுவலர்கள், மருத்துவமனை நிர்வாகிகள், மற்றும் பலருக்கும் நேரடியாக சுகாதாரக்கல்வி மூலம், கொசுக்கள் உற்பத்தியாகும் விதம், டெங்கு காய்ச்சல் அறிகுறிகள், தடுக்கும் முறைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியதின் வாயிலாக இந்நோயை கட்டுப்படுத்த முடிந்தது.

தற்பொழுது சுகாதார பணியில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள் ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில் அனைத்து சுகாதார பணிகளுடனும், சேர்த்து சுகாதாரக்கல்வி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியையும் செய்து வருகின்றனர். இதன்மூலம் அந்தந்த காலகட்டங்களில் ஏற்படும் நோய் குறித்து மட்டுமே விழிப்புணர்வு ஏற்படுத்த முக்கியத்துவம் தரவேண்டிய சூழ்நிலை உள்ளது.

இந்நிலையில் சுகாதாரக்கல்விக்கு என்று ஒரு தனியான அமைப்பினை மாநகர சுகாதார அலுவலர் அவர்கள் கட்டுப்பாட்டில் உருவாக்குவதன் மூலம், வருடம் முழுதும் பொதுமக்களிடம் கீழ்கண்டவாறு விழிப்புணர்வு ஏற்படுத்தி நோயில்லா சமுதாயத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கலாம்.

1) மலேரியா, டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவும் விதங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், இவற்றை தடுக்கும் முறைகளை கடைபிடிக்கவும் நடவடிக்கை எடுக்கலாம்.

2) வருடம் முழுதும் இருக்கும் கொசுதொல்லையின் காரணிகளையும், கொசுப் பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் முறைகளையும் தெரிந்து கொள்ளவும் செய்யலாம்.

3) குடிநீர் மூலம் பரவும் நோய்களைப் பற்றியும், அவற்றைத் தடுக்கும் முறையும் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ள செய்யலாம்.

4) எலி தொல்லை மற்றும் எலிக்காய்ச்சல் போன்ற நோய்களைப் பற்றி அறிந்து தங்களை தடுத்து கொள்ள செய்யலாம்.

5) சுகாதாரக்கல்வி அலுவலர்கள் மூலம் பொதுமக்களிடையே, சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு நிற்காமல், மக்களின் எண்ணம் மற்றும் நடவடிக்கைகளின் மாற்றங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளவும், பொதுமக்களிடம் சொல்லப்பட்ட வழிகாட்டுதல்களை கடைபிடிக்காததன் காரணங்களை ஆராய்ந்து அதனை சீர்படுத்தவும் செய்யலாம்.

6) ஒவ்வொரு நோய் குறித்தும் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொண்டும், நோய்தடுப்பிற்காக சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தலாம். நோய்களின் தாக்கம் குறித்து பொதுமக்களிடம் தேவையற்ற பயத்தினை போக்கலாம்.

7) ஒவ்வொரு நோயின் போதும்;

   அ) செய்ய வேண்டியன வேண்டாதன பற்றி அறியச் செய்யலாம்.

   ஆ) மூடநம்பிக்கை குறித்து விளக்கலாம்.

8) சுகாதாரம் சம்பந்தமான அரசு மற்றும் சென்னை மாநகராட்சியின் கொள்கை முடிவுகளை பொதுமக்களிடம் கொண்டு செல்லலாம்.

9) இதன் முதற்கட்டமாக அரசு, தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியருக்கு சுகாதாரக் கல்வியின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.

10) வணிக நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்களுக்கு சுகாதாரக் கல்வி அளிக்கலாம்.

இத்தகைய காரணங்களை கருத்தில் கொண்டும், சென்னை மாநகராட்சியின் நற்பெயரை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கும், சென்னை மாநகராட்சி மாநகர நல அலுவலரின் கட்டுப்பாட்டில் மூன்று வட்டார அலுவலகத்திற்கும் தலா ஒரு பணியிடம் வீதம் மூன்று சுகாதாரக் கல்வி அலுவலர்களை நியமிக்கலாம். இப்பதவிக்கான கல்வித்தகுதியாக சமூகவியலில் முதுகலைப்பட்டத்தையும், சுகாதாரத்துறையில் களப்பணி அனுபவத்தையும் தகுதியாக நிர்ணயிக்கலாம். ஏனெனில், இப்பதவியின் நோக்கம் சமூகத்தில் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தி, சென்னை மாநகரின் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதேயாகும். இதற்கு சமூகவியலில் முதுகலைபட்டம் பெற்று, சுகாதாரத்துறையில் களப்பணி அனுபவம் கொண்டவர்களை நியமித்தால் அதன்மூலம் சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தி நோயற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும். இப்பதவிக்கான ஊதிய விகிதமாக அடிப்படை ஊதியம் 15600–39100+தரஊதியம் 5400 என்று நிர்ணயிக்கலாம். இவ்வாறு உருவாக்கப்படவுள்ள இப்பதவிகளுக்கு மொத்தமாக ஒரு வருடத்திற்கு ரூ.14,19,120/– (ரூபாய் பதினான்கு லட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்று இருபது மட்டும்) செலவாகும். இச்செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தற்போது சுகாதாரத்துறையில் ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல சுகாதார அலுவலர்களின் கட்டுப்பாட்டில் துப்புரவு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சுகாதாரத் துறையின் அனைத்து பணிகளிலும், மண்டல சுகாதார அலுவலருக்கும், மாநகர சுகாதார அலுவலருக்கும் மிகுந்த பயனுள்ள வகையில் துப்புரவு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் சுகாதார ஆய்வாளர் பணியிலிருந்து பணிமூப்பு அடிப்படையில் துப்புரவு அலுவலர்களாக பதவி உயர்வு

பெறுகின்றனர். மேலும் சென்னை மாநகராட்சியின் துப்புரவு அலுவலர்களுக்கு என்று எவ்விதமான பதவி உயர்வும் தற்பொழுது இல்லை. துப்புரவு அலுவலர்களுக்கு தகுதி மற்றும் பணிமூப்பு அடிப்படையில், சுகாதாரக்கல்வி அலுவலர் பதவி அளிப்பதன் மூலம், புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள சுகாதாரக்கல்வி அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றுக்கு, மாநகராட்சிக்கு ஏற்படும் நிதிச்சுமை அதிக அளவில் இல்லை.

சென்னை மாநகராட்சியில் இயங்கும் குடும்பநலத்துறையில் மாநகராட்சியின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சமூகவியல் முதுகலைப் பட்டம் பெற்ற 5 துணை தொடர்பு அதிகாரிகள், அ.ஊ 15600–39100 +த.ஊ. 5400 என்ற ஊதிய விகிதத்தில், பதவி உயர்வின் மூலம் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை மாநகரில் பொதுச் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் சுகாதாரத்துறைக்கு என்று சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

எனவே, சுகாதாரக்கல்வி அலுவலர் பதவி நியமனம் செய்ய கீழ்கண்ட தகுதிகளை நிர்ணயித்து துணை விதிகளை ஏற்படுத்தலாம்.

	நியமன முறை			**தகுதிகள்**
1.	பதவி உயர்வு மூலம்	–	1)	சென்னை மாநகராட்சியில் பணிமூப்பு அடிப்படையில் துப்புரவு அலுவலர் பணியிலிருந்து
			2)	அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகத்திடமிருந்து சமூகவியலில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்
			3)	மொத்த பணிக்காலத்தில், சுகாதாரத் துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் களப்பணி அனுபவம்
			4)	பதவி உயர்வு பெற்ற ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்
2.	நேரடி நியமனம்	–	1)	அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகத்திடமிருந்து சமூகவியல் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்
			2)	அரசு மற்றும் அரசு சார்ந்த சுகாதாரத் துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் களப்பணி அனுபவம்.
			3)	பதவி நியமனம் பெற்ற ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்
3.	பதவி மாற்றம்	–	1)	அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்திடமிருந்து சமூகவியல் முதுகலைப்பட்டம்பெற்றிருக்க வேண்டும்.
			2)	அரசு மற்றும் அரசு சார்ந்த சுகாதாரத்துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் களப்பணி அனுபவம்.
			3)	ஒத்த ஊதிய விகிதத்தில் அரசு / அரசு சார்ந்த சுகாதாரத்துறையில் பணியில் இருக்க வேண்டும்.
			4)	பதவி மாற்றம் பெற்ற ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்

எனவே,

அ) சுகாதாரத்துறையில் தோற்றுவிக்க உத்தேசித்துள்ள சுகாதாரக்கல்வி அலுவலர் பதவிக்கு ஊதிய விகிதம் அ.ஊ. 15600–39100 + த.ஊ. 5400 மற்றும் இதர படிகள் என நிர்ணயித்து மூன்று பணியிடங்களை உருவாக்கவும்

ஆ) இவ்வாறு உருவாக்கப்படவுள்ள சுகாதாரக்கல்வி அலுவலர்களுக்கான கீழ்கண்ட பணிவிதிகளை சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை எண்.91, நகராட்சி நிர்வாகம் மற்றும் (மாந–3) துறை, நாள் 28.05.1998 சேர்த்து அரசாணை வெளியிடவும்.

பதவி ஊதிய விகிதம்	நியமன முறை	தகுதிகள்
சுகாதார கல்வி அலுவலர் 15600–39100+ த.ஊதியம் 5400 வகுப்பு–2	பதவி உயர்வு மூலம்	1) சென்னை மாநகராட்சியில் பணிமூப்பு அடிப்படையில் துப்புரவு அலுவலர் பணியிலிருந்து 2) அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகத்திடமிருந்து மூகவியலில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும் 3) மொத்த பணிக்காலத்தில், சுகாதாரத்துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் களப்பணி அனுபவம் 4) பதவி உயர்வு பெற்ற ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்
	நேரடி நியமனம்	1) அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகத்திடமிருந்து சமூகவியல் முதுகலைப்பட்டம்பெற்றிருக்க வேண்டும் 2) அரசு மற்றும் அரசு சார்ந்த சுகாதாரத் துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் களப்பணி அனுபவம். 3) பதவி நியமனம் பெற்ற ஓராண்டு காலத்திற்குள்தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்
	பதவி மாற்றம்	1) அரசு அங்கீகாரம் உள்ள பல்கலைக் கழகத்திடமிருந்து சமூகவியல் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும் 2) அரசு மற்றும் அரசு சார்ந்த சுகாதாரத்துறையில் குறைந்தபட்சம் 10ஆண்டுகள் களப்பணி அனுபவம். 3) ஒத்த ஊதிய விகிதத்தில் அரசு /அரசு சார்ந்த சுகாதாரத்துறையில் பணியில் இருக்க வேண்டும். 4) பதவி மாற்றம் பெற்ற ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

மேற்கண்ட 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இனங்களுக்கு அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.27/2013, நாள்.12.04.2013ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மற்றும் நியமனக்குழு வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 142/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

க.து.ந.க.எண்.டி1/060/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.295/2013 பொருள் எண்.118

வடக்கு மற்றும் தெற்கு சமுதாயக்கல்லூரி ஒருங்கிணைப்பாளர் பணியினை தற்காலிகமாக (01.11.2012 முதல் 31.05.2013 வரை) பணிநீட்டிப்பு செய்ததற்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்மூலம் கீழ்காண் 5 சமுதாயக்கல்லூரிகள் இயங்கி வருகிறது.

வ.எண்.	சமுதாயக்கல்லூரிகளின் முகவரிகள்	மண்டலம்
1	சமுதாயக்கல்லூரி (வடக்கு) 38, நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, ஏழுகிணறு, சென்னை–600 001	மண்டலம்–2
2	சமுதாயக்கல்லூரி (தெற்கு) 24, அருணாச்சலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005	மண்டலம்–6
3	சமுதாயக்கல்லூரி (மத்திமம்) 32, சுந்தரம் தெரு, புரசைவாக்கம் சென்னை– 600 007	மண்டலம்–4
4	சமுதாயக்கல்லூரி (கிழக்கு) 19, சி.வி.ராமன் ரோடு, சென்னை– 600 018	மண்டலம்–10
5	சமுதாயக்கல்லூரி வி.கே.பிள்ளை, சூளை, சென்னை– 600 112	மண்டலம்–3

சென்னை மாநகராட்சி சமூதாயக் கல்லூரிகளை சிறந்த முறையில் செயல்படுத்தவும், வளர்ச்சிப்பணிகள் மற்றும் பல்வேறு வசதிகள் செய்யவும் சமுதாயக் கல்லூரிகளை ஒருங்கிணைப்பாதற்காக சென்னை பள்ளியின் ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்கள் திரு.க.இராமஞ்சலு (ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்) மண்டலம்–1 முதல் 5 வரை மற்றும் 6 முதல் 10 வரை உள்ள ஒருங்கிணைப்பாளர் திருமதி.ஜெ.சாந்தாமணி (ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்) அவர்களையும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் மன்றத்தீர்மான எண்.439/10 நாள்.29.10.2010 மன்றத்தீர்மான எண்.154/12 நாள். 10.05.2013ன் படி இரண்டு ஆண்டு பணிக்காலம் 31.10.2012 அன்றுடன் முடிவடைந்தது.

ஒருங்கிணைப்பாளர்கள் திரு.க.இராமஞ்சலு மற்றும் திருமதி.ஜெ.சாந்தாமணி ஆகியோர் சமுதாயக்கல்லூரி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு தற்காலிகமாக ஓர் ஆண்டு தொடர்ந்து செய்வதற்கு இணை ஆணையர் (கல்வி) அவர்களுக்கு விருப்பக்கடிதம் அளித்தனர்.

மேலும் சமுதாயக் கல்லூரிகளில் 2013 ஆண்டு ஜூன் மாதத்திற்குள் குறுகிய கால பயிற்சிகள் முடிவடைய உள்ளது. இந்த மாணவர்கள் பயிற்சியினை கண்காணிப்பது மிகவும் அவசியமான ஒன்று, இதனை ஒருங்கிணைப்பாளர்கள் கவனித்து வருகின்றனர்.

எனவே 5 சமுதாயக் கல்லூரி பணிகளை மேற்பார்வை செய்வதற்கு மண்டலம்–1 முதல் 5 வரை திரு.இராமஞ்சலு மண்டலம் 6 முதல் 10 வரை திருமதி. ஜெ.சாந்தாமணி அவர்களை 01.11.2012 முதல் 31.05.2013 வரை தற்காலிக அடிப்படையில் பணி நீடிப்பு செய்ய மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெற 6.11.2012 அன்று ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு உள்ளது.

1. திரு.இராமஞ்சலு (1–5) மற்றும் (6–10) திருமதி.ஜெ.சாந்தாமணி அவர்களை 01.11.2012 முதல் 31.05.2013 வரை முற்றிலும் தற்காலிகமாக பணி நீட்டிப்பும்,
2. மாதத்தொகுப்பூதியம் ரூ.9,500/– யை தற்காலிக தொகுப்பூதியமாக இருவருக்கும் வழங்கவும்,
3. இச்செலவினத்தை 230 இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினங்களை துறை 80–82–01–230–11–01–01 கல்வி தர மேம்பாடு – சிறப்பு வகுப்புகள் செலவுகள் என்ற கணக்கு தலைப்பின் கீழ் ரூ.9,500 X 2 X 7 = ரூ.1,33,000 /– (ஒரு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும்,

எனவே, மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.14/2013, நாள் 16.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 160/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

****

பொ.து.ந.க.எண். ஈ1 / 42610 / 2013

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.296/2013 **பொருள் எண்.119**

பணியமைப்பு

அரசாணை (ப) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–III) துறை, நாள்: 27.02.2013ன் படி, திரு.லெஸ்லி ஜோசப் சுரேஷ் குமார், தலைமைப் பொறியாளர் (திட்டம் வரைபடம் மற்றும் ஆய்வு, நெடுஞ்சாலை, சென்னை அவர்கள் – சென்னை மாநகராட்சி, தலைமைப் பொறியாளர் (சிறப்பு திட்டப்பணி) ஆக அயற்பணியில் 17.04.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்காகவும் தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது ."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

****

பொ.து.ந.க.எண். ஈ3 /13046/ 2013
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.297/2013 **பொருள் எண். 120**

பணியமைப்பு

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர்சென்னை – 5, அவர்களின் கடிதம் எண்.பணி–1 (3) / DC 16 / 2013 நாள்: 07.03.2013ன் படி, திருமதி.வி.ஆர்.சுப்புலஷ்மி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது), வேலூர் மாவட்டம் அவர்கள், சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) ஆக அயற்பணியில் 18.03.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்காகவும் தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது ."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ3/11738/2013

முதன்னை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.298/2013 **பொருள் எண்.121**

பணியமைப்பு

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் சென்னை–5, அவர்களின் கடிதம் எண்.பணி–1 (3) / DC 135-2/2012 நாள்: 02.01.2013ன் படி, திரு.பெ.வே.சரவணன், வட்டாட்சியர் (பெரம்பலூர் மாவட்டம் வருவாய் அலகு), பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் துணை ஆட்சியராக பதவி உயர்வு பெற்று சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) ஆக அயற்பணியில் 08.03.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்காகவும் தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது ."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/636/2012
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.299/2013 **பொருள் எண்.122**

மண்டலம்–6, வார்டு–73, குட்டி தம்பிரான் தெரு, புளியந்தோப்பு பகுதியில் நியாய விலை கடைக்கு மாற்று இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் டிமல்லர்ஸ் சாலை, குட்டி தம்பிரான் தெரு ஆகீய இரு அமுதம் நியாய விலைக் கடைகளுக்கு மாற்று கட்டமாக மண்டலம்–6, வார்டு–73, போளூ தெருவில் உள்ள மாநகராட்சி கட்டிடத்தை நியாய விலை கடைகளுக்கு தற்காலிகமாக மாத வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மண்டல அலுவலரின் குறிப்பில் நியாய விலை கடை நடத்த 227 சதுர மீ பரப்புள்ள இவ்வலுவலகத்தில் 7.55 மீ × 7.50 மீ (56.63 சதுர மீ) மொத்தம் 610 சதுர அடி பரப்பளவு தரைத்தளக் கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நியாய விலை கடை அமைக்க மாத வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.15 நாள்09.01.2013 பரிந்துரைத்துள்ளது என தெரிவித்துள்ளார்.

எனவே மண்டல–6, பகுதி–17, கோ–73ல் போளூ தெருவில் உள்ள மாநகராட்சி கட்டிடத்தை 7.55 மீ × 7.50 மீ (56.63 சதுர மீ) மொத்தம் 610 சதுர அடி பரப்பளவு தரைத்தளக் கட்டிடத்தை மாத வாடகை அடிப்படையில் 12 மாத முன்பணம் செலுத்த வேண்டும் என்றும் பின்னர் மன்றம் நிர்ணயிக்கும் வாடகைத் தொகை செலுத்த வேண்டும் என்றும் இக்கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் மாநகராட்சியிடம் அனுமதி பெற்று செய்யவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் நியாய விலை கடை ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 215/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.க.கு.ந.க.எண்.அ8/ 1094 /2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் 19.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.300/2013 **பொருள் எண்.123**

அரசாணை அமலாக்கம்

அரசாணையில், பொது வருங்கால வைப்பு நிதிக்கான 2011–12ஆம் நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 01.04.2011 முதல் 30.11.2011 வரை 8 சதவீதமாகவும் 01.12.2011 முதல் 8.6 சதவீதமாகவும் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது. அரசு ஆணையின் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(Abstract)

Provident Fund – General Provident Fund (Tamil Nadu) and other similar funds – Rate of interest for the financial year 2011 – 2012 – Orders - issued

---

Finance (Allowances) Department

G.O.Ms.No.106 **Dated: 30.03.2012**
Panguni -17,
Thiruvalluar Aandu 2043.

Read:-

1. G.O.Ms.No.80, Finance (Allowances) Department, dated 02.03.2012.
2. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs, New Delhi letter F.No.5(1) – B(PD) /2011, dated 19.03.2012

ORDER:

The Government direct that the rate of interest on the accumulations at the credit of the subscribers to the following Provident Funds for the financial year 2011 – 2012 commencing from 01.04.2011 to 30.11.2011 shall continue to be at 8% per annum and at 8.6% (Eight point Six percent) with effect from 01.12.2011.

i) General Provident Fund (Tamil Nadu)
ii) Contributory Provident Fund (Tamil Nadu)
iii) Pudukottai Sate Provident Fund
iv) Travancore State Provident Fund
v) Travancore Contingent Employees Provident Fund

2) The rate of interest on belated final payment of Provident Fund accumulations remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as indicated in para – 1 above.

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

// Forwarded / By Order //

SECTION OFFICER

எனவே, அரசாணை எண்.106, நிதித்(படிகள்)துறை, நாள் 30.03.2012னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> ‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 187/2013 நாள் 19.04.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பே.சா.து.ந.க.எண்.பி1/1044/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.301/2013 பொருள் எண்.124

தகவல் தொழில் நுட்பம் – செய்தி போக்குவரத்து அடிப்படை வசதி –ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் (Reliance Jio Infocomm Limited (formerly M/s.Infotel Broadband Services Limited)) – கண்ணாடி இழை வடங்கள் பதிக்கும் திட்டம் – அனுமதி வழங்குதல் – அரசாணை அமுல்படுத்த அனுமதி.

அரசு சார்பு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களின் கடித எண்.8427/M.C.I/2013–1, நாள்.15.04.2013. மற்றும் அரசாணை (2டி)எண்.3 தவகல் தொழில்நுட்ப (பி4) துறை, நாள் 28.03.2013. இணைத்து தகவலுக்காகவும், நடவடிக்கைக்காகவும் அனுப்பியுள்ளார்.

திருவாளர்கள். ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் (Reliance Jio Infocomm Limited (formerly M/s.Infotel Broadband Services Limited)) அவர்களுக்கு சென்னையில் கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை ஒப்புக்கொண்டதால் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டது.

எனவே, 1) திருவாளர்கள். ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் (Reliance Jio Infocomm Limited (formerly M/s.Infotel Broadband Services Limited)) நிறுவனத்திற்கு கண்ணாடி இழை வடங்களை பதிப்பதற்கு பொது வழி தட உரிமையை உபயோகிக்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1) அரசாணை (2டி) எண்.3 தகவல் தொழில்நுட்ப (பி4) துறை வழங்கியுள்ள திருவாளர்கள் ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் (Reliance Jio Infocomm Limited (formerly M/s.Infotel Broadband Services Limited)) அரசாணையில் குறிப்பிட்டுள்ள எல்லா நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். இது சம்மந்தமாக அவ்வப்போது கூறப்படும் திருத்தங்களும் பொருந்தும்.
2) வருடாந்திர தட வாடகையாக (Annual Track Rent) தற்போதைய அரசாணைப்படி ஒரு கிலோ மீட்டருக்கு ரூபாய் 9,400/– (ரூபாய் ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்) வீதம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். மாமன்ற தீர்மான எண்.226/2012ன்படி மேற்படி தட வாடகை 1 கி.மீ க்கு ரூ.9,400/– லிருந்து ரூபாய் 29,500/– ஆக உயர்த்தி விதிக்க மன்ற தீர்மானம் இயற்றப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்தொகை அரசால் ஏற்கப்படின் அதனை செலுத்த மேற்படி ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் சம்மதம் தெரிவித்து கடிதம் பெறப்பட்டுள்ளது.
3) முடிந்த வரை சாலை வெட்டில்லா தொழில் நுட்ப (Trenchless Technology) முறையை பயன்படுத்தி வடங்கள் அமைக்க வேண்டும்.
4) சென்னை மாநகராட்சி, ஆணையர் தலைமையில், உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகள், காவல் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையை சேர்ந்த உயர்மட்ட குழு மேற்கண்ட கண்ணாடி இழை வடங்கள் பதிக்கும் பணிகளை ஒருங்கிணைந்து கண்காணிக்கும்.
5) மேற்கண்ட நிறுவனம் சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் நிர்வாக இயக்குநர், எல்காட் நிறுவனம் அவர்களுக்கு தமிழ்நாடு மாநிலம் சார்ந்த நெட்வொர்க்கு (TNSWN) 2 mbps அகல கட்டினை கட்டணம் ஏதும் இன்றி அமைத்து தர உறுதி மொழி அளிக்க வேண்டும்.

இந்நிறுவத்தால் கேபிள் அமைக்கும் பணி முடிந்த பின் சாலை வெட்டுகளை சரி செய்யும் பணி (Restoration of Road Cut) சென்னை மாநகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தரப்படி (Specification) சென்னை மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் வகையில் அந்நிறுவனம் செய்து முடிக்க வேண்டும்.

மேலும், அரசாணையில் குறிப்பிட்டுள்ள எல்லா நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்படும் என்று பிணை வைப்பு காப்புறுதி பத்திரம் (Indeminity Bond) ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் இந்நிறுவனம் கொடுக்க வேண்டும்.

குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி திருவாளர்கள். ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் லிமிடெட் (Reliance Jio Infocomm Limited (formerly M/s.Infotel Broadband Services Limited)) நிறுவனம் சென்னை நகரில் கண்ணாடி இழை வடங்களை பதிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான அரசாணையை அமுல்படுத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.04.2013 அன்று தீர்மான எண். 188/2013, நாள். 25.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.04.2013 அன்று தீர்மான எண். 218/2013, நாள்.25.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/1252/2010

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.302/2013 பொருள் எண்.125

கலைப்பயன்பாட்டிற்கு மயிலாப்பூர் லஸ் அவென்யூவில் உள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டது – பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட அனுமதி.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொருண்மையில் உள்ள கலைப் பண்பாட்டு இயக்கத்தின் கீழ் இயங்கி வரும் சவகர் சிறுவர் மன்றத்திற்கு சென்னை மாநகராட்சி, மண்டலம்–10 புதிய மண்டலம்–9 லஸ் அவென்யூ நாகேஸ்வர பூங்கா அருகே அமைந்துள்ள செயல்படாத மாநகராட்சி பள்ளி கட்டிடம் வார்டு குழுவால் பரிந்துரைக்கப்பட்டு 22.06.2010 நாளிட்ட 263/2010 எண்ணிட்ட தீர்மானம் மூலம் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் சவகர் சிறுவர் மன்ற செயல்பாட்டிற்கு வாடகையின்றி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1. இந்த இடத்தை யாருக்கும் உபகுத்தகைக்கு / வாடகைக்கு அளிக்கக்கூடாது.
2. இந்த இடத்தை சவகர் சிறுவர் மன்ற செயல்பாட்டிற்கு தவிர வேறு எந்த பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்தக்கூடாது.
3. இந்த இடத்தில் புதிய கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது.
4. இந்த இடத்தை வணிகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது.

கலை பண்பாட்டுத் துறை ஆணையர் தம் 14.09.2010 நாளிட்ட கடிதத்தில் சவகர் சிறுவர் மன்றத்திற்கு சொந்தமாக கட்டிடம் எழுப்பிட மைய அரசு வழங்கிய தொகையில் கட்டிடம் அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்து, இதனை சிறப்பு நேர்வாகக் கருதி குறிப்பிட்ட வகையில் கட்டிடம் எழுப்பிட மாநகராட்சியின் ஒப்புதலை விரைவில் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் 18.04.2011 நாளிட்ட கடிதத்தில் ஆணையர், கலை பண்பாட்டு இயக்ககம் அவ்விடத்தில் புதிய கட்டிடம் எழுப்பிட மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

18.09.2012 நாளிட்ட நேர்முக கடிதத்தில் முதன்மைச் செயலர் / ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தற்போதுள்ள கட்டடம் பாழடைந்து எப்போது விழுந்து விடுமோ என்ற பயம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே தான், அந்த இடத்தில் புதிய கட்டிடம் கட்டுவது நல்லது என தீர்மானிக்கப்பட்டு, இதற்காக டெல்லி பாலபவனிடம் ரூபாய் ஒரு கோடி பெற்று வங்கியில் வைப்பு நிதியாக வைத்துள்ளதாகவும், இத்துறை நிலத்தை கேட்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் 1) அங்கு கட்டிடம் கட்ட மட்டுமே அனுமதி கோரப்படுகிறது என்றும்,

2) பொதுப்பணித்துறை அல்லது மாநகராட்சியிடம் கட்டுமானப் பணியினை ஒப்படைக்க துறை தயாராக உள்ளது என்றும்,

3)நிலம் திரும்ப ஒப்படைக்கும் போது அதில் கட்டப்பட்ட கட்டிடமும் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என்றும்,

4) இது தொடர்பாக மாநகராட்சி விதிக்கும் அனைத்து விதிமுறைகளையும் துறை ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளது என்றும் தெரிவித்து, மாநகராட்சி இதற்கான தனது ஒப்புதலை விரைவில் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.46 நாள்–10.1.2013 சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத்துறைக்கு கீழ்கண்ட நீபந்தனைகளுடன் புதிய கட்டிடம் கட்டுவதற்கு பரிந்துரைத்துள்ளது.

1. மேற்படி நிலத்தில் தற்போது உள்ள சென்னை மாநகராட்சி கட்டிடத்தை கட்டிட விதிகளின்படி இடித்துவிட்டு அவ்விடத்தில் சென்னை மாநகராட்சி கட்டிட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட அனுமதியுடன் புதிய கட்டிடம் கட்டிக் கொள்ளலாம்.
2. மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண்.7, புல எண்.3573/1 பாகம் 8 மனை 194 சதுர அடி பரப்பளவுள்ள சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் அதில் கலை பயன்பாட்டு இயக்கத்தின் பொருட் செலவில் கட்டப்பட உள்ள கட்டிடத்தையும், உள் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு அளிக்கக் கூடாது.

3. மேற்படி நிலம் மற்றும் அதில் கட்டப்படவுள்ள புதிய கட்டிடத்தை சவகர் சிறுவர் மன்ற செயல்பாட்டிற்கு தவிர வேறு எந்த பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்த கூடாது.
4. மேற்படி நிலம் மற்றும் அதில் உள்ள கட்டிடத்தையும் வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது.
5. மேற்குறிப்பிட்ட நிலம் சென்னை மாநகராட்சி உரிமையில் தொடர்ந்து இருக்கும்.
6. மேற்படி நிலத்தை திரும்ப ஒப்படைக்கும் போது அதில் கட்டப்படும் கட்டிடத்தையும் சென்னை மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
7. மேற்படி நிலம் மற்றும் புதிய கட்டிடத்திற்கான மின்கட்டணம், குடிநீர் கழிவுநீர் வரிக் கட்டணம், நிலவரி மற்றும் இதர வரிகளை கலை பயன்பாட்டுத் துறை உரிய அமைப்புகளில் நேரடியாக செலுத்த வேண்டும்.
8. மேற்கண்டவற்றை தவிர, மேற்படி நிலம் மற்றும் கட்டிடம் தொடர்பாக சென்னை மாநகராட்சி சூழ்நிலைகளை பொறுத்து விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் கலை பயன்பாட்டு இயக்ககம் ஏற்க வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்ட கட்டுமான பணியினை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

எனவே, மண்டலம்–9 பகுதி–25, வார்டு–125ல் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளி இடத்தில் கலைபண்பாட்டுத் புதிய கட்டிடம் கட்டுவதற்கு 9வது வார்டுக் குழு தீர்மானத்தில் பரிந்துரைத்துள்ள நிபந்தனைகளுடன் மாநகராட்சி அலுவலர் விரும்பும்போது அவ்விடத்தை ஆய்வு செய்வர் என்னும் நிபந்தனையுடன் சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 187/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 216/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பொ.து.ந.க.எண்.ஈ1/38341/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.303/2013 **பொருள் எண்.126**

உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியல்

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்று இருந்தது. தற்போது அதிகார பகிர்ந்தளிப்பு ஆணையின் படி முழு அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி/இளநிலை பொறியாளர் பதவியாகும்.

1	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	உதவி செயற் பொறியாளர்.	
2	மைய நாள்	01.06.2012	
3	ஊதிய விகிதம்	ரூ.15600–39100 + 5400 தர ஊதியம்	
4	காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies)	1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் 2) புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் அரசாணை எண்.95 நநி(ம)குவ(மாந–3)துறை, நாள்:14.10.12. **மொத்தம்** (அ) தற்காலிக பணியிடம் (ஆ) நிரந்தர பணியிடம் 3) மைய நாளான 01.06.2012 அன்று ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம். 4) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும்/ஏற்பட்ட காலிப்பணியிடம் 5) செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதினால் ஏற்படும் காலிப்பணியிடம் 6) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் 7) புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் **மொத்தம்**	125 19 144 00 144 04 08 36 07 19 74
5.	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?	கடந்த ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு மன்றத் தீர்மான எண்.184/2011, நாள் 29.06.2011ன்படி அனுமதி பெறப்பட்டு 16 உதவி/இளநிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.	

உதவி செயற்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு

Assistant Executive Engineer (other than Assistant Divisional Engineer (Electrical) ரூ.15600–39100 + 5400 தர	By promotion from the categories of Junior Engineers and Assistant Engineers, Head Draftsman and Surveyors in the Corporation Engineering Subordinate Services;	(i) (a) B.E. Degree (Civil or Mechanical) of any University or Institution recognized by the University grants Commission for purposes of its grant or any other qualification considered equivalent thereto; (b) Must have served as Assistant Engineer in the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer, Grade II, Junior Engineer or Supervisor (Public Health) for a period of not less then five years on duty: Provided that a person who acquires an engineering degree or its equivalent during his service as

ஊதியம்	(G.O. Ms. No.296, M.A. & W.S., dated 12.03.1990) in the ratio of 3 : 1 between the Degree holders and the Diploma holders ; of (G.O. Ms. No.138, M.A. & W.S., dated 09.02.1990)	Junior Engineer in the Corporation Engineering Subordinate Service will be eligible for appointment as Assistant Executive Engineer if he has put in three years of service in the Corporation Engineering Subordinate Service after getting the Engineering degree or its equivalent. The person so acquiring the Engineering degree or its equivalent will be placed immediately below the person holding the post of Assistant Engineer on the date of acquiring the above qualification; or (G.O. Ms. No. 138, MA and WS, dt. 9-2-1990.) (c) (d) Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto: Provided that Draftsman, Overseers and Surveyors of the Corporation Engineering Subordinate Service promoted as Junior Engineer in the same service; Head Surveyors and Head Draftsman of the Corporation Engineering Subordinate Service Municipal Engineer Grade-III or Supervisor (Public Health) Possessing the qualifications referred to in item (d) above shall be eligible for appointment as Asst. Exe. Engrs. Only if they have put in a total service of not less than 10 years in one or more categories or as Municipal Engineer Grade III or as Supervisor (Public Health) and (G.O. Ms. No. 907 RD and LA dt. 20-5-1981.) (ii) A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates.

மூப்பு நிலையின்படி, பின்வரும் அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர் பதவிக்காக பதவி உயர்வுக்கு தகுதியுடையவர்களாகின்றனர்.

5 ஆண்டு பணிமுடித்து பட்டம் பெற்ற உதவி பொறியாளர்கள் பெயர் மற்றும் பணியில் சேர்ந்த நாள்		10 ஆண்டு பணிமுடித்து பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர்கள் பெயர் மற்றும் பணியில் சேர்ந்த நாள்	
1. திரு. சி. லாரன்ஸ்,	30.06.1993	• திரு. சி.சேகர்	30.06.1979
2. திரு. ஆர்.ஜெயகுமார்சிங்	13.07.1995	• திரு. ஜி.செல்வரங்கம்	29.06.1979
3. திரு. ஆர்.ராமச்சந்திரன்	12.11.1995	• திரு.கே.மனோகரன்	17.08.1979
4. திரு. எம்.பி.தணிகைவேலன்	02.05.2003	• திரு.டி.ஆர்.பாண்டுரங்கன்	23.10.1979
5. திரு. ஆர்.எல்.தமிழன்பு	22.11.2003	• திரு.வி.கிருஷ்ணமூர்த்தி	01.11.1979
6. திரு. ஆர்.புருஷோத்தமன்,	15.12.2003	• திரு.ப்பி.பூபாலன்	05.02.1980
7. திரு. ப்பி.பசுபதி	19.05.2004	• திரு.ப்பி.டீ.ஓம்காரன்	26.11.1980
8. திரு. என்.முருகவேல்	27.11.2004	• திரு.ப்பி.ராஜேந்திரன்	27.02.1981
9. திரு.எஸ்.குப்புராஜ்	07.05.2004	• திரு.வி.ஸ்ரீனிவாசமூர்த்தி	05.01.1984
10. திரு.ஆர்.ஸ்ரீராமுலு	02.06.2006	• திரு.டி.செல்லையாதர்மராஜ்	24.05.1984
11. திரு. ஆர்.ராஜேந்திரன்	30.06.2006	• திரு.ஏ.மோகன்	15.09.1984
12.திரு. ஆர்.கோவிந்தராஜ்	01.06.2007	• திரு.கே.அமிர்தலிங்கம்	15.09.1984
13. திரு.பி. ஞானசந்திரன்,	12.04.2009	• **திரு.வி.குணசேகரன், இ.பொ.து**	17.09.1984
14.திருமதி.வளர்மதி		• திரு.எஸ்.ஆர்.ஜெகன்நாதன்	20.09.1984
15.திரு.ஆர்.சங்கரன்(தற்காலிக பணிநீக்கம்)		• திரு.எஸ்.தேவபாலன்	20.09.1984
16.திரு.ஜி.லோகேஸ்வரன்		• திரு.ஜி.அகோரமூர்த்தி	08.01.1988
17.திரு.எஸ்.ஹரிநாத்		• திரு.என்.பத்மநாபன்	27.09.1989
18.திருமதி.ரோசிலின் ஞானமணி		• திரு.எம்.ஆனந்தகுமார்	13.08.1990
19.திரு.யு.சரவணகுமாரி		• திரு.எம்.சங்கரபாபு	16.08.1990
20.திரு.கே.எம்.நமசிவாயம்		• திரு.கே.வசந்தகுமார்	03.04.1991
21.திரு.பி.வரதராஜன்		• திரு.நாபாஹிநாத்	02.12.1991
22.திரு.எம்.முருகன்			02.12.1991
			29.11.1991

23.திருமதி.எஸ்.மலர்விழி 24.திரு.ஆர்.செல்வகுமார் 25.திரு.ஆர்.கண்ணன் 26.திருமதி.ஜி.சாந்தி 27.திருமதி.எம்.கீதா 28.திரு.பி.பன்பரசன் 29.திரு.சி.ராஜூ 30.திரு.என்.ஆனந்தராஜ் 31.திரு.டி.முகிலன் 32.திரு.ஜெ.எஸ்.செந்தில்குமார் 33.திரு.ரவிராஜன் 34.திரு.ஜி.நவக்குமார் 35.திருமதி.டி.சுபாஷினி 36.திருமதி.என்.சரோஜா 37.திருமதி.என்.கே.ஸ்ரீபிரியாலக்ஷ்மி 38.திருமதி.ஜெசிந்தா கலைச்செல்வி 39.திருமதி.ஜெ.பாரதி 40.திருமதி.ஆல்பியா செர்லி பாமா		• திரு.ட்டி.ஈ.திருநாவுக்கரசு • திரு.எஸ்.முருகேசன் • திரு.எம்.விக்டர் ஞானராஜ் • திரு.பி.சந்திரசேகர் • திரு.எம்.சீனிவாசமூர்த்தி • திரு.பி.சம்பத் • திரு.அருள்சாமி • திரு.எஸ்.எம்.நூருகுமுகமது • திரு.என்.முருகபூபதி • திரு.ஆர்.எம்.சுப்பரமணியன் • திரு.ஆர்.கோவிந்தராஜ் • திரு.வி.குமார் • திரு.வி.சந்திரசேகர் • திரு.எஸ்.ரெங்கசாமி • **திரு.எஸ்.கதிர்வேலு,(இ.பொ.து)** • **திரு.வி.என்.அமுதநேசன்(இ.பொ.து)** • **திரு.சி.அசோகன்(இ.பொ.து)** • திரு.என்.அபுபக்கர் • திரு.எ.விஜயபாஸ்கர் • திரு.கே.முருகேசன் • திரு.எஸ்.செபாஸ்டின் அமல்ராஜ் • திரு.என்.பாண்டியன் • திரு.ஆர்.பூபதி • திரு.எ.கோபாலகிருஷ்ணன் • திரு.பி.பால்ராஜ் • திரு.என்.எஸ்.லட்சுமிபதி • திரு.எஸ்.தேவன் • திரு.சி.சோமசுந்தரம் • திரு.எஸ்.தனபால் • திரு.எஸ்.ஆர்.பாலசுப்பரமணி • திரு.எ.வி.மீனாட்சி சுந்தரம் • திரு.எ.என்.யோகநாத்பாபு • திருமதி.ஆர்.சரண்யகுமாரி • திரு.கே.பாண்டியன் • திரு.பி.வெங்கடேஷ்	27.11.1991 27.11.1991 26.11.1992 27.11.1992 30.11.1992 30.11.1992 06.01.1993 06.01.1993 06.01.1993 08.04.1993 08.04.1993 08.04.1993 11.05.1993 11.05.1993 11.05.1993 07.06.1993 01.03.1993 12.07.1995 27.07.1995 27.07.1995 27.05.1995 27.07.1995 03.08.1995 12.02.1996 12.02.1996 12.02.1996 09.02.1996 09.02.1996 08.03.1996 11.10.1997 03.08.1998 22.02.1999 27.09.2001

பின்வரும் உதவி பொறியாளர்கள் 5 ஆண்டு பணிமுடித்துள்ளார்கள். அதில் வரிசை எண்.13ல் உள்ள நபர் இளநிலை பொறியாளராக பணியாற்றிய காலத்தில் பட்டப்படிப்பு தேர்ச்சிப் பெற்றதால் அவரை உதவி பொறியாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டு அத்தேதி முதல் 3 ஆண்டு உதவி பொறியாளராக பணியாற்றியதை கருத்தில் கொண்டு தெரிவுப்பட்டியலில் அவரது பெயர் பணி விதிகளின் படி சேர்க்கப்பட்டுள்ளது.

வ. எண்.	உதவி பொறியாளரின் பெயர் திருவாளர்கள்	உதவி பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்	குறிப்புரை
01.	சி.லரான்ஸ், உ.பெ., மண்டலம்–2	30.06.1993	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண். இ1/4831/08).

02	ஆர்.ஜெயக்குமார் சிங், உ.பொ. மழைநீர் வடிகால் துறை,	13.07.1995	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண். இ1/29193/08).
03	ஆர்.ராமசந்திரன், உ.பொ., மண்டலம்–8	12.11.1995	1) தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை இறுதியில் **கண்டனம்** என்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது (பொ.து.ந.க.எண். ஈ4/25726/2011) 2) தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண்.ஈ1/26750/2012)
04	எம்.பி.தணிகைவேலன், உ.பொ., மண்டலம்–9	02.05.2003	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண். இ1/12160/11).
05	ஆர்.எல்.தமிழன்பு, உ.பொ., மண்டலம்–4	22.11.2003	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
06	ஆர்.புருஷோத்தமன், உ.பொ., மண்டலம்–15	15.12.2003	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
07	பி.பசுபதி, உ.பொ., மண்டலம்–4	19.05.2004	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
08	நா.முருகவேல், உ.பொ., மண்டலம்–7	27.11.2004	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ4 /31303/12, ஈ1/26750/12)
09	எஸ்.குப்புராஜ், உ.பொ., மண்டலம்–8	07.05.2004	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனியர் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண். ஈ1/4363/09).
10	ஆர்.ஸ்ரீராமுலு, உ.பொ., மண்டலம்–8	02.06.2006	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
11	ஆர்.ராஜேந்திரன், உ.பொ., பனித்துறை	30.06.2006	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
12	ஆர்.கோவிந்தராஜ், உ.பொ., மண்டலம்–3	01.06.2007	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
13	பி. ஞானசந்திரன், உ.பொ. மண்டலம்–9	12.04.2009	பட்டியலில் சேர்க்க தகுதிப் பெற்றவர்

மேற்படி பட்டம் பெற்ற உதவி பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.1, 2, 3, 4, 8ல் உள்ள உதவி பொறியாளர்கள் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதி 1983ன்படி பிரிவு 9(2)ன் கீழ் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், தனியர்களின் பெயரினை தெரிவு பட்டியலில் இருந்து சேர்க்காமல் ஒத்திவைக்கலாம். மேற்படி பட்டம் பெற்ற உதவி பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.9ல் உள்ள உதவி பொறியாளர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதால் தனியரின் பெயரினை தெரிவு பட்டியலில் இருந்து சேர்க்காமல் ஒத்திவைக்கலாம்.
பின்வரும் இளநிலை பொறியாளர்கள் 10 ஆண்டுகள் பணிமுடித்துள்ளார்கள்.

வ. எண்.	இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள்	இளநிலை பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்	குறிப்புரை
01	சி.சேகர், இ.பொ., மண்டலம்–10	30.06.1979	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ1/26750/12)
02	ஜி.செல்வரங்கம், இ.பொ., மண்டலம்–8	29.06.1979	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
03	கே.மனோகரன், இ.பொ., கட்டடத்துறை	17.08.1979	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்.
04	டி.ஆர்.பாண்டுரங்கன், இ.பொ., மண்டலம்–8	23.10.1979	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார்.
05	வி.கிருஷ்ணமூர்த்தி,இ.பொ. பேருந்து சாலைத்துறை	01.11.1979	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
06	டி.பூபாலன், இ.பொ., மண்டலம்–3	05.02.1980	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
07	பிட்டி.ஓம்காரம், இ.பொ., மண்டலம்–5	26.11.1980	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
08	பி.ராஜேந்திரன், இ.பொ., மண்டலம்–5	27.02.1981	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
09	வி.ஸ்ரீனிவாச மூர்த்தி, இ.பொ., மண்டலம்–6	05.01.1984	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
10	டி.செல்லையா தர்மராஜ், இ.பொ., மண்டலம்–7	24.05.1984	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
11	எ.மோகன், இ.பொ., மண்டலம்–2	15.09.1984	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
12	கே.அமிர்தலிங்கம், இ.பொ., மண்டலம்–9	15.09.1984	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண். ஈ1/18049/12)
13.	வி.குணசேகரன்,இ.பொ, இயந்திர பொறியியல் துறை.	17.09.1984	28.02.2013 அன்று வயது முதிர்வு ஓய்வில் சென்றுள்ளார்.
14.	எஸ்.ஆர்.ஜெகநாதன், இ.பொ., மண்டலம்–2	20.09.1984	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண்.ஈ4/12502/11)

15.	எஸ்.தேவபாலன், இ.பொ., மண்டலம்–5	20.09.1984	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
16.	ஜி.அகோர மூர்த்தி, இ.பொ., மண்டலம்–1	08.01.1988	தனியர் முன்பு பணிபுரிந்த இராணிப்பேட்டை நகராட்சியில் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு நிலுலையில் உள்ளது. எனவே தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதியற்றவராகிறார்.
17.	என்.பத்மநாபன், இ.பொ., மண்டலம்–3	27.009.1989	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
18.	எம்.ஆனந்தகுமார், இ.பொ., மண்டலம்–2	13.08.1990	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
19.	எம்.சங்கரபாபு, இ.பொ., கட்டடத்துறை	16.08.1990	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
20.	கே.வசந்தகுமார், இ.பொ., மண்டலம்–1	03.04.1991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
21.	நா.பா.ஹரிநாத், இ.பொ., மழைநீர் வடிகால் துறை	02.12.1991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
22.	டி.இ.திருநாவுக்கரசு, இ.பொ., மண்டலம்–3	02.12.1991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
23.	எஸ்.முருகேசன், இ.பொ., மண்டலம்–2	29.11.19991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
24.	எம்.விக்டர் ஞானராஜ், இ.பொ.,மண்டலம்–7	27.11.1991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
25.	பி.சந்திரசேகர், இ.பொ., மண்டலம்–3	27.11.1991	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
26.	எம்.ஸ்ரீனிவாச மூர்த்தி, இ.பொ.,மண்டலம்.–6	26.11.1992	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
27.	பி.சம்பத், இ.பொ., மண்டலம்–8	27.11.1992	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
28.	எ.அருள்சாமி, இ.பொ., மண்டலம்–8	30.11.1992	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
29.	எஸ்.எம்.நூகு முகமது, இ.பொ., மண்டலம்–7	30.11.1992	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ1/18050/12)
30.	என்.முருகபூபதி, இ.பொ., மண்டலம்–8	06.01.1993	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை இறுதியில் **கண்டனம்** என்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது (பொ.து.ந.க.எண். ஈ4/25726/2011) தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் இரு நிகழ்வுகளில் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார் (பொ.து.ந.க.எண். இ1/29193/08 மற்றும் பொ.து.ந.க.எண். ஈ4/31303/12)
31.	ஆர்.எம்.சுப்பிரமணியன், இ.பொ., மழைநீர் வடிகால் துறை	06.01.1993	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ1/9420/07)

32.	ஆர்.கோவிந்தராஜு, இ.பொ., மண்டலம்–3	06.01.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
33.	வி.குமார், இ.பொ., மண்டலம்–13	08.04.1993	தனியர் அளவுக்கு அதிகமாக சொத்து சேர்ததது சம்மந்தமாக மாநில விழிப்பு துறை மற்றும் லட்ச ஒழிப்பு துறையில் விசாரணை நிலுவையில் உள்ளது.
34.	வி.சந்திரசேகர், இ.பொ., மண்டலம்–9	08.04.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
35.	எஸ்.ரங்கசாமி, இ.பொ., மண்டலம்–3	08.04.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
36.	எஸ்.கதிர்வேலு, இ.பொ., இயந்திர பொறியியல் துறை	11.05.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
37.	வி.என்.அமுதநேசன், இ.பொ., இயந்திர பொறியியல் துறை	11.05.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
38.	சி.அசோகன், இ.பொ., இயந்திர பொறியியல் துறை.	11.05.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
39.	என்.அபுபக்கர், இ.பொ., மண்டலம்–6	07.06.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
40.	எ.விஜயபாஸ்கர், இ.பொ., மண்டலம்–1	01.03.1993	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர் (தற்போது உதவி பொறியாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளளார்.)
41.	கே.முருகேசன், இ.பொ., மண்டலம்–7	12.07.1995	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார்.(பொது.ந.க.எண்.ஈ4/37751/12)
42.	எஸ்.சபஸ்டின் அமுல்ராஜ், இ.பொ.,மண்டலம்–3	27.07.1995	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
43.	என்.பாண்டியன், இ.பொ., மண்டலம்–10	27.07.1995	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
44.	ஆர்.பூபதி, இ.பொ., மண்டலம்–4	27.07.1995	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ1/11032/11)
45.	எ.கோலகிருஷ்ணன், இ.பொ., மண்டலம்–10	27.07.1995	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
46.	பி.பால்ராஜ், இ.பொ., மண்டலம்–9	03.08.1995	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
47.	என்.எஸ்.லட்சுமிபதி, இ.பொ., மண்டலம்–2	12.02.1996	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
48.	எஸ்.தேவன், இ.பொ., மண்டலம்–1	12.02.1996	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
49.	சி.சோமசுந்தரம், இ.பொ., மண்டலம்–5	12.02.1996	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
50.	எஸ்.தனபால், இ.பொ., மண்டலம்–5	09.02.1996	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
51.	எஸ்.ஆர்.பாலசுப்பிரமணி. இ.பொ.,மண்டலம்–4	09.02.1996	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
52.	எ.வி.மீனாட்சி சுந்தரம், இ.பொ.,மே மண்டலம்–2	08.03.1996	தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4 நிலை பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1983ன்கீழ் 9 (2)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் தெரிவுப்பட்டியலில் சேர்க்க தனியர் தகுதியற்றவராகிறார். (பொ.து.ந.க.எண்.ஈ1/42753/10)

53.	எ.என்.யோகநாத்பாபு, இ.பொ.,மண்டலம்–9	11.10.1997	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
54.	ஆர்.சரண்யாகுமாரி, இ.பொ.,கட்டடத்துறை	03.08.1998	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
55.	கே.பாண்டியன், இ.பொ., மண்டலம்–7	22.02.1999	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்
56.	எச்.ஹார்டின் ரோசாரியா, இ.பொ,மண்டலம்–12	31.05.2001	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர் (தற்போதுஉதவி பொறியாராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்)
57.	பி.வெங்கடேஷ், இ.பொ., மண்டலம்–7	27.09.2001	பட்டியலில் சேர்க்க தகுதிப்பெற்றவர்

மேற்படி பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.1, 4, 12, 14, 16, 29, 30, 31, 33, 41, 44, 52ல் உள்ள இளநிலை பொறியாளர்கள் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதி 1983ன்படி பிரிவு 9(2)ன் கீழ் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், தனியர்களின் பெயரினை தெரிவு பட்டியலில் இருந்து சேர்க்காமல் ஒத்திவைக்கலாம்.

உதவி செயற் பொறியாளர் பதவி உயர்விற்கு 3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, கடந்த மூப்பப்பட்டியலில் **பட்டம் பெற்ற உதவி பொறியாளருடன்** தெரிவுப் பட்டியல் முடிவடைந்துள்ளதால், இந்த பட்டியல் ஆண்டில் 01.06.2012 மைய நாளில் தெரிவுப் பட்டியலில் முதலில் பட்டயம் பெற்ற ஒரு இளநிலை பொறியாளர் என்ற நிலையில் தெரிவுப்பட்டியல் துவக்கப்பட்டு, பணிமூப்பு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பின்வருமாறு அமைகிறது.

1.06.2012ஐ மைய நாளாகக் கொண்டு 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் தயாரிக்கப்படும் உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

வரிசை எண்.	இளநிலை / உதவி பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்)	துறை / மண்டலம்	பட்டயம் / பட்டம்
01.	ஜி.செல்வரங்கம், இளநிலை பொறியாளர்,	மண்டலம்–8	பட்டயம்
02.	ஆர்.எல்.தமிழன்பு, உதவி பொறியாளர்	மண்டலம்–4	பட்டம்
03.	ஆர்.புருஷோத்தமன், உதவி பொறியாளர்	மண்டலம்–15	பட்டம்
04.	பி.பசுபதி, உதவி பொறியாளர்	மண்டலம்–4	பட்டம்
05.	கே.மனோகரன், இளநிலை பொறியாளர்	கட்டடத்துறை	பட்டயம்
06.	ஆர்.ஸ்ரீராமுலு, உதவி பொறியாளர்	மண்டலம்–8	பட்டம்
07.	ஆர்.ராஜேந்திரன், உதவி பொறியாளர்	பணித்துறை	பட்டம்
08.	ஆர்.கோவிந்தராஜ், உதவி பொறியாளர்	மண்டலம்–3	பட்டம்
09.	வி.கிருஷ்ணமூர்த்தி, இளநிலை பொறியாளர்	பேருந்து சாலைத்துறை	பட்டயம்
10.	பி. ஞானசந்திரன், உதவி பொறியாளர்	மண்டலம்–9	பட்டம்
11.	நபர் இல்லை		பட்டம்
12.	நபர் இல்லை		பட்டம்
13.	டி.பூபாலன், இளநிலை பொறியாளர்	மண்டலம்–3	பட்டயம்
14.	நபர் இல்லை		பட்டம்
15.	நபர் இல்லை		பட்டம்
16.	நபர் இல்லை		பட்டம்
17.	பிட்டி.ஓம்காரம், இளநிலை பொறியாளர்	மண்டலம்–5	பட்டயம்
18.	நபர் இல்லை		பட்டம்
19.	நபர் இல்லை		பட்டம்
20.	நபர் இல்லை		பட்டம்
21.	பி.ராஜேந்திரன், இளநிலை பொறியாளர்	மண்டலம்–5	பட்டயம்
22.	நபர் இல்லை		பட்டம்
23.	நபர் இல்லை		பட்டம்
24.	நபர் இல்லை		பட்டம்
25.	வி.ஸ்ரீனிவாச மூர்த்தி, இளநிலை பொறியாளர்	மண்டலம்–6	பட்டயம்
26.	நபர் இல்லை		பட்டம்
27.	நபர் இல்லை		பட்டம்
28.	நபர் இல்லை		பட்டம்

29.	டி.செல்லையாதர்மராஜ், இளநிலை பொறியாளர்	மண்டலம்–7	பட்டயம்
30.	நபர் இல்லை		பட்டம்
31.	நபர் இல்லை		பட்டம்
32.	நபர் இல்லை		பட்டம்
33.	எ.மோகன், இளநிலை பொறியாளர்	மண்டலம்–2	பட்டயம்
34.	நபர் இல்லை		பட்டம்
35.	நபர் இல்லை		பட்டம்
36.	நபர் இல்லை		பட்டம்
37.	எஸ்.தேவபாலன், இளநிலை பொறியாளர்	மண்டலம்–5	பட்டயம்
38.	நபர் இல்லை		பட்டம்
39.	நபர் இல்லை		பட்டம்
40.	நபர் இல்லை		பட்டம்
41.	என்.பத்மநாபன், இளநிலை பொறியாளர்	மண்டலம்–3	பட்டயம்
42.	நபர் இல்லை		பட்டம்
43.	நபர் இல்லை		பட்டம்
44.	நபர் இல்லை		பட்டம்
45.	எம்.ஆனந்தகுமார், இளநிலை பொறியாளர்	மண்டலம்–2	பட்டயம்
46.	நபர் இல்லை		பட்டம்
47.	நபர் இல்லை		பட்டம்
48.	நபர் இல்லை		பட்டம்
49.	எம்.சங்கரபாபு, இளநிலை பொறியாளர்	கட்டடத்துறை	பட்டயம்
50.	நபர் இல்லை		பட்டம்
51.	நபர் இல்லை		பட்டம்
52.	நபர் இல்லை		பட்டம்
53.	கே.வசந்தகுமார், இளநிலை பொறியாளர்	மண்டலம்–1	பட்டயம்
54.	நபர் இல்லை		பட்டம்
55.	நபர் இல்லை		பட்டம்
56.	நபர் இல்லை		பட்டம்
57.	நாபாஹரிநாத், இளநிலை பொறியாளர்	மழைநீர் வடிகால் துறை	பட்டயம்
58.	நபர் இல்லை		பட்டம்
59.	நபர் இல்லை		பட்டம்
60.	நபர் இல்லை		பட்டம்
61.	டி.இ.திருநாவுக்கரசு, இளநிலை பொறியாளர்	மண்டலம்–3	பட்டயம்
62.	நபர் இல்லை		பட்டம்
63.	நபர் இல்லை		பட்டம்
64.	நபர் இல்லை		பட்டம்
65.	எஸ்.முருகேசன்,இளநிலைபொறியாளர்	மண்டலம்–2	பட்டயம்
66.	நபர் இல்லை		பட்டம்
67.	நபர் இல்லை		பட்டம்
68.	நபர் இல்லை		பட்டம்
69.	திரு.எம்.விக்டர் ஞானராஜ்	மண்டலம்–7	பட்டயம்
70.	நபர் இல்லை		பட்டம்
71.	நபர் இல்லை		பட்டம்
72.	நபர் இல்லை		
73.	பி.சந்திரசேகர்	மண்டலம்–3	பட்டயம்
74.	நபர் இல்லை		

மேலும், உதவி செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவு பட்டியல் தயாரிக்கும் நிகழ்வில் உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கிடையே 5 ஆண்டுகள் பணி முடித்த உதவி பொறியாளர் மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்த இளநிலை பொறியாளர்கள் இவர்களுக்கிடையே (3:1 என்ற விகிதாச்சாரத்தின் படி) தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். இந்நிகழ்வில் 5 ஆண்டுகள் பணி முடித்த முழு தகுதி பெற்ற உதவி பொறியார்கள் 7 நபர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கு தகுதி பெறுகின்றனர். மேலும் 10 ஆண்டுகள் பணி முடித்த முழு தகுதி பெற்றுள்ள இளநிலை பொறியாளர்கள் 19 நபர்கள் மட்டுமே உள்ளனர். உதவி செயற் பொறியாளர் பதவியில் நிரப்பபட வேண்டிய காலிப்பணியிடம் 74 ஆகும். உதவி

செயற்பொறியாளர் பதவிக்கு உதவி / இளநிலை பொறியாளர்கள் 26 நபர்கள் மட்டுமே தகுதிபெறுகின்றார்கள். இதனடிப்படையில் 3:1 என்ற விகிதாச்சாரத்தின் படி உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்ட அனைத்து காலிப்பணியிடங்களையும் நிரப்ப இயலாது என்பதால், கீழ்கண்டவாறு உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

01.	ஜி.செல்வரங்கம், இளநிலை பொறியாளர்,	பட்டயம்
02.	ஆர்.எல்.தமிழன்பு, உதவி பொறியாளர்	பட்டம்
03.	ஆர்.புருஷோத்தமன், உதவி பொறியாளர்	பட்டம்
04.	பி.பசுபதி, உதவி பொறியாளர்	பட்டம்
05.	கே.மனோகரன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
06.	ஆர்.ஸ்ரீராமுலு, உதவி பொறியாளர்	பட்டம்
07.	ஆர்.ராஜேந்திரன், உதவி பொறியாளர்	பட்டம்
08.	ஆர்.கோவிந்தராஜ், உதவி பொறியாளர்	பட்டம்
09.	பி. ஞானசந்திரன், உதவி பொறியாளர்	பட்டம்
10.	வி.கிருஷ்ணமூர்த்தி, இளநிலை பொறியாளர்	பட்டயம்
11.	டி.பூபாலன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
12.	பிட்டி.ஓம்காரம், இளநிலை பொறியாளர்	பட்டயம்
13.	பி.ராஜேந்திரன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
14.	வி.ஸ்ரீனிவாச மூர்த்தி, இளநிலை பொறியாளர்	பட்டயம்
15.	டி.செல்லையா தர்மராஜ், இளநிலை பொறியாளர்	பட்டயம்
16.	எ.மோகன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
17.	எஸ்.தேவபாலன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
18.	என்.பத்மநாபன், இளநிலை பொறியாளர்	பட்டயம்
19.	எம்.ஆனந்தகுமார், இளநிலை பொறியாளர்	பட்டயம்
20.	எம்.சங்கரபாபு, இளநிலை பொறியாளர்	பட்டயம்
21.	கே.வசந்தகுமார், இளநிலை பொறியாளர்	பட்டயம்
22.	நாபாஹரிநாத், இளநிலை பொறியாளர்	பட்டயம்
23.	டி.இ.திருநாவுக்கரசு, இளநிலை பொறியாளர்	பட்டயம்
24.	எஸ்.முருகேசன்,இளநிலைபொறியாளர்	பட்டயம்
25.	எம்.விக்டர் ஞானராஜ், இளநிலை பொறியாளர்	பட்டயம்
26.	பி.சந்திரசேகர், இளநிலை பொறியாளர்	பட்டயம்

எனவே கீழ்காணும் இனங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. 5 ஆண்டு பணி முடித்த உதவி பொறியாளர் மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்த இளநிலை பொறியாளர்களைக்கொண்ட 3:1 என்ற விகிதாச்சாரத்தின்படி 26 நபர்கள் கொண்ட 2012–13ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும் மற்றும் ரூ. 15600–39100+ தர ஊதியம் 5400 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் உதவி செயற் பொறியாளர் பதவியில் தற்போது காலியாக உள்ள பணியிடத்திலும் மற்றும் வரும்காலங்களில் உருவாகவுள்ள காலிப்பணியிடத்திலும் பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,
2. வரிசை எண்.1, 2, 3, 4, 8ல் உள்ள உதவி பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பதாலும் மற்றும் வரிசை எண்.9ல் உள்ள உதவி பொறியாளர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், தனியர்களின் பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது என்பதனை தெரிவிக்கவும் மேலும் தனியர்களின் ஒழுங்கு நடவடிக்கை மீது வழங்கப்படும் இறுதி ஆணையின் முடிவினை பொறுத்து தகுதியின் அடிப்படையில் தனியர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தனியர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும்,
3. வரிசை எண்.1, 4, 12, 14, 16, 29, 30, 31, 33, 41, 44, 52ல் வரை உள்ள இளநிலை பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பதால் தனியர்களின் பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது என்பதனை தெரிவிக்கவும் மேலும் தனியர்களின் ஒழுங்கு நடவடிக்கை மீது வழங்கப்படும் இறுதி ஆணையின் முடிவினை பொறுத்து தகுதியின் அடிப்படையில் தனியர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தனியர்களுக்கு தெரிவிக்கவும்,

4. 08.02.2013 நாளிட்ட மனுவில் 15 உதவி பொறியாளர்கள் தாங்கள் 2009ம் ஆண்டு முதல் உதவி பொறியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், பொதுப்பணிதுறை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம் – 1 மற்றும் 2ல் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்றும், தாங்கள் பலர் வயது முதிர்ந்த பின் (40 வயது கடந்தபின்) பணியில் சேர்ந்ததாகவும், எஞ்சிய பணிக்காலம் குறைந்த ஆண்டுகளே இருப்பதாலும், உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையருக்கப்பட்டுள்ள 5 ஆண்டு பணிகாலம் பெற்றிருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து தங்களுக்கு உதவி செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கும்படி விடுத்துள்ள கோரிக்கை குறித்து உரிய முடிவுவெடுக்கவும்.
5. 03.01.2013 நாளிட்ட மனுவில் மூத்த பொறியாளர்கள் சிலர் இளநிலைப்பொறியாளர் பதவியில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அனுபவம் பெற்ற இளநிலைப்பொறியாளர் போதிய நபர்கள் இருப்பதாகவும் தாங்கள் ஓரிரு ஆண்டுகளில் வயது முதிர்வு ஓய்வு பெறவிருப்பதாலும் தங்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதே கருத்தை முன்வைத்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ‘‘விதிகளை தளர்த்தி தகுதியிருப்பின் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை’’ என மேற்குறிப்பிட்டுள்ளார்.
6. உதவி செயற்பொறியாளர் பதவியானது சென்னை மாநகராட்சி பணி விதிகளில் வகுப்பு–2ன் கீழ் வருவதால், சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவியில் அதிக அளவில் காலிப்பணியிடங்கள் ஏற்பட்டுள்ளதால் இந்நிகழ்வை சிறப்பு நிகழ்வாக கருதி இந்தபதவியின் அவசியத்தை கருதி பணிக்காலத்தகுதியை தளர்வு மற்றும் 3:1 என்கிற விகிதாரச்சார முறையை தளர்வு செய்து 10 ஆண்டு பணிமுடித்த இளநிலை பொறியாளர்களுக்கு விதி தளர்வுகள் செய்வது தொடர்பாக விவாதித்து முடிவுவெடுத்து இதுதொடர்பாக அரசிடம் ஆணைகள் பெற்று உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கவும்.

எனவே, இனம் 1 முதல் 6 வரை உள்ள குறிப்புகளுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நியமனகுழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘தற்போது உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் அதிகமாக உள்ளதால் தற்போதைய விதிகளின்படி 3:1 விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு பெற தகுதி உள்ள 9 உதவி பொறியாளர்களுக்கும் 19 இளநிலை பொறியாளர்களுக்கும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கவும் மீதமுள்ள 48 நபர்களுக்கு காலிப்பணியிடங்களை நிரப்ப அவசரம் மற்றும் அவசியம் கருதி இம்முறை மட்டும் 3:1 விகிதாச்சார முறையினை தளர்வு செய்து 10 ஆண்டுகள் பணிமுடித்த இளநிலை பொறியாளர்களை கொண்டு அரசின் ஒப்புதல் பெற்றபின் பதவி உயர்வு வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

மி.து.ந.க.எண்.அ1/ 9108/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்23.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.304/2013 பொருள் எண்.127

முறைப்பகுப்பாய்நர் தெரிவு பட்டியல்

சென்னை மாநகராட்சி மின்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கணிப்பொறி மையத்தில் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) உள்ளது. முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி சென்னை மாநகராட்சி பணிவிதிகளில் வகுப்பு–2ன் கீழ் வருவதால் இப்பணியிடத்தை பதவி உயர்வு மூலம் நிரப்பும் அதிகாரம் மன்றம் பெற்றுள்ளது.

இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600–39100 +5400 தர ஊதியம் ஆகும். இப்பதவிக்கு மைய நாள்.01.09.2012 ஆகும்.

1) சென்னை மாநகராட்சியில் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடம் ---- 1
2) அரசாணை எண்.95, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.14.10.2012ன்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் –– 3
3) மொத்த பணியிடங்கள் –– 4
4) இந்தப் பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் –– 0
5) பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் –– 0
6) 5% விடுப்பு காலிப்பணியிடம் –– 0
7) தற்போது நிரப்பப்பட வேண்டிய காலிப்பணியிடம் –– 3

––––––––

8) நிகர காலிப்பணியிடம் 3

முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு அரசாணை எண்.339, (நிதி–ஊதியக்குழு) துறை, நாள்.26.08.2010ன்படி துணை விதிகள் கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

System Analyst (முறைப் பகுப்பாய்நர்) (Pre-revised scale Rs.8000-13,500)	நேரடி நியமனம் பதவி உயர்வு பணிமாற்று அடிப்படையில்	B.E. Computer Science/Information Technology (No experience required) (or) MCA/MSC(IT) with two years Experience in software. Must have served as Programmer in Corporation of Chennai for not less than 2 years and possess the required educational and technical qualification prescribed for direct recruitment. Must have served in State Government Service or State Public Sector undertakings as programmer for not less than 5 years.	15600–39100+5400 மைய நாள் 1st செப்டம்பர்

சென்னை மாநகராட்சியில் கணிப்பொறி மையத்தில் மட்டும் முறைப்பகுப்பாய்நர் பதவி மற்றும் நிகழ்ச்சி நிரலர் பதவிகள் உள்ளன. முறைப்பகுப்பாய்நர் பதவிக்கு ஊட்டப்பதவி நிகழ்ச்சி நிரலர் பதவி மட்டுமே. நிகழ்ச்சி நிரலர் பதவி வேறு துறையிலோ/மண்டலத்திலோ இல்லை. எனவே, முறைப்பகுப்பாய்நர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்ப சுற்றறிக்கை அனுப்பி விவரம் பெறப்படவில்லை.

நிகழ்ச்சி நிரலர் பதவியில் ஏற்பட்டுள்ள மூன்று காலிப் பணியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப தகுதியான நபரின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர்	தற்போது வகிக்கும் பதவி	பணியில் சேர்ந்த நாள்	கல்வித் தகுதி
1	செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி	நிகழ்ச்சி நிரலர் (Programmer)	11.04.2001	MCA, M.Sc(Maths)

செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, நிகழ்ச்சி நிரலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் நிகழ்ச்சி நிரலர் ஆக 11.4.2001 முதல் பணிநியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார். இவர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கையோ விசாரணையோ ஏற்படுத்தப்பட்டு நிலுவையில் இல்லை. தண்டணைகள் ஏதும் வழங்கப்பட்டு நிலுவையில் இல்லை.

முறைப்பகுப்பாய்நர் பதவி உயர்வு பெற செல்வி எம்.வி.கிருஷ்ணகுமாரி, நிகழ்ச்சி நிரலர் அவர்கள் அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார். மேலும், இவரைத் தவிர முறைப்பகுப்பாய்நர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை பதவி உயர்வின் மூலம் நிரப்ப தகுதியான நபர் சென்னை மாநகராட்சியில் எவரும் இல்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

எனவே, 01.09.2012ஐ மைய நாளிட்டு முறைப்பகுப்பாய்நர் பதவிக்கு ஒரு நபர் கொண்ட தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, நிகழ்ச்சி நிரலர்,
   கணிப்பொறி மையம்/மின்துறை.

எனவே, சென்னை மாநகராட்சியில் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவியில் ஏற்பட்டுள்ள 3 காலிப்பணியிடங்களில் தற்போது ஒரு நபர் மட்டும் கீழ்நிலைப் பதவியில் தகுதி பெற்றுள்ளதால் செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, நிகழ்ச்சி நிரலர், கணிப்பொறி மையம்/மின்துறை அவர்களின் பெயரை மட்டும் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள ஒரு நபர் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்க முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

2012–2013ஆம் ஆண்டிற்கான முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவியில் ஏற்பட்டுள்ள 3 காலிப்பணியிடங்களில் 1 காலிப்பணியிடத்தை மட்டும் தகுதியான 1 நபரை கொண்டு பதவி உயர்வின் மூலம் நிரப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.2.ந.க.எண்.இ1/ 845/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.305/2013 பொருள் எண்.128

ஒப்பம் – 2013–14 – மண்டலம்–2, பகுதி–4 மற்றும் 5, வார்டு–15 முதல் 21 வரை, ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் வழங்கிட ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பந்ததாரர் திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி

1.	பணியின் பெயர்	மண்டலம் 2, மணலி, வார்டு–15முதல் 21வரை துப்புரவு பணியாளர்களை கொண்டு குப்பைகளை அகற்றும் பணிக்கு (300 ஆட்கள் மூலம் 365 நாட்கள்)தனியார் நிறுவனம் மூலம் ஒப்பம்
2	மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள்	முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்: 15.02.2013 மன்றத்தின் தீர்மான எண்:163/2013 நாள்: 11.03.2013
3	திட்டக் குறியீட்டு எண்.	பொருந்தாது
4	ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு. அ) பணியின் செலவினம் ஆ) மேற்பார்வை செலவினம் இ) சில்லரை மேற்பார்வை செலவு ஈ) மற்ற எதிர்பாரா செலவு உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் மொத்தம்	ரூ. 3,24,00,000/– 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி ரூ. 3,24,00,000/– ரூ. ரூ. ரூ. ரூ. – ரூ.3,24,00,000/–
5	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	சென்னை மாநகராட்சி செய்தி மலர்:எண்.19.இதழ்.979 நாள்:14.03.2013
6	ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்	27/03/2013
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	01/04/2013
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.	மன்றத்தின் தீர்மான எண்: 163/2013 நாள்: 11.03.2013
9	பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு	பராமரிப்பு நிதியின் கீழ்
10	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	ஓர் ஆண்டு

இந்த பணிக்கு மன்ற தீர்மான எண்.163/2013 பொருள் எண் 13ன் படி 587 தொழிலாளர்களுக்கு செலவினத்தொகை 6,32,65,255/– தீர்மானம் பெறப்பட்டது. மண்டலம் – 2க்கு உட்பட்ட பகுதியானது வளர்ந்து வரும் பகுதியாக உள்ளதால் தற்சமயம் 300 தொழிலாளர்களுக்கு மட்டுமே ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் 4 நான்கு (downloaded from internet) ஒப்பங்கள் மட்டுமே பெறப்பட்டது.

ஒப்ப நாளான 01.04.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் குறித்த விவரம் கீழ் வருமாறு.

1) திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ்
2) திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர்
3) திருவாளர்.பெசிகாம் கார்போரேட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
4) திரு.பி.புருஷோத்தமன்

தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட நான்கு ஒப்பங்களில் இரண்டு ஒப்பந்ததாரர்களான திருவாளர்.அன்னை எர்த் மூவர்ஸ் மற்றும் திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர் ஆகிய இருவர் மட்டும் தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்திட தகுதி வாய்ந்தவர்களாக உள்ளார்கள்.

இந்த இரண்டு ஒப்பந்ததாரர்களில் திருவாளர்.அன்னை எர்த் மூவர்ஸ் அவர்கள் துப்புரவு பணியாளர்கள் வழங்கிட ஒரு நாளைக்கு ரூ.287/–ம் திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர்அவர்கள் துப்புரவு பணியாளர்கள் வழங்கிட ஒரு நாளைக்கு ரூ.290/– மட்டும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை மேலும் விலைகுறைப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது.இதன் பொருட்டு திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் நிறுவனம் துப்புரவு பணியாளர்கள் வழங்கிட மேலும் விலை குறைப்பு செய்து ரூ.286/– ஒரு நாளைக்கு பணி செய்திட சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள்.இதன் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்	பணியில் அலுவலக மதிப்பு	ஒப்பந்ததாரரி ன் ஒப்பத் தொகை	பேச்சுவார்த்தைக்கு பிறகு
1	திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ்	ரூ. 3,24,00,000/–	ரூ.3,14,26,500/–	ரூ.3,13,17,000/–

எனவே மண்டலம் – 2ல் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் வழங்குவதற்கு உண்டான ஒப்பத்தினை திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் அவர்களுக்கு 2012–2013ம் ஆண்டின் விலை விபரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத்தொகை ரூ.3,24,00,000/–ஐ விட குறைவான தொகையான ரூ.3,13,17,000/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வருவாய் மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.042013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.04.2013 அன்று தீர்மான எண். 186/2013, நாள். 22.04.2013 –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 214/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.
>
> “இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

ம.அ.2.ந.க.எண்.எச்1/ 846/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.306/2013 பொருள் எண்.129

ஒப்பம் – 2013–14 – மண்டலம்–2, பகுதி–4 மற்றும் 5, வார்டு–15 முதல் 21 வரை, ஒப்பந்த அடிப்படையில் சுகாதார பிரிவில் மலேரியா பணியாளர்கள் வழங்கிட ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பந்ததாரர் திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1.	பணியின் பெயர்:	மண்டலம் 2, மணலி, வார்டு–15 முதல் 21வரை மலேரியா பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணிக்கு (72 ஆட்கள் மூலம் 365 நாட்கள்) தனியார் நிறுவனம் மூலம் ஒப்பம்
2	மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள்	முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்: 08.03.2013 மன்றத்தின் தீர்மான எண்:168/2013 நாள்: 11.03.2013
3	திட்டக் குறியீட்டு எண்.	பொருந்தாது
4	ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு.	ரூ. 76,00,000/– 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி
	அ) பணியின் செலவினம்	ரூ. 76,00,000/–
	ஆ) மேற்பார்வை செலவினம்	ரூ. –
	இ) சில்லரை மேற்பார்வை செலவு	ரூ. –
	ஈ) மற்ற எதிர்பாரா செலவு	ரூ. –
	உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம்	ரூ. –
	மொத்தம்	ரூ.76,00,000/–
5	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	சென்னை மாநகராட்சி செய்தி மலர்:எண்.19.இதழ்.979 நாள்:14.03.2013
6	ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்	27/03/2013
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	01/04/2013
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்.	மன்றத்தின் தீர்மான எண்: 168/2013 நாள்: 11.03.2013
9	பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு	பராமரிப்பு நிதியின் கீழ்
10	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	ஓர் ஆண்டு

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் 3 மூன்று (downloaded from internet) ஒப்பங்கள் மட்டுமே பெறப்பட்டது.

ஒப்ப நாளான 01.04.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் குறித்த விவரம் கீழ் வருமாறு.

1) திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ்
2) திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர்
3) திருவாளர். திரு.டி.இளங்கோவன்

தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட மூன்று ஒப்பங்களில் இரண்டு ஒப்பந்ததாரர்களான திருவாளர்.அன்னை எர்த் மூவர்ஸ் மற்றும் திருவாளர்.தாஸ் சர்வீஸ் சென்டர் ஆகிய இருவர் மட்டும் தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்திட தகுதி வாய்ந்தவர்களாக உள்ளார்கள்.

இந்த இரண்டு ஒப்பந்ததாரர்களில் திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர் அவர்கள் மலேரியா பணியாளர்கள் வழங்கிட ஒரு நாளைக்கு ரூ.285/–ம் திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ்அவர்கள் மலேரியா பணியாளர்கள் வழங்கிட ஒரு நாளைக்கு ரூ.287/– மட்டும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை மேலும் விலைகுறைப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர் நிறுவனம் மலேரியா பணியாளர்கள் வழங்கிட மேலும் விலை குறைப்பு செய்து ரூ.283/– என ஒரு நாளைக்கு பணி செய்திட சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள். இதன் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர்	பணியில் அலுவலக மதிப்பு	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை	பேச்சுவார்த்தைக்கு பிறகு
1	திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர்	ரூ. 76,00,000/–	ரூ.74,89,800/–	ரூ.74,37,240/–

எனவே மண்டலம் – 2ல் ஒப்பந்த அடிப்படையில் மலேரியா பணியாளர்கள் வழங்குவதில் உண்டான ஒப்பத்தினை திருவாளர். தாஸ் சர்வீஸ் சென்டர் அவர்களுக்கு 2012–2013ம் ஆண்டின் விலை விபரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத்தொகை ரூ.76,00,000/–ஐ விட குறைவான தொகையான ரூ.74,37,240/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழுக்கள்(பொது சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண்.49/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.04.2013 அன்று தீர்மான எண். 217/2013, நாள்.23.04.2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.XI.ந.க.எண்.பி3/2951/2012

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.307/2013 பொருள் எண்.130

தானப்பத்திரம்

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் செயற்பொறியாளர், மண்டலம்–11 அவர்களை கோட்டம்–143, மண்டலம்–11ல் நொளம்பூர் கிராமம் புல எண்.85ல் அமைந்துள்ள தனியார் மனைப் பிரிவில் திரு.சி.சுரேஷ் மற்றும் சிலர் ஆகியோருக்கு சொந்தமான மனை எண்.8 தொடர்பாக பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பத்தில் பரிசீலனை தொடர்பாக இம்மனையை சென்றடையும் 33 அடி தனியார் சாலை நிலையைக் குறித்தும் மேற்படி சாலை சென்னை மாநகராட்சியால் பராமரிப்பில் உள்ளதா என்றும் கேட்கப்பட்டிருந்தது. இது குறித்து மண்டலம்–11, சென்னை மாநகராட்சி மூலம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மேற்படி சாலை தனியார் சாலை நிலமாக உள்ளது என்றும், மேற்படி சாலையின் அகலம் மற்றும் அணுகு சாலையின் விவரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனை எண்.8 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் இருந்து பிரிக்கப்பட்ட மனை ஆதலால் ஏற்கனவே சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மனை முறைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் முறைப்படுத்தும் அனுமதி எண்.008962 நாள் 10.01.2002 வாயிலாக முறைப்படுத்தப்பட்டுள்ளது.

திரு.சி.சுரேஷ் மற்றும் சிலர் நொளம்பூர் கிராமம், புல எண்.85ல் அமைந்துள்ள தனியார் சாலை நிலத்தை தானப் பத்திரம் மூலமாக ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு நில ஒப்படைப்பு செய்வதற்கு இசைவு தெரிவித்துள்ளார்.

மேற்படி தனியார் சாலை நிலத்தின் பரப்பளவு 627 சதுரமீட்டர் ஆகும். மனுதாரரின் கோரிக்கையை ஏற்று இந்த சாலை நிலத்தினை சென்னை மாநகராட்சி தானப் பத்திரம் மூலம் எடுத்துக் கொள்வதற்கு 11வது மண்டல வார்டு குழுவின் தீர்மானம் (தீர்மான எண்.367 நாள்:15.04.2013) பெறப்பட்டுள்ளது. இச்சாலையை மேம்படுத்துவதற்கு தேவையான தோராய அபிவிருத்திக் கட்டணமான ரூ.4,79,000/-ஐ மனுதாரர் சென்னை மாநகராட்சியிடம் செலுத்துவதற்கு இசைவு அளித்துள்ளார்.

எனவே ,

1. மனுதாரர் திரு.சி.சுரேஷ் மற்றும் சிலர் மூலம் 627 சதுரமீட்டர் அளவு சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானப் பத்திரம் மூலம் பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட இடத்திற்கு சாலை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தேவையான தொகை ரூ.4,79,000/-ஐ மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்,
3. தானமாக பெறப்படும் இந்நிலத்தினை மாமன்ற ஒப்புதலுக்கு பின்னர் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தெரிவிக்கவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 10.04.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.04.2013 அன்று தீர்மான எண்.12/2013–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பா.து.ந.க.எண்./568/2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.308/2013 பொருள் எண்.131

தொழிற் நுட்ப பயணம் – தெற்காசிய நகரங்களில் மிக சிறந்த போக்குவரத்து அமைப்பு மற்றும் அதன் செயலாக்கம் பற்றிய பயண பயிலரங்கத்தில சென்னை மாநகராட்சியின் பொறியாளர்கள் பங்கு பெறுவதற்கு அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி.

போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கழகத்தினால் (ITDP) பன்னாட்டு போக்குவரத்து மேம்பாடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் தொண்டு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் சென்ற ஆண்டுகளில் பல அரசு நிறுவனங்களுக்கு குறிப்பாக சென்னை மாநகராட்சியில் எல்லைக்குட்பட்ட போக்குவரத்து மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தது.

ITDP நிறுவனம் பூனே மற்றும் சென்னையில் 4.02.2013 முதல் 8.02.2013 வரை மாநகராட்சி பொறியாளர்களுக்கு தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் சிறந்த பயிற்சி பட்டரை நடத்தியது. இதன் தொடர்ச்சியாக ITDP சென்னை மாநகராட்சியில், பணிபுரியும் பணியாளர்களை தெற்காசிய நகரங்களான குவான்ஜோ, சென்ஜென், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நகரங்களுக்கு அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளது. குறிப்பாக இத்திட்டத்தின் மூலம் உலக அளவில் முதல் தர தெருக்கள் அமைக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் அவையங்களாக நகர பேருந்து துரித பயணம் (Bus Rapid Transit System). பொது மிதிவண்டி பகிர்ந்து கொள்ளும் திட்டம் (Public Cycle Sharing System) வெவ்வெறு பயண வழிமுறைகளின் ஒருங்கிணைப்பு (Inter Modal Integration), போக்குவரத்து நெருக்கடி இழப்புகள் மற்றும் வாகன நிறுத்த மேலாண்மை (Parking management and Congestion Pricing) ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி ஆனது 8 முதல் 10 நாட்கள் கால அளவு கொண்டதாகும்.

தற்போது சென்னை மாநகராட்சி பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் விரிவாக்கம் பெற்றுள்ளது. சமீபமாக 9 நகராட்சிகள், 8 நகர ஒன்றியம், 25 கிராம பஞ்சாயத்துகள் ஆகியவை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு 174 சதுர கிலோ மீட்டர் சுற்றளவாக இருந்த சென்னை மாநகராட்சி 426 சதுர கிலோ மீட்டர் விரிவாக்கப் பெற்றுள்ளது. இந்த விரிவாக்கத்தின் மூலம் பல வளர்ச்சிகள் அடைந்துள்ளது. மேலும் பல துறைகளில் வளர்ச்சி அடைய வேண்டியுள்ளது.

விரிவாக்கத்திற்கு பிறகு தற்போது சென்னை மாநகராட்சியில் பேருந்து சாலைகளின் நீளம் 353.94 கிலோ மீட்டர் உட்புற சாலைகள் 5563.06 கிலோ மீட்டர் கான்கிரீட் சாலைகள் சுமார் 3.68 கிலோ மீட்டர் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகளில் பூங்காக்கள், மத்திய சாலை தடுப்புகள், போக்குவரத்து சாலை சந்திப்பு தீவுகள் ஆகியவையும் மிகவும் சிறந்த முறையில் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் மேம்பாலதுறை, தரைப்பாலங்கள், ஆகாய நடைபாதைகள் ஆகியவைகளை நல்ல முறையில் அமைத்து கொடுத்து வருகிறது. இரயில் வண்டி பாதையை கடக்க வேண்டிய இடங்களில் மாநகராட்சி பாதாள நடைபாதை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மேம்பால துறையினால் அமைக்கப்பட்ட அனைத்து மேம்பாலங்களும் சம்பந்தப்பட்ட மண்டலங்களின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கட்டிட துறையினால் பள்ளி வளாகம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள், மின் எரியூட்டகம், பொது கழிப்பிடம், குப்பை மாற்று வளாகம், மருத்துவமனை, சுகாதாரமையம், குடும்ப கட்டுப்பாட்டு மையம், குழந்தைகள் மையம், 16ம் நாள் காரியமேடை, உடற்பயிற்சி மையம், பரிசோதனை மையம், வண்ணான் துறை, மாட்டுத்தொட்டி, வார்டு அலுவலகம், மண்டல அலுவலகம் ஆகிவை கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி அவ்வப்போது பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களது நிதியிலிருந்து சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி மேம்பாட்டிற்கு செலவிடப்படுகிறது. புராதான கட்டிடங்களான சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ரிப்பன் பில்டிங் மற்றும் விக்டோரியா மஹால் ஆகியவை சென்னை மாநகராட்சி கட்டிட துறையின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய புணரமைப்பு மான்ய நிதியின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மழைநீர் வடிகால்வாய் துறையின் மூலம் சென்னை மாநகராட்சியிலுள்ள கால்வாய்கள் அனைத்தும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 1660.31 கிலோ மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்களை சென்னை மாநகராட்சி பராமரிக்கிறது. மேலும் 31 கால்வாய்கள் பராமரிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துறையினரால் அன்றாடம் சுமார் 4500 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. இரவு நேரக் குப்பை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக வீடுவீடாக சென்று குப்பைகள் அகற்றும் பணியும் நடைப்பெற்று வருகிறது.

சென்னை மாநகராட்சி மின்துறையினரால் தெருவிளக்குகள் செவ்வனமே பராமரிக்கப்பட்டு வருகிறது. இயந்திர துறையின் மூலம் புதியதாக இயந்திரங்கள், குப்பை அகற்றும் வாகனங்கள் மற்றும் இதர வாகனங்கள் பராமரிப்பு பணியும், செவ்வனமே நடைபெற்று வருகிறது.

விரிவாக்கம் அமையப்பெற்ற சென்னை மாநகராட்சி, 15 மண்டல அலுவலகங்களில், மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், இளநிலை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்களால் அவர்களது மண்டலத்திற்குட்பட்ட கட்டிடங்கள், சாலைகள், மேம்பாலங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிடப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியின் தினந்தோறும் நடைபெறும் அத்தியாவசிய பணிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் வெவ்வேறு துறைகளிலிருந்து ஏழு பொறியாளர்கள் இந்த ITDPயின் தொழிற் நுட்ப பயணத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் 8 ஆண்டுகளுக்கு மேல் சென்னை மாநகராட்சியில் பணிக்காலம் உள்ளது. சாலை அமைப்பின் கட்டுமானம், வடிவமைப்பு மேலாண்மை போன்ற பிரிவுகளில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை உலகத்தர வரிசைக்கு உயர்த்த ஏதுவாய் அமைய ITDP நிறுவனம் மேற்கொள்ளும் இந்த தொழிற்நுட்ப பயணத்திற்கு கீழ்க்கண்ட ஏழு பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1. திருவாளர்கள்.ஆர்.ஜெயராமன், மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) பொ.
2 திருவாளர்கள்.டி.ராஜசேகர், செயற் பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை)
3 திருவாளர்கள்.எஸ்.ராஜேந்திரன், செயற் பொறியாளர் (மண்டலம்–7)
4 திருவாளர்கள்.எஸ்.சுதாகர், உ.செ.பொ. (பாலங்கள்)
5 திருவாளர்கள்.ஏ.எஸ்.முருகன், உ.செ.பொ (கட்டடம்)
6 திருவாளர்கள்.இரா. மனோகரன், செ.பொ (பேருந்து சாலைகள் துறை)
பணியிடம் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம்
7 திருவாளர்கள்.ஆர்.சீனிவாசன், செ.பொ. (பணித் துறை)
பணியிடம் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம்

எனவே,

1. தெற்காசிய நகரங்களில் நடைபெறும் இந்த தொழிற் நுட்ப பயிற்சி பயணம் மேற்கொள்ள மேலே தேர்வு செய்யப்பட்ட ஏழு பொறியாளர்கள் கலந்த கொள்ள அனுமதி வேண்டியும்,
2 இந்த பயிற்சி காலத்தை பணிக்காலமாக கருத வேண்டியும்,
3 இந்த ஏழு பொறியாளர்களின் தோராயப் பயண செலவு தொகை ரூபாய்.20,00,000/– சென்னை மாநகராட்சி ஏற்க அனுமதி வேண்டியும்,
4 இந்த செலவினத்தை சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான பயிற்சி கணக்கு தலைப்பு எண். 210–20–06–01 ல் மேற்கொள்ளவும்,
5. மேலும் மேற்கண்ட பொறியாளர்கள் வெளிநாடு செல்ல அரசின் அனுமதியை பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.இ5/16338 /2013

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.309/2013 **பொருள் எண்.132**

வரைவு துணை விதிகளில் திருத்தம் செய்ய அனுமதி

சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண். 753/81 நாள் 26.04.1981ல் பெறப்பட்ட தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கு சார்நிலை பணி வரைவு துணைவிதிகள் 2010 வரை பின்பற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் அப்போதைய நிர்வாக அமைப்பிற்கு ஏதுவாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு மன்றத் தீர்மான எண்45/2010 நாள் 28.01.2010 ல் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்களின் சார்நிலை வரைவு துணை விதிகள்–2009 க்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட வரைவு துணை விதிகள் சென்னை மாநகராட்சியில் 28.01.2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் மன்றத் தீர்மான எண் 188/2011 நாள் 29.06.2011 ன்படி நிர்வாக நலன் கருதி சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தப்பட்ட துணை விதிகளில் உரிமம் ஆய்வாளர் பதவிக்கு கீழ்கண்டவாறு நியமனமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப் பட்ட தகுதிகள்	ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள்	குறிப்பு
உரிமம் ஆய்வாளர்	1:1:3 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு மூலம் 12 ஆண்டுகள் பணி முடித்த ஒரு பட்டதாரி வரி வசூலிப்பவர் 12 ஆண்டுகள் பணி முடித்த ஒரு பட்டதாரி அல்லாத உதவியாளர் 3 பட்டதாரி உதவியாளர்கள்	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம் (10th – 12th – UG – PG) சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் மற்றும் தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி	ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4200 நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1ம் நாள்	உதவியாளர் மற்றும் வரி வசூலிப்பவர் பதவியிலிருந்து விருப்பத்தின் அடிப்படையில்

சென்னை மாநகராட்சியில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட உரிமம் ஆய்வாளர்களின் மொத்த பணியிடம் – 50, தற்போது அரசாணை எண். 95 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(எம்சி3) துறை நாள் 14.10.2012ன் மூலம் பெறப்பட்ட பணியிடம் – 52 மொத்தம் 102 ஆகும். அதில் தற்போது 58 காலிப்பணியிடங்கள் உள்ளது. தற்போது சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு அனைத்து மண்டலங்களிலும் களப்பணிகளை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் காலியாக உள்ள உரிமம் ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவது அவசியமாகிறது.

தற்போது பணிநியமன விதிகளின்படி உரிமம் ஆய்வாளர் பதவிக்கு 1 : 1 : 3 (12 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி வரி வசூலிப்பவர், 12 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாத உதவியாளர் மற்றும் பட்டதாரி உதவியாளர்) என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வின் மூலம் உரிமம் ஆய்வாளர் பதவி நிரப்பப்படவேண்டும். ஆகவே, இப்பதவியை ஏற்றுக்கொள்ளும் நபர்கள் சார் நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – 1 மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு நிரப்பப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பட்டதாரி அல்லாத உதவியாளர்களின் 03.01.2013 நாளிட்ட கடிதத்தில் பல ஆண்டுகள் பணிமுடித்து பின்னர் உதவியாளராக பதவி உயர்வு பெறும் தங்களுக்கு உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வுக்கு 12 ஆண்டுகள் உதவியாளராக பணிபுரிந்திருக்க வேண்டும் என்பது அதிகபடியான காலக்கெடுவாக உள்ளது அக்கால அளவை 5 ஆண்டுகளாக தளர்வு செய்யும்படி கோரிக்கை அளித்துள்ளார்கள்.

சென்னை மாநகராட்சி வரி வசூலிப்பாளர் சங்கத்தில் 13.02.2013 நாளிட்டு அளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் பல ஆண்டுகளாக வரி வசூலிப்பாளர்களாக எவ்வித பதவி உயர்வு இல்லாமல் 20 ஆண்டுகள் வரி வசூலிப்பாளர்களாக பணிபுரிபவர்களுக்கு எவ்விதி பதவி உயர்வும் இல்லாமல் ஒரே பதவி வகிப்பதால் தங்களுக்கும் உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க கோரியுள்ளார்கள்.

எனவே மேற்கண்ட கோரிக்கைகளின் அடிப்படையில் மன்றத் தீர்மான எண் 188/2011 நாள் 29.06.2011 ல் அனுமதி பெற்றுள்ள சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்களின் சார்நிலை வரைவு துணை விதிகளில் உள்ள வருவாய்த்துறையைச் சார்ந்த உரிமம் ஆய்வாளர் பதவிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நியமனமுறையில் கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ளலாம்.

உரிமம் ஆய்வாளர் பதவிக்கு நியமனமுறை மற்றும் தகுதிகள்

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப் பட்ட தகுதிகள்	ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள்	குறிப்பு
உரிமம் ஆய்வாளர்	**1:1:1:3 என்றவாறு கீழ்காணும் தகுதியுள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு மூலம் நியமிக்கலாம்** **8 ஆண்டுகள் வரி வசூலிப்பாளர் பதவியில் பணி முடித்த ஒரு பட்டதாரி அல்லாத வரி வசூலிப்பவர்** **5 ஆண்டுகள் வரி வசூலிப்பாளர் பதவியில் பணி முடித்த ஒரு பட்டதாரி வரி வசூலிப்பவர்** **3 ஆண்டுகள் பணி முடித்த ஒரு பட்டதாரி அல்லாத உதவியாளர்** **3 பட்டதாரி உதவியாளர்கள்**	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம் (10th – 12th – UG – PG) சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் மற்றும் தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி	ரூ.9300–34800 + நிலை ஊதியம் ரூ.4200 <u>நிர்ணய நாள்</u> ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1ம் நாள்	உதவியாளர் மற்றும் வரி வசூலிப்பவர் பதவியிலிருந்து விருப்பத்தின் அடிப்படையில்

மேற்கண்ட உரிமம் ஆய்வாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நியமன முறை விகிதாச்சாரங்களில் **(1:1:1:3)** குறிப்பிட்ட பிரிவில் தகுதியுள்ள நபர்கள் இல்லாத பட்சத்தில் மற்ற விகிதாச்சாரங்களில் உள்ள தகுதியுள்ள நபர்கள் மூலம் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும்.

உதாரணமாக (1) பட்டதாரி உதவியாளர்களில் தகுதியுள்ள நபர்கள் இல்லையெனில் ஏனைய பிரிவுகளில் உள்ள தகுதியான நபர்களைக்கொண்டு **1:1:1** என்ற விகிதத்தில் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும்.

(2) பட்டதாரி வரிவசூலிப்பாளர்களில் தகுதியான நபர் இல்லையெனில் ஏனைய மூன்று பிரிவுகளில் தகுதியான நபர்களைக்கொண்டு **1:1:3** என்ற விகிதாச்சாரத்தில் நிரப்பப்படும்.

(3) பட்டதாரி உதவியாளர்கள் மற்றும் பட்டதாரி வரிவசூலிப்பாளர்களில் தகுதியான நபர்கள் இல்லையெனில் ஏனைய இரண்டு பிரிவுகளில் உள்ள தகுதியான நபர்களைக்கொண்டு **1:1** என்ற விகிதாச்சாரத்தில் நிரப்பப்படும்.

அடுத்த வருட பட்டியல் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட **1:1:1:3** என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தகுதியான நபர்களைக்கொண்டு புதியதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

எனவே, கீழ்காணும் இனத்திற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

இனம் – அ உரிமம் ஆய்வாளர் பதவிக்கான நியமனமுறையில் மேற்கண்ட திருத்தங்கள் செய்து சென்னை மாநகராட்சியில் உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வுக்கு நடைமுறைப்படுத்தவும், அரசுக்கு அனுப்பவுள்ள சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் சார் நிலை பணியாளர்களுக்கான துணை விதிகளில் சேர்க்கவும்.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****